...ed as a News Paper in Sri lanka
விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banquet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E-Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2862)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 25 செவ்வாய்க்கிழமை (09.07.2013) பக்கங்கள் 20 ஓசை – 282

















# யுத்தம் முடிந்து நான்கு வருடங்கள் தமிழருக்கான தீர்வுதான் என்ன?

## கூட்டமைப்பு கட்சிகளிடம் கேட்கிறார் சிற்றம்பலம்



யுத்தம் நிறைவடைந்து நான்கு வருடங்களாகியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள ஐந்து கட்சிகளும், தமிழருக்கான தீர்வு எதுவென ஏன் கூறவில்லை. அத்துடன் தீர்வினையும் ஏன் முன்வைக்கவில்லை யென தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் கேள்வியெழுப்பியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை யாழ். ஊடக அமையத்தில் அவர் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கேள்வியெழுப் பியுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழர்களுக்கான தீர்வு சமஷ்டி ஆட்சியின் மூலம் கிடைக்குமே தவிர தனிநாட்டுக் கோரிக்கை தமிழர்களுக்கு தீர்வாக அமையாது. 13 ஆவது திருத்தத்தினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கையில் எடுத்து வைத்துக்கொண்டு மாகாணசபை அதிகாரம் குறித்து பேசு வது தமிழ் மக்களுக்கு பயனில்லாத ஒன்று. அத்துடன், அது ஆரோக்கிய மற்றதுமாகும். மாகாண சபை அதிகாரங்கள் வெறு மனே இருக்கின்ற பொழுது 19 ஆம் பக்கம் பார்க்க


## 13 ஆவது திருத்தத்தை நீக்க முயற்சி மேனனுடன் கூட்டமைப்பு பேச்சு

இலங்கைக்கு விஜயம் மேற் கொண்டிருக்கும் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனனை சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினர், இந்திய - இலங்கை ஒப் பந்தத்தின் அடிப்படையில் உரு வான 13 ஆவது சட்டத்திருத் தத்தை திருத்த இலங்கை அரசு மேற்கொள்ளும் முயற்சிகள் குறித்து கலந்துரையாடியுள்ள னர்.

இது குறித்து தமிழோசைக் குக் கருத்துத் தெரிவித்த கூட் டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், இந்திய - இலங்கை ஒப்பந்தம் தான், வடக்கிலும் கிழக்கிலும் உள்ள பிரதேசங்களை தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதி யாக வசித்து வந்த பூமியாக அங்கீகரித்தது என்ற அடிப்ப டையில், அந்தப் பகுதியில் தற் போது இலங்கை அரசு சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக மேனனிடம் கூறியதாகத் தெரி வித்தார்.

எனவே இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அனைத்து அம் சங்களும் நிறைவேற்றப்பட 19 ஆம் பக்கம் பார்க்க

## திருமுறிகண்டியில் கோர விபத்து; இரண்டு இராணுவத்தினர் உயிரிழப்பு



ஏ-9 வீதியில் திருமுறிகண்டிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற வீதி விபத்தில் இரண்டு இராணுவத்தினர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்தில் இராணுவக் கோப்ரல் ஒருவரும் படைச்சிப்பாய் ஒருவருமே உயிரிழந்தவர்க ளாவர். இந்தச் சம்பவம் 19 ஆம் பக்கம் பார்க்க

## இன்றையதினம் கூடுகிறது நாடாளுமன்றத் தெரிவுக்குழு

தேசிய பிரச்சினைக்கு தீர் வைக்காணும் வகையில் அமை க்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு இன்றையதினம் முதன்முறையாகக் கூடவுள்ளது.

இன்று பிற்பகல் 3 மணியள வில் நாடாளுமன்றத்தில் இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளதாக தெரிவுக்குழுவின் தலைவர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் ஒரு இனமாக வாழக்கூடிய நிலைமையை வலுப்படுத்துவதற்கான அரசி யல் மற்றும் அரசியலமைப்பு முறைமையை பரிந்துரைத்தலுக் கான நாடாளுமன்றத் தெரிவுக் குழுக்கூட்டம் என்று இந்தக்குழு வுக்கு பெயரிடப்பட்டுள்ளது. சபாநாயகரினால் குறித்த நாடா ளுமன்றத் தெரிவுக்குழுவில் 19 ஆம் பக்கம் பார்க்க

## திருடப்பட்ட நகைகளை அடைவு வைக்க முயற்சி

### வசமாக மாட்டினர் இருவர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மக்கள் வங்கியின் பிரதான வீதிக் கிளையில் நேற்றுப் பிற்பகல் பெருமளவு திருட்டு நகைகளை அடகு வைப்பதற்கு முயன்ற இருவர் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டது டன், அவர்களிடம் இருந்து 98 பவுண் நகைகள் மீட்கப்பட்டுள்ளதாக யாழ். குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கோப்பாய் பகுதியில் ஏற்கனவே கொள்ளையிடப்பட்ட குறித்த நகைகளை அவர்கள் யாழ். பிரதான வீதி 19 ஆம் பக்கம் பார்க்க

## தென்பகுதி மீனவரின் அத்துமீறல் எதிர்த்து முல்லையில் உண்ணாவிரதம்

முல்லைத்தீவு மாவட்ட கடற் பரப்பில் தென்பகுதி மீனவர்கள் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி தொழில் செய்வதைத் தடுத்து நிறுத்தவேண்டும் எனக்கோரி நேற்றையதினம் முல்லைத்தீவு மாவட்ட அரச செலயகத்தின் எதிரில் உண்ணாவிரதப் போரா ட்டம் நடத்தப்பட்டிருக்கின்றது. முல்லைத்தீவு மாவட்ட கடற் றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங் 19 ஆம் பக்கம் பார்க்க



## மாகாணசபைத் தேர்தல்களில் கொமன்வெல்த் கண்காணிப்பாளர்

### ஆராய்கிறது தேர்தல்கள் திணைக்களம்

நடைபெறவுள்ள மாகாண சபை தேர்தல்களை முன்னிட்டு கொமன்வெல்த் அமைப்பிலிரு ந்து சர்வதேச கண்காணிப்பா ளர்களை அழைப்பதற்கு தேர் தல்கள் திணைக்களம் ஆர்வ மாக உள்ளது. இதுபற்றி தேர் தலில் போட்டியிடவுள்ள அரசி யல் கட்சிகள் மற்றும் சுயேட் சைக் குழுக்களுடன் பேச்சுவா ர்த்தை நடத்தி இணக்கம் காண நடவடிக்கை எடுக்கப்படும் என்று துணைத் தேர்தல்கள் ஆணை யாளர் எம்.எம். மொஹமட் பி.பி.சி. தமிழோசையிடம் தெரி வித்தார். கொமன்வெல்த் அமைப்பில் இலங்கை அங்கம் 19 ஆம் பக்கம் பார்க்க

# கிளிநொச்சியில் மாத இறுதியில் மனித உரிமை பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களில் சிவில் சமூகப் பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களுக்கான மனித உரிமை தொடர்பான பயிற்சிப் பட்டறை இம்மாத இறுதிப் பகுதியில் நடாத்தப்படவுள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலயம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் குறித்து கருத்துத் தெரிவித்த யாழ்.காரியாலய இணைப்பாளர் ரி.கனகராஜ் இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ள விரும்பும் அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களின் உறுப்பினர்கள் உடனடியாக இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.காரியாலத்திற்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இவ்வாறு மனித உரிமை விடயங்களை பொது மக்களுக்கு கொண்டு செல்லும் ஒரு முயற்சியாகவே இந்தப் பயிற்சிப் பட்டறை நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் கிளிநொச்சியில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலகம் ஒன்றும் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதா கவும் அவர் குறிப்பிட்டார். (பா)



வல்வெட்டித்துறை உதய சூரியன் கடற்கரைப் பகுதியில் கொடியன் என்ற மீனினம் உயிருடன் கரையொதுங்கியுள்ளதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

20 அடி நீளமான குறித்த மீனினம் 2 அரை இலட்சம் ரூபா விலை போகும் என மீனவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

இம்மீனினம் ஆழம் மிகக்குறைந்த கடற்பகுதியில் விடப்பட்டுள்ளதாகவும், இதனை பெருமளவான மக்கள் சென்று பார்வையிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (116)

## சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் விஞ்ஞான கல்விக் கண்காட்சி

(கொடிகாமம்)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்று வரும் விஞ்ஞானக் கல்விக் கண்காட்சி இன்றைய தினமும், இடம் பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் ஆரம்பமான இந்தக் கண்காட்சியை பெருமளவானோர் பார்வையிட்டு பயனடைந்தனர். இன்றைய தினமும் காலை 8.30 மணியிலிருந்து மாலை 4.30 மணி வரை கண்காட்சி இடம் பெறுமெனவும், இதில் மாணவர்கள் உட்பட அனைவரும் வருகைதந்து பயன்பெறுமாறும் அறிவிக்கப்பட்டள்ளது. (130)

## விளையாட்டு விழா

(மானிப்பாய்)

மதி ஒளி சனசமூக நிலையமும், மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து நடாத்தும் பிரசாத் ஞாபகர்த்த மதிஒளி முன்பள்ளி வருடாந்த விளையாட்டுவிழா இன்றைய தினம் பிற்பகல் 2.00 மணிக்கு சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

ப.தெ.வ.அ.கூ.சங்கத்தைச் சேர்ந்த இ.உமாசுதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமாகாண ப.தெ.வ.கூ. சங்கங்களின் சமாச பொது முகாமையாளர் குணரட்ண[illegible] பிரதம விருந்தினராகவும், வலிகாமம் ப.தெ.ப.அ.கூ. சங்கங்களின் மானிப்பாய் கொத்தனி பொதுமுகாமையாளர் ப.சுதாகரன், ஓய்வு பெற்ற அதிபர் சி.நாகையா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (54)

★ ★ ★

(அச்செழு)

அச்செழு வளர்மதி சனசமூக முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப்போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நி[illegible]யத்தலைவர் வசந்தன் சுஜாதா தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச அமைப்பாளர் இ.ஜங்கரன் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபையின் தவிசாளர் இ.மயில்வாகனம், அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் ச.வேலழகன் அச்செழு கிராம சேவையாளர் ச.சண்முக வடிவேல், வளர்மதி விளையாட்டுக் கழகத் தலைவர் ம.ஈஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (08)

## வர்ணம் தீட்டுதல்

(திருநெல்வேலி)

கைதடி முதியோர் இல்லத்தில் கிறிஸ்துவுக்கான இளைஞர்கள் அமைப்பினர் கடந்த 4 ஆம், 5 ஆம் திகதிகளில் இல்லத்தில் தங்கி வாழும் முதியவர்களினால் பாவிக்கப்படும் அலுமாரிகளுக்கு வர்ணம் தீட்டும் வேலையில் ஈடுபட்டனர்.

மேற்படி அமைப்பினைச் சேர்ந்த 25 பேர் இப்பணியை மேற்கொண்டதுடன், இல்லத்தில் அமைந்துள்ள இந்து மற்றும் கிறீஸ்தவ ஆலயம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களையும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர்.

கடந்த 6 ஆம் திகதி பருத்தித்துறை மெதடிஸ்த மிஷன் திருச்சபையைச் சேர்ந்த 30 பேர் இல்லதுக்கு வருகை தந்து இல்லத்தின் பின்புறமாகக் காணப்பட்ட இடங்களை பாரிய சிரமதானம் மூலம் சுத்தம் செய்து உதவினர். (137)

## மும்மொழி கொள்கைத்திட்டம்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் மும்மொழிக் கொள்கைத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராசா தெரிவித்துள்ளார்.

இதனை நடைமுறைப்படுத்தும் வகையில் வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட நான்கு கல்விக் கோட்டங்களிலும் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் தமிழ், சிங்களம், ஆங்கில பிரதிக்கல்விப் பணிப்பாளர்களும் முகாமைத்துவ உதவியாளர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் எனக், கூறினார்.

## யாழ்ப்பாணம் மாநகரசபை கேள்வி அறிவித்தல் - 2013

மாநகரசபைக்குச் சொந்தமான நவீன சந்தை 2 ஆம் கட்டம் மேல்மாடியில் அமைந்துள்ள 4 ஆம் இலக்க கடையிலுள்ள கீழ்வரும் அட்டவணையிலுள்ள 15 கடைகளுக்கான இடத்தினையும், கேள்வி நடைமுறை ஊடாக பொது மக்களுக்கு வழங்குவதற்கான அறிவித்தல்.

நிபந்தனைகள்

1. வழங்கப்படும் இடத்தின் எல்லைச்சுவர், கதவுகள் என்பன மாநகரசபை பொறியியலாளரின் எழுத்து மூலமான அனுமதியுடனும், வழிகாட்டல்களுடனும் சித்திபெறும் கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் அமைக்க வேண்டும்.
2. மாநகரசபைக் கட்டளைச் சட்டம் நியமத்துணை விதிகள், துணைவிதிகள், சுற்றறிக்கைகள், உடன்படிக்கைகள் என்பனவற்றினை மீறப்படுமாயின் நட்ட ஈடு எதனையும் கோராமல் ஒப்பந்தத்திலிருந்தும் ஆதனத்திலிருந்தும் சமாதானமான முறையில் வெளியேறவேண்டும்.
3. சித்திபெறும் கேள்விதாரர் அவரால் கோரப்பட்ட கேள்விக் கோரிக்கை தொகையினை படிவம் திறத்தல் திகதியில் இருந்து ஏழு நாட்களுக்குள் முழுமையாகச் செலுத்துதல் வேண்டும்.
4. மாநகரசபையின் கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.
5. கேள்விப் படிவக்கட்டணம் ரூபா 1000.00 (வற்வரி நீங்கலாக)

கேள்விப்படிவம் விநியோகித்தல் - 09.07.2013 - 23.07.2013 முற்பகல் 10.00 மணி வரை

கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் 23.07.2013 நண்பகல் 12 மணி வரை

கேள்வி திறத்தல் - 23.07.2013 பிற்பகல் 2.30 மணிக்கு

6. விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மூலையில் கடையின் இலக்கத்தை குறிப்பிட்டு மாநகர சபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படவேண்டும்.
7. தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 23.07.2013 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கெள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட ஏவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.
8. மேலதிக விபரங்கள் தேவைப்படின் மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

| கடை இலக்கம் | கடையின் விஸ்தீரணம் | மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் தொ.க.வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 4/01 | 16'x7'8'' | 20,000/- | 360,000/- |
| 4/02 | 16'x9'8'' | 20,000/- | 4,80,000/- |
| 4/03 | 16'x9'8'' | 20,000/- | 4,80,000/- |
| 4/04 | 16'x9'8'' | 20,000/- | 4,80,000/- |
| 4/05 | 16'x9'8'' | 20,000/- | 4,80,000/- |
| 4/06 | 16'x9'8'' | 20,000/- | 4,80,000/- |
| 4/07 | 16'x9'8'' | 20,000/- | 4,80,000/- |
| 4/08 | 16'x8'6'' | 20,000/- | 4,20,000/- |
| 4/09 | 16'x8'6'' | 20,000/- | 4,20,000/- |
| 4/10 | 16'x9'8'' | 20,000/- | 4,80,000/- |
| 4/11 | 16'x9'8'' | 20,000/- | 4,80,000/- |
| 4/12 | 16'x9'8'' | 20,000/- | 4,80,000/- |
| 4/13 | 16'x9'8'' | 20,000/- | 4,80,000/- |
| 4/14 | 16'x9'8'' | 20,000/- | 4,80,000/- |
| 4/15 | 16'x9'8'' | 20,000/- | 4,80,000/- |

திருமதி.யோகேஸ்வரி பற்குணராஜா
மாநகரசபை முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(C/2928)

சேவிஸ் ஸ்ரேசன் மெசினரிஸ்
ELGi Suplier
4, 8, 16 தொன் லிப்டுகள் (Hydraulic Hoist)
கொம் பிரசர் (Air Compressor)
பிரசர் பம்ப் (Washing/High Pressure Pumps)
கிரிஸ் பம்ப் (Grease Pumps/Heavy Duty)
வெக்கும் கிளீனர்ஸ் (Vacuum Cleaners)
ஓட்டோ லிப்ட், பைக் லிப்ட் (Hydraulic)
வீல் அலைன்ஞர் (Wheel Aligner), Tyre Changer, Tyre Balancer
சகல திருத்த வேலைகளும் செய்து தரப்படும்.
Leasing வசதி செய்து தரப்படும்.
SN-Tech
94, 4 ஆம் குறுக்குத்தெரு (அடைக்கலமாதா ஆலய வீதி), யாழ்ப்பாணம். தொடர்புகளுக்கு: 077 687 2656, 0777263181.
(C/301)

சிறு விளம்பரம்
பழைய நாணயங்கள் தேவை
ஒரு ரூபாதாள், 2 ரூபாதாள் தேவை. ப.விஜயகுமார், 458 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.021 222 3077 (R/303)

வடிவமைப்பாளர்களே! வெற்றியாளராகுங்கள்!
பனைசார் உற்பத்தியில் ஈடுபடும் கைவினை வடிவமைப்பாளர்கள், உங்களின் உற்பத்திப் பொருட்களை 05.08.2013 ஆம் திகதிக்கு முன் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து 'சில்ப கண்காட்சி' போட்டியூடாக வெற்றிப் பரிசினை தட்டிச்செல்லுங்கள்
கைவினைப் பொருட்கள் ஒப்படைக்கப்படும் முகவரி:
தலைவர், பனை அபிவிருத்திச் சபை தேசிய வீடமைப்புச் செயலக கட்டடம், முதலாம் மாடி ஏ9 வீதி, யாழ்ப்பாணம்.
பொது முகாமையாளர் பனை அபிவிருத்திச் சபை 08.07.2013
(C/2929)

# இந்து சமய கலாசார திணைக்களத்தால் திருமுறை பற்றிய ஆய்வு முன்னெடுப்பு

இலங்கைத் திருநாட்டிலுள்ள இந்து சமய கலாசாரத் திணைக்களத்தின் பல பணிகளில் ஆய்வுப்பணியும் ஒன்றாக இடம்பெற்று வருகிறது. ஆய்வு நூல்களை வெளியிடுவது, ஆய்வரங்குகளை நடத்துவது போன்ற பணிகளை எமது திணைக்களம் முன்னெடுத்து வருகிறது என இந்து சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி சாந்தி திருநாவுக்கரசன் தெரிவித்தார்.

கடந்த மாதம் 28ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற 'மூவர் தமிழும் திரு முறையும்' எனும் ஆய்வரங்கைத் தொடக்கி வைத்து உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்துசமய கலாசாரத் திணைக்களம் தமிழ், சமயம், இலக்கியம், வரலாறு முதலான துறைகளில் ஆய்வரங்குகளை மேற்கொண்டு வருகின்றது. இந்த வகையில் தான் இன்று இந்த 'மூவர் தமிழும் திருமுறையும்' என்ற ஆய்வரங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. 14 ஆய்வரங்குகள் 14 தலைப்புக்களில் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த ஆய்வரங்கு தொடர்ந்து 3 நாட்கள் நடைபெறும். இறுதி நாள் கொழும்பு இராமகிருஷ்ணன் மிஷனில் கலை நிகழ்வாக இடம்பெறும். தமிழ் நாட்டுக் கலைஞர்களதும், இலங்கை கலைஞர்களதும் கலை நிகழ்வு கள் இடம்பெறும்.

எமது திணைக்களம், இந்த ஆய்வரங்கை ஏற்பாடு செய்தன் நோக்கம், மூவர் தமிழ் பற்றி பாடசாலை, பல்கலைக் கழக மாணவர்களும், இந்துக்களும் அறிய வேண்டும் என்பதற்காகவாகும். இந்த அரங்கு இவர்களை ஆன்மீக வாழ்க்கைப் பாதையில் வழிப்படுத்தும் என நம்புகின்றோம் என்றார். (06)

# குளத்தை மூடி பூங்கா அமைக்க திட்டம்

(அச்சுவேலி)

ஆவரங்கால் சிவன் கோவிலுக்கு அருகிலுள்ள சிறு குளத்தினை மூடி அவ்விடத்தில் சிறுவர் பூங்கா அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும், அந்தக் குளத்தை மூடுவதற்கு பொதுமக்கள் தயக்கம் காட்டுகின்றனர். ஆவரங்கால் சிவன் ஆலயத்தை அண்டிய பகுதிகளில் மேய்ச்சல் தரவை நிலம் காணப்படுவதுடன், அங்குள்ள குடியிருப்பாளர்களில் அநேகமானோர் கால்நடைகள் வளர்ப்பை மேற்கொள்கின்றனர்.

எனவே, கால்நடைகள் தமது தாகத்திற்கு இந்தக் குளத்தடியில் வந்தே நீரை அருந்திச் செல்கின்றன.

எனவே, இந்தக் குளத்தை மூடினால் கால்நடைகள் தண்ணீருக்கு அலைந்து திரிய வேண்டிய நிலை ஏற்படும் எனவும் கால்நடை வளர்ப்போர் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, ஒரு கிராமத்துக்கு சிறுவர் பூங்காவும் முக்கியமானதுதான். எனவே அதனை வேறு இடத்தில் அமைக்குமாறு உரியவர்களைப் பொதுமக்களும், சமூக நலன் விரும்பிகளும் கேட்டுக்கொள்கின்றனர். (85)

# கொடிகாமம் - பருத்தித்துறை பேருந்து சேவை; இரவு நேரத்தை அதிகரிக்க கோரிக்கை

(கொடிகாமம்)

கொடிகாமத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிய பேருந்து சேவையானது இரவு 8.00 மணியுடன் நிறைவடைகின்றது.

இரவு 8.00 மணியின் பின்னர் வெளிமாவட்டங்களில் இருந்து கொடிகாமம் வருவோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதனைக் காண முடிகின்றது.

பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் இரவு 8.00 மணியின் பின்னர் வெளிமாவட்டங்களில் இருந்து வருகை தருபவர்கள் ஆட்டோவினையே பயன்படுத்துகின்றனர்.

வசதி படைத்தவர்கள் ஆட்டோவினை வாடகைக்கு அமர்த்திச் செல்வதனையும், வசதி இல்லாதவர்கள் உறவினர்கள் வீடுகளில் நின்று மறுநாள் காலையிலேயே பயணத்தினை தொடர்வதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே இலங்கை போக்குவரத்துச்சபையின் பருத்தித்துறை சாலையினர் இரவு 9.00 மணிக்கு இறுதிச்சேவையினைக் கொடிகாமத்தில் இருந்து நடத்தினால் பொதுமக்கள் பெரிதும் நன்மை அடைவார்கள் எனப் பயணிகள் கூறுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் "நடவடிக்கை எடுத்து இரவு 9.00 மணிக்கு இறுதி பஸ் சேவையை நடத்த வேண்டுமெனப் பொதுமக்கள் கோரிக்கை விடுகின்றனர். (130)

# முத்துமாரி அம்மனுக்கு அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மண்டைதீவு வேப்பந்திடல் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய மகோற்சவ தின அலங்கார உற்சவம் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா இடம்பெறவுள்ளன.

இவ் உற்சவத்தில் தினமும் காலை, மாலை விசேட பூசை வழிபாடுகள் என்பன இடம் பெறவுள்ளதுடன் இரவு உற்சவத்தில் விசேட சமய நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

இறுதி நாளான 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு வைரவப் பெருமானுக்கு விடேச அபிஷேகம் நடைபெற்று பொங்கல் மடை பரவல் இடம் பெறும்.

உற்சவகால ஸ்ரீபரமகுருவால் கிரியைகளை சிவஸ்ரீ நாகேந்திர பாலசுப்பிரமணிய சிவாச்சாரியாரால் நடத்தப்படவுள்ளன. (வ)

# கோப்பாயில் சிரமதானம்

டெங்கு ஒழிப்பு வாரத்தினை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி கிழக்குப் பிரிவும் கோப்பாய் வடக்கு கிராம அலுவலர் பிரிவும் இணைந்து கோப்பாய் வடக்கு வெங்காயச் சங்க ஒழுங்கை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

இச்சிரமதானத்தில் செஞ்சிலுவைச் சங்க தொண்டர்கள், கிராம அலுவலர் பிரிவிலுள்ள பொதுமக்கள் இணைந்து பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (08)


பாராட்டி வாழ்த்துகிறோம்







எமக்கு அரசதொழில் வாய்ப்பு வழங்கி ஒளியேற்றிய பாரம்பரிய கைதொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலலேந்திரன் அவர்களுக்கும் வலி.தென்மேற்கு பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளரும், பிரதேசசபை எதிர்க்கட்சி தலைவருமாகிய வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் (ஜீவா) அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்வதுடன், அவர்கள் பணிமேலும் சிறக்க எமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

புதிதாக நியமனம் பெற்ற கல்விசாரா ஊழியர்கள்

மானிப்பாய் மக்கள்

(R/302)

மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளுமல்ல. இடையூறுகளும் துன்பங்களுமே. - மாத்யூஸ்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## நமக்கு வெளியே யாரும் இல்லை

ஒரு பெரிய தத்துவ மேதை. ஒருநாள் குழந்தை ஒன்று எரிகிற மெழுகுவர்த்தியை எடுத்துக்கொண்டு தேவாலயத்துக்குச் சென்றுகொண்டிருப்பதைப் பார்த்தார். குழந்தையோடு விளையாட நினைத்த மேதை குழந்தையைப் பார்த்து, "நீயாகவே இந்த மெழுகுவர்த்தியைக் கொளுத்தினாயா?" என்று கேட்டார். "ஆமாம்" என்றது குழந்தை.

"முதலில் இந்த மெழுகுவர்த்தி எரியாமல்தானே இருந்தது. இப்போது எரிகிறது. இந்த மெழுகுவர்த்திக்கு வெளிச்சம் எங்கிருந்து வந்ததென்று எனக்குக் காட்டுவாயா?" என்று குழந்தையைக் கேட்டார் மேதை. குழந்தை புரியாமல் விழித்தது.

குறுஞ்சிரிப்புச் சிரித்தவாறே, "ம்... இந்த வெளிச்சம் எங்கேயிருந்து வந்தது என்று எனக்குக் காட்டு பார்க்கலாம்..." என்று மீண்டும் விளையாட்டாய்க் கேட்டார் மேதை.

இப்போது குழந்தை அந்த மெழுகுவர்த்தியை "உ..:.ப்" என ஊதி அணைத்தது. "இப்பத்தான் வெளிச்சம் போய்விட்டதே. நீங்க பார்த்தீங்கதானே? அது எங்கே போச்சென்று நீங்கள் சொல்லுங்கோ பாப்பம்..." என்றது குழந்தை.

இப்படித்தான் எந்த இடத்திலிருந்தும் நமக்கு உண்மைகள் தெரியவரலாம் என்ற மனப்பக்குவத்தை அடைவோமானால், பல்வேறு திறமைகள்–கருத்துகளின் இருப்பை அங்கீகரிக்கும் ஜனநாயகப் பக்குவமும் தானாய் வந்துவிடும். மாறாக, நாம் நினைத்துக் கொண்டிருப்பது மட்டும்தான் சரியாயிருக்கும் என்ற சிந்தனை தர்க்கரீதியாக எதேச்சாதிகாரத்துக்குத்தான் இட்டுச்செல்லும்.

நமக்கு முழுக்க முழுக்கப் பிடித்தமானதைச் சொல்கிறவர்களைத் தவிர மற்ற யாரையும் நமக்கு ஏற்றுக்கொள்ள முடியாமலிருப்பதும் நம் சமூகத் துயரங்களில் ஒன்று. நமது பிரச்சினைகளை மட்டும் முதன்மையாய் எடுத்துக் கவலைப்படாதவர்கள் எல்லாம் நம் எதிரிகளாகத்தான் இருக்க முடியும் என்று விலக்கி வைக்கிறோம். எங்களை முதன்மைப்படுத்தியே எதையும் யோசித்து வருகிறோம்.

தமிழர்களாகிய நமக்கு சிங்கள சமூகத்தில் யாரையாவது ஏற்றுக்கொள்ள முடிகிறதா... வெகுநேர யோசனைக்குப் பிறகு, விக்கிரமபாகு கருணாரட்ன ஒருவரைத் தவிர? முஸ்லிம் சமூகத்தில் அந்த ஒருவரேனும் உண்டா? விக்கிரமபாகுவுக்கு சிங்கள மக்களிடமிருந்து கிடைத்த — கிடைத்துக்கொண்டிருக்கும் வாக்குகள் சில நூற்றுச் சொச்சம்தான்.

கிட்டத்தட்ட ஒன்றரைக் கோடிப் பேர் உள்ள சமூகத்தில் சில நூற்றுச் சொச்சம் பேருடன் மட்டும்தான் நம்மால் பேச முடியுமா? நம்மை முற்றுமுழுதாய் ஆதரிக்காத எல்லோரும் நம் எதிரிகள்தானா? மறுபக்கம் அவர்களுக்கே அவர்களுக்கென்றும் உள்ள பிரச்சினைகளில் எந்த ஒரு பிரச்சினையில் நாம் நமது ஆதரவைத் தெரிவித்திருக்கிறோம்?

தமிழ்நாட்டிலும், உலகில் நமக்கு மட்டும்தான் பிரச்சினை இருக்கிறது; நமது பிரச்சினை ஒன்றுதான் ஒரேயொரு பிரச்சினை என்று சொல்லக்கூடிய சீமான், வைகோ, நெடுமாறன் வகையறாக்களைத்தான் நமக்கு ஆதரவு சக்திகள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். இவர்களும் அங்குள்ள ஏழு கோடித் தமிழர்களில் சில ஆயிரம் பேரைத்தான் பிரதிநிதித்துவம் செய்பவர்கள்.

நாம் ஏன் இவ்வளவு குறுகலாகச் சிந்திக்கிறோம்? உலகையே... தமிழர்களுக்கு ஆதரவானவர்கள்–தமிழர்களுக்கு ஆதரவாயில்லாதவர்கள் என்றுதான் பார்ப்போமா? ஆதரவாயில்லாதவர்களை நமக்கு வெளியில் நிறுத்திவிட்டு, நாம் நமது கிணற்றுக்குள்ளேயே நம்மவர்களுடன் மட்டும் வாழ்ந்திருப்போமா?

- ஆசிரியர்

# அரசாங்கத்தை விமர்சிக்காது அபிவிருத்தியில் கைகோர்க்கவும்

## மன்னார் நகரசபை உறுப்பினர் அழைப்பு

அரசாங்கத்தை விமர்சிக்காமல், அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் திட்டங்களை துரிதப்படுத்துவதற்கு தங்களுடன் கைகோர்க்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினருக்கு ஆளும் கட்சியின் உறுப்பினர் அழைப்பு விடுத்துள்ளார்.

மன்னார் நகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் குமரேஸுக்கே அந்த நகர சபையின் ஆளும் கட்சியின் உறுப்பினர் நிலாமுதீன் நகுசீன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு ஊடகங்களுக்கு அறிக்கை விடுகின்ற மன்னார் நகர சபை உறுப்பினர் குமரேஸ் கடந்த 2 வருடங்களில் எதனை சாதித்திருக்கின்றார் என்பதனை பகிரங்கமாக மக்களுக்கு தெரிவிக்க வேண்டும். கடந்த காலங்களில் நடந்த சம்பவங்கள், மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் ஆகியவற்றை அவர் மறந்துவிட்டார்.

அரசியல் பேசத் தெரியாதவர்கள் இன்று மக்களைப் பற்றிப் பேசுகின்றனர். நான் அவரை பகிரங்க விவாதத்திற்கு அழைக்கின்றேன். இந்த நகர சபை, மன்னார் மக்களுக்கு தங்களது ஊழல் நிறைந்த ஆட்சியைத் தவிர எதனை செய்தது என்றும் வினவ விரும்புகின்றேன்.

மன்னாரில் எத்தனையோ பாதைகள் சீர்கெட்டு காணப்படுகின்றன. ஒரு பாதையைக் கூட சீர்செய்ய முடியாத இந்த நகர சபை, சிறு சிறு பிரச்சினைகளை தீர்த்துவைக்க முடியாத நிலையில் மன்னாரில் வீதிகள் திறப்பு விழா நிகழ்விற்கு அழைககப்படவில்லை என்பதற்காக மன்னாரின் அபிவிருத்தியை கொச்சைப்படுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிடுகின்றனர்.

யாரால் பாதைகள் சீர்செய்ய முடியும். படித்த இளைஞர்களுக்கு யாரால் தொழில் வாய்ப்புக்களை வழங்க முடியும் என்று மன்னார் மக்களுக்கு நன்கு தெரியும். மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அமைச்சர் றிசாட் பதியுதீன் சாதி, மதம் பாராது தனது சேவையை செய்து வருகின்றார். இது மக்களுக்கு நன்கு தெரியும். ஒரு சில அரசியல்வாதிகள் அமைச்சரின் இந்த செயற்பாடுகளை பொறுத்துக்கொள்ள முடியாத நிலையில் அறிக்கைகளை விட்டு வருகின்றனர்.

எனவே, குறித்த அரசியல்வாதிகள் ஊடகங்களுக்கு அடிக்கடி அறிக்கை விடுவதை நிறுத்திவிட்டு மன்னாரின் அபிவிருத்தியிலும் இளைஞர், யுவதிகளின் தொழில் வாய்ப்புக்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க முன்வரவேண்டும்.

இனியாவது அரசாங்கத்துடன் இணைந்து பல நல்ல திட்டங்களுக்கு ஆதரவு கொடுத்து மன்னார நகர மக்களுக்கு அவர்களின் தேவையை நிறைவேற்ற நகர சபை முன்வரவேண்டும் என கேட்டுக்கொள்ளுகின்றேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊடகவியலாளர்களுக்கு மதிப்பளிக்கப்படுவதில்லை

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு உரிய மதிப்பளிக்கப்படுவதில்லை என ஜே.வி.பி.யின முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால் காந்த தெரிவித்துள்ளார். அநேக தொழிற்துறைகள் எதிரநோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து வெளிச்சம் போட்டுக் காட்டும் ஊடகத்தில், ஊடகவியலாளர்களின் பிரச்சினைகள் அம்பலப்படுத்தப்படுவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாடசாலை ஆசிரியர் ஒருவரை அரசியல்வாதி ஒருவர் மண்டியிடச் செய்தால் செய்யப்படும் பிரசாரத்திற்கு நிகராக, பிரதேச ஊடகவியலாளர் ஒருவருக்கு அரசியல்வாதி அச்சுறுத்தல் விடுத்தால் ஊடகங்களில் பிரசாரம் செய்யப்படுவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சக ஊடகவியலாளர் மீது அழுத்தங்களையும் ஊடகங்கள் வெளிச்சம் போட்டு காட்ட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். ஊடகவியலாளர் தாக்கப்பட்டால் அவருக்காக எவரும் குரல் கொடுப்பதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊடகவியலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு வலுவான ஊடகவியலாளர் தொழிற்சங்கமொன்றின் அவசியம் எழுந்துள்ளது என கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

# மாணவனை மீட்டுத்தரக் கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

வவுனியா விபுலானந்தாக் கல்லூரியில் தரம் 11 இல் கல்வி கற்கும் சிவசூரியகுமாரன் சரண்ராஜ் எனும் மாணவன், கடந்த 13.06.2013 அன்று கல்லூரியில் நடைபெற்ற மாலை நேர வகுப்புக்குச் சென்று காணாமல போயிருந்தார்.

காணாமல் போன மாணவனை மீட்க நடவடிக்கை எடுக்காத பாடசாலை நிர்வாகத்தையும், பொலிஸாரின் அசமந்தப் போக்கையும் கண்டித்து, நேற்றுக் காலை பாடசாலை நுழைவாயிலுக்கு முன்பாக மாணவர்களும், பெறறோர்களும் பெருமளவில் திரண்டு, குறித்த மாணவனை உடனடியாக மீட்டுத்தரக் கோரி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது காணாமல் போன மாணவனின் தந்தை மயக்கம் அடைந்ததோடு, தனது மகன் காணாமல் போய் மூன்று வாரங்களுக்கு மேலாகியும், இதுவரை உருப்படியான எத்தகைய நடவடிக்கையையும் பாடசாலை நிர்வாகமும், பொலிஸாரும் எடுக்கவில்லை என கதறியழுதார்.

மறியல் போராட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்கள் எங்கள் சகோதரன் எங்கே, காணாமல் போன மாணவனை மீட்டுத்தா, கண்டுபிடி கண்டுபிடி மாணவனை கண்டுபிடி, மீட்டுத்தா மீட்டுத்தா எங்கள் சகோதரனை மீட்டுத்தா என கோசங்களை எழுப்பியதோடு, பதாதைகளையும் தாங்கியிருந்தனர்.

சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவித்த மாணவன் சரண்ராஜின் பெற்றோர், எமது மகன் காணாமல் போன அன்றே பாடசாலை நிர்வாகத்துக்கும், பொலிஸ் அவசர சேவை பிரிவுக்கும் அறிவித்திருந்தோம். வவுனியா பொலிஸிலும் முறைப்பாடு பதிவு செய்திருந்தோம்.

கடத்தலுடன் தொடர்புடையவர்களை நாம் அடையாளம் காட்டியும், பொலிஸார் அவர்களை கைது செய்தவுடனேயே விடுவித்ததோடு, கடத்தல்காரர்களுக்கு சாதகமாக பொலிஸார் செயல்படுகின்றனர் எனவும் தெரிவித்தனர்.

இதேவேளை சம்பவ இடத்துக்கு வருகை தந்த வவுனியா மாவட்ட பொலிஸ் நிலைய பொலிஸ் அதிகாரி இந்திரஜித், உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகவும், இன்று மாலை 4 மணிக்கு கல்லூரிக்கு நேரடியாக வருகை தந்து விசாரணை தொடர்பான நிலைபபாட்டினை தெரிவிப்பதாகவும் வழங்கிய உறுதிமொழியையடுத்து, மாணவர்களதும் பெற்றோர்களது போராட்டம் கைவிடப்பட்டது.

## மக்கள் வங்கியின் தங்கநகை அடகு வாடிக்கையாளர்களுக்கான வரப்பிரசாதம்

விலைமதிப்பற்ற உணர்வுபூர்வமான பூர்வீக நகைகளைக் காப்பாற்றிக் கொள்ள மக்கள் வங்கி ஓர் அரியசந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது.

மக்கள் வங்கியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தங்க நகை கடன் திட்டத்தின் மூலம் நீங்கள் ஏற்கனவே அடகுவைத்த நகைகளை 24 மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதியில் மாதாந்த தவணைப் பணம் செலுத்தி தங்க நகைகளை ஏல விற்பனைக்குச் செல்லாதவாறு தடுத்து மீட்டுக்கொள்ளலாம்.

இந்தக் கடன் திட்டத்தின் மூலம் உங்களுக்கு வழங்கப்படும் உச்ச தொகையானது உங்களது அடகு முற்பணத் தொகையே யாகும். அத்தோடு அடகுக்கான அதே வட்டி வீதமே அறவி டப்படுவதால் வாடிக்கையாளர்கள் அதிக நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தகவல்களை அருகிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் அல்லது சேவை நிலையங்களில் பெற்றுக கொள்ளலாமென மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.



# விடுதலைப்புலிகளை அழித்த ஊடகங்கள் 47

**மஞ்சள் கயிற்றை விடுதலைப் புலிகளின் தமிழீழ காவல் துறைக்கு பொறுப்பாக இருந்த நடேசன் திருமண மண்டபத்தில் வைத்து மணமகனின் கையில் உத்தியோக பூர்வமாக வழங்கி வருவார். இதனை மணமகன் வாங்கி மணமகளின் கழுத்தில் கட்டியபின் இயக்கத்தின் சான்றிதழ் பத்திரம் ஒன்றில் இவர்களது திருமணம் பதிவு செய்யப்படும். சில வேளைகளில் இவர்களது திருமணத்தை புலிகளின் தமிழீழ கல்விக் கழக பொறுப்பாளராக இருந்த வே.இளங்குமரனும் நடத்தி வைப்பதுண்டு. இதை விட முக்கியமான தளபதிகள் ஒரு சிலருக்கு விசேடமாக பிரபாகரன் மஞ்சள் கயிற்றை வழங்கி திருமணத்தை நடத்தி வைத்ததும் உண்டு.**

வே.அர்ச்சுணன்

புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பாப்பாவை வன்னியில் சந்தித்ததும் பாப்பா விடம் "உமக்கு தலைவரிடம் சொல்லி இன்னொரு பெண் பார்க்கச் சொல்கிறேன். ஏனென்றால் இப்பொழுதும் மாப்பிள்ளை போன்று இருக்கின்றீர்" என்று கூற அயலில் இருந்த தளபதிகள் பாப்பா எப்பொழுதும் மாப்பிள்ளை தான் என்று கூறி கிண்டலடித்தனர்.

இதற்கு அன்ரன் பாலசிங்கம் பாப்பா எல்லோருக்கும் விளை யாட்டுக் காட்டி இப்பொழுது விளையாட்டுத் துறை பொறுப் பாளராக பதவியை எடுத்துக் கொண்டு இனி தலைவருக்கும் விளையாட்டுக் காட்டி விடுவார். பாவம் தலைவர். தமிழ்ச் செல்வன் பாப்பாவின் விளையாட்டு தெரி யாமல் பொறுப்பாளராக நிய மித்து விட்டாரோ தெரியாது. பாப்பா பொறுப்பாளராக யாழ்ப்பாணத்தில் போய் இறங்கினால் ஒரே பெண்கள் குழாம் தானாம் பாப்பாவை சூழ்ந்து கொள்கின்றனர். ஆனால் வன்னிக்கு வந்தால் பாப்பாவுக்கு பெண் வாடை அறவே பிடிக்காதாம் என்று பாலசிங்கம் கிண்டலடிக்க பாப்பா நைசாக நழுவிச் செல்ல முற்படுகிறார். அதைத் தடுக்கும் அன்ரன் பாலசிங்கம் பாப்பாவை "ஐசே ஒருக்கா வந்திட்டுப் போம். எங்கட தளபதிகள் போராளிகள் ஏன் அடேல் அன்ரி கூட (அவரது மனைவி) இவ்வளவு நேர்த்தியாக உடுப்புகளை அயன் பண்ணி போட மாட்டினம். நீர் எங்கே ஐசே உம்மட உடுப்புகள அயன் பண்றனீர். எப்பவுமே மடிப்பு குலையாமல் எனக்கு உம்மட உடுப்புகள பார்க்க பொறாமையாகவே இருக்கிறது. அது சரி ஐசே தலைவர் கே.பி ஆக்களிட்டயும் சூசையிட்டயும் ஆயுத கொள்வனவு செய்யும் பொழுது விளையாட்டுத் துறைக்கு என்று புறம்பாக கொலோன் போத்தல் (சென்ற்) எதையாவது இறக்குமதி செய்து தாறவரோ? நானும் எத்தனையோ நாடுகளின்ர சென்ற் அடிச்சிருக்கிறன். இதை விட எத்தனையோ நாடுகளின்ர தூதுவர்களோட இருந்து கதைக் கேக்க அவர்கள் அடிச்சு வாற சென்ற்களின் வாசனையை மணந்திருக்கிறன் ஆனால் நீர் அடிச்சு வாற சென்ரின்ர வாசனையை நான் ஒரு இடமுமே சுவாசிச்சதில்ல. ஐசே இது உமக்கு என்று பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப் பட்டிருக்கிறது..." என்று கிண்டலடித்துக் கொண்டிருந்த பொழுது அந்த இடத்திற்கு சரி யாக தமிழ்ச் செல்வனும் வந்து சேர்ந்தார்.

தமிழ்ச் செல்வனிடம் அன்ரன் பாலசிங்கம் உம்மைத் தலைவர் அரசியல் துறைக்கு பொறுப்பாக விட்டவரோ அல்லது பாப்பாவிற்கு பெண் பார்க்க விட்டவரோ என்று கிண்டலாக கேட்க தமிழ்ச் செல்வனுக்கு விளங்கி விட்டது. பாப்பாவைத் தான் மனுசன் துவைச்சு எடுத்துக் கொண்டிருக்கிறார் என்று. உடனேயே பதிலுக்கு பாலசிங்கத்தை திருப்திப் படுத்துவதற்காக "ஓம் அண்ணை பாப்பாவும் ரெடியா தான் நிற்கிறார். தலைவரிட்டச் சொல்லிப்போட்டு இன்னொரு பெண்ணைப் பார்த்து கட்டி வைத்து விடுவோம்" என்று தமிழ்ச் செல்வனும் நக்கலில் விளையாட, பாப்பா அவசரமான நிகழ்ச்சி ஒன்று இருக்கிறது நான் அவசரமாக செல்ல வேண்டும் என்று கூறிவிட்டு அங்கிருந்து நைசாக நழுவிச் செல்கிறார்.

இதன் பின்னர் பாலசிங்கம் தமிழ்ச் செல்வனுடன் பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து கொண்டிருந்த பொழுது மீண்டும் ஒரு 4 மணித்தியால இடைவெளி கழித்து பாப்பா அந்த இடத்திற்கு வந்து சேர்கிறார். அப்பொழுது பாலசிங்கம் நைசாக தமிழ்ச் செல்வனிடம் கேட்கிறார். பாப்பா இப்பொழுது தனது குடும்பத்துடன் ஒற்றுமையாக இருக்கிறாரா என்று. இதற்கு தமிழ்ச் செல்வன் "இல்லை அண்ணை குடும் பம் தொடர்ந்தும் இழுபறியில் தான் இருக்கிறது. பாப்பாவின்ர குடும்ப பிரச்சினையை தீர்க்கிறதுக்கு என்று தலைவர் புறம்பாக இன்னொரு விசாரணைப் பிரிவையே அமைக்க வேண்டும் போல இருக்கு ஏனென்றால் இவர்களுடைய பிரச்சினை தீர்க்க முடியாத பிரச்சினையாக நீடித்து வருகிறது. நானும் முயற்சி செய்து வருகிறேன். இருவரும் ஒத்து வருகிறார்களில்லை. ஆனால் இந்த நிலையில் தான் பாப்பாவின் மனைவிக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அதாவது வெளி நாட்டு நிறுவனங்கள் வழங்குகின்ற நிதியை கொண்டு மக்களுக்கான வாழ்வாதார திட்டங்களை முன்னெடுக்கும் நோக்கத்துடன் மக்களுக்கு தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுத்தல் மற்றும் தற்காலிக மலசல கூடங்களை அமைத்துக் கொடுத்தல் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புக்களை ஒப்படைத்திருக்கிறேன். இதன் பின்னர் இருவருக்கும் இடையில் குழப்பங்கள் ஓரளவில் குறையும் என்றே எதிர்பார்த்தேன். ஆனால் குறையும் மாதிரித் தெரியவில்லை..." என தமிழ்ச் செல்வன் கூறிய பொழுது உடனடியா-கவே பாலசிங்கம் சொன்னார்.

"நீர் விட்ட இரண்டாவது பிழை பாப்பாவின் மனைவிக்கு அந்த பொறுப்பை கொடுத்தது. முதலாவது பிழை பாப்பாவிற்கு விளையாட்டுத் துறை பொறுப்பாளர் பதவியை கொடுத்தது. இரண்டுமே நீர் செய்த பிழைகள் ஐசே. நான் நினைக்கிறேன் நீர் பாப்பாவின்ர குடும்பத்தை குழப்ப வேண்டும் என்ற திட்டம் போட்டுத் தான் இதை செய்கின்றீரோ தெரி யாது. பாப்பாவை விளையாட்டுத் துறைக்கு நீர் பொறுப்பாக போட்டதால் பாப்பா அங்கே கனக்க விளையாட்டு காட்டுவார் என்பதை நீர் புரியாமல் இருந்தது முதலாவது தவறு. இரண்டாவது பாப்பா எல்லா விளையாட்டும் காட்டக் கூடிய ஒருவர். இதனால் குடும்பத்தில் குழப்பம் வரும் என்பதை தெரிந்திருக்க வேண்டும். அடுத்தது பாப்பாவின் மனைவிக்கு நீர் இந்த பொறுப்பை வழங்கி இருக்கிறீர். பாப்பாவின மனைவி ஏனைய குடும்பங்களை அவர்கள் சந்தோசமாக இருப்பதை சென்று பார்க்கின்ற பொழுது பாப்பா மீது இயற்கையாக கோபம் வரும் வாய்ப்பு இருக்கிறது. அல்லது அவர் செல்லும் பொழுது அந்தக் குடும்பங்கள் சண்டை பிடித்துக் கொண்டிருந்தால் அதைப் பார்த்து அவவும் சண்டை பிடிக்கத் தொடங்கி விடுவார். எனவே பாப்பாவிலும் அவர் மனைவியிலும் பிழை சொல்ல மாட்டேன் ஐசே. முழுப் பிழையும் உன்னில் தான். நீர் இருவரையும் சண்டைக்கு அனுப்பி இருந்தால் அல்லது கள முனையில் காவலரணில் நிற்க வைத்திருந்தால் இவர்கள் இருவரும் ஒருபோதும் சண்டை பிடிக்க நினைக்க மாட் டார்கள். விடுமுறையில் வருகின்ற ஒன்றிரண்டு நாட்களை நல்ல முறை யில் கழித்து விட்டு மீண்டும் கள முனைக்கு அல்லது காவல் அரணுக்கு செல்ல வேண்டும் என்று தான் எண்ணி இருப்பார்கள்... எனவே இவர்களுடைய பிரச்சினைக்கு முழுப் பொறுப்பும் நீர் தான் என்று அன்ரன் பாலசிங்கம் கூற தமிழ்ச் செல்வன் தனது வழமையான நமட்டுச் சிரிப்புடன் சமாளித்துக் கொள்கிறார்.

உண்மையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ஆரம்பத்தில் போரா-ளிகள் திருமணம் செய்வதற்கு பல கட்டுப்பாடுகளும் பல சட்ட முறைகளும் உருவாக்கப் பட்டிருந்தன. ஆனால் காலப் போக்கில் இந்த சட்ட உருவாக்கத்திற்கு மாறாக போரா-ளிகள் திருமணம் செய்வதற்கு உரிய அங்கீகாரத்தை இயக்கத் தலைவர் பிரபாகரன் வழங்கியதை அடுத்து பல போராளிகளும் திருமணம் செய்வதை முதன்மையான விடயமாக கருதி திருமண பந்தத்தில் இணைந்து கொண்டனர். இவ்வாறு திருமண பந்தத்தில் இணைகின்றவர்கள் பவுண் தாலி கட்டவும் பதிவுத் திருமணம் செய்யவும் இயக்கத்தில் தடை விதிக்கப் பட்டதுடன் ஏனைய விடயங்கள் அனைத்தும் மரபு ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில் குறிப்பாக பே-ாரர்ளிகளின் திருமணத்திற்கு உரிய தாலியாக மஞ்சள் கயிறு திகழ்ந்து வந்தது. இந்த மஞ்சள் கயிற்றை விடுதலைப் புலிகளின் தமிழீழ காவல் துறைக்கு பொறுப்பாக இருந்த நடேசன் திருமண மண்டபத்தில் வைத்து மணமகனின் கையில் உத்தியோக பூர்வமாக வழங்கி வருவார். இதனை மணமகன் வாங்கி மணமகளின் கழுத்தில் கட்டியபின் இயக்கத்தின் சான்றிதழ் பத்திரம் ஒன்றில் இவர்களது திருமணம் பதிவு செய்யப்படும். சில வேளைகளில் இவர்களது திருமணத்தை புலிகளின் தமிழீழ கல்விக் கழக பொறுப்பாளராக இருந்த வே.இளங்குமரனும் நடத்தி வைப்பதுண்டு. இதை விட முக்கியமான தளபதிகள் ஒரு சிலருக்கு விசேடமாக பிரபா-கரன் மஞ்சள் கயிற்றை வழங்கி திருமணத்தை நடத்தி வைத்ததும் உண்டு. இவ்வாறு நடத்தப்படும் திருமணங்கள் தொடர்பில் தமிழ் ஊடகங்கள் அறிந்து கொண்டனவா? அல்லது அறிந்தும் அறியாதவை போன்று விடுதலைப் புலிகளை அழிக்கும் செயற் திட்டத்தில் ஈடுபட்டனவா? என்பதை தொடர்ந்து பார்ப்போம்

(தொடரும்)

# நாடகமாடியவர்கள் அரசிலிருந்து வெளியேறும் காலம் வந்துள்ளது



வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தினால், அரசாங்கத்தில் இருந்து வெளியேறப் போவதாக நாடகமாடியவர்கள் தற்போது அரசாங்கத்தில் இருந்து வெளியேறும் காலம் வந்துள்ளதாக மெளபிம மக்கள் கட்சியின் தலைவர் ஹேமகுமார நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார். அரசாங்கம், வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தினால், அரசாங்கத்தில் இருந்து வெளியேறப் போவதாக, அரசாங்கத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் இரண்டு, மூன்று பேர் நாடகம் ஒன்றை நடித்தினர்.

இந்த நாடகத்தில் நடித்தவர்கள் அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவதற்கான காலம் வந்துள்ளது. இவர்கள் தொடர்ந்தும் அரசாங்கத்தில் இணைந்திருப்பால்களேயானால், ஆடை அணிந்து கொண்டா தொடர்ந்தும் அரசாங்கத்தில் இருக்கின்றனர் என்ற கேள்வி எழும் எனவும் நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளார்.

# 400 மில். டொலர் கடனை சீனாவிடம் பெற்றுள்ளது அரசு

வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக சீனாவிடம் இருந்து அரசாங்கம் மேலும் 400 மில்லியன் டொலர் கடன் பெற்றுள்ளது.

பி தர வீதிகளையும், கிராமப்புற வீதிகளையும் அபிவிருத்தி செய்வதற்கே 400 மில்லியன் டொலரை சீன அபிவிருத்தி வங்கியிடம் இருந்து கடன் பெற்றுள்ளதாக, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் பிறேமசிறி தெரிவித்துள்ளார்.

இந்த நிதியை நிதியமைச்சு தேவையான திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யவுள்ளது.

பிரதான வீதிகளுடன், கிராமிய வீதிகளை இணைத்து, கிராமிய வீதி வலையமைப்பை முன்னேற்றுவது இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். உள்ளூராட்சி சபைகளால் நிறைவேற்றப்படாதுள்ள விதி அபிவிருத்தித்திட்டங்களும் இதன் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இலங்கைக்கு அண்மையிலேயே 2.2 பில்லியன் டொலர் கடனை வழங்க சீனா முன்வந்தது குறிப்பிடத்தக்கது.

# 10 மாணவர்களை பதம் பார்த்த நாய்

நாய்க்கடிக்கு இலக்கான 10 மாணவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதுடன் அதில் மாணவிகள் மூவர் தங்கியிருந்து சிகிச்சைபெற்று வருகின்றனர்.

அநுராதபுரம் மத்திய மாகாண வித்தியாலயத்தைச்சேர்ந்த மாணவர்கள் 10 பேரே நாய்க்கடிக்கு இலக்காகியுள்ளனர்.

மாணவர்களை கடித்த அந்த நாயை பிரதேசவாசிகள் கொன்றதுடன் அந்த நாயின் சடலத்தை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். குறித்த நாய்க்கு விசர் பிடித்திருக்கிறதா என்பதனை அறிவதற்காகவே நாயின் சடலம் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## இனப்பிரச்சினைக்கு தீர்வாகாத
# மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகிறது கூட்டமைப்பு

மாகாணசபை என்பது இனப்பிரச்சினைக்கான தீர்வல்ல என்ற நிலைப்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெளிவாக இருக்கின்றது. ஆயினும் வருகின்ற மாகாணசபையின் மூலம் மக்களுக்கு ஆற்றக் கூடிய சேவைகளைச் செய்ய வேண்டும் என்பதற்காகவும் வட



மாகாணசபைத்தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு போட்டியிடவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

பதின்மூன்றாவது அரசியலமைப்புத்திருத்தச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்யும் வகையில் அதன் கீழ் வருகின்ற மாகாண சபைகளுக்கான முக்கிய அதிகாரங்களை இல்லாமல் செய்ய வேண்டும் என்று அரசாங்கம் முனைப்பாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. சிங்களத் தீவிரவாத அரசியலமைப்புக்கள் வடமாகாண தேர்தலை நடத்தக் கூடாது என்று குரல் எழுப்பிக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் வட மாகாணசபைக்கான தேர்தலை அரசாங்கம் நடத்துமா என்பது குறித்து ஐயப்பாடுகள் எழுந்துள்ள போதிலும், நாட்டின் ஏனைய பகுதிகளில் நடைபெறுவதைப்போன்று வடக்கிலும் மாகாண சபைக்கான ஒரு தேர்தல் நடைபெறும்போது, அரசியல் கட்சி" என்ற ரீதியில் ஜனநாயக முறைப்படி கலந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தத் தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளது. என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார்.

# மகாபோதி மீதான தாக்குதல் 13 திருத்தத்திற்கு எதிரான அழுத்தம்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

இந்தியாவின் புத்தகாயாவின் மகாபோதி விகாரை மீது நேற்று காலை நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலானது இலங்கை 13ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் கொண்டு வரவிருக்கும் திருத்தங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அழுத்தம் ஆகும்.

இந்த சம்பவத்தை ஒரு சிறிய சம்பவமாக கருதி விட முடியாது. இது இனவாத குழுவொன்றின் தாக்குதல் என்றும் கருத முடியாது என்று தேசப்பற்றுள்ள தேசிய செயலாளர் வசந்த பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய சந்தர்ப்பத்தில், இலங்கைக்கு அழுத்தங்களை கொடுப்பதற்கான சில முயற்சிகளில் இந்தியா ஈடுபட்டு வருகிறது. இதனை தமிழ்நாட்டின் இனவாத அரசியல்வாதிகளும், மத்திய அரசாங்கத்தின் அரசியல்வாதிகளும் மேற்கொண்டு வருகின்றனர். 13ஆவது திருத்தம் தொடர்பில் இலங்கை அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு எதிரான நடவடிக்கையாகவே, நேற்றைய குண்டு வெடிப்புச் சம்பவத்தை கருத வேண்டும் என்றார்.

இந்தியாவை மகிழ்விப்பதா அல்லது இலங்கையின் சிங்கள பெளத்த மக்களை மகிழ்விப்பதா என்பது குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானிக்க வேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் டாக்டர் குணதாச அமரசேகர தெரிவித்தார்.

இத் தீர்மானத்திலேயே இந்த ஆட்சியின் எதிர்காலம் தங்கியுள்ளது

அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

இந்திய வெளிவிவகார அமைச்சர் குர்ஷித் அமெரிக்காவின் அடிவருடி. எனவே இலங்கையை பிரிக்கும் நிகழ்ச்சி நிரலே அவரால் முன்னெடுக்கப்படு கின்றது.

இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனின் வருகையானது தீர்க்கமானதாகும்.

13ஆவது திருத்தத்தில் திருத்தங்களை மேற்கொள்வதை தடுக்கவும் மாகாணசபை முறைமையை ஒழிப்பதை தடுக்கவுமே அவர் இங்கு வருகிறார்.

இதற்கு அரசாங்கம் அடங்கிப் போகும் என்றே தற்போதைய சூழ்நிலைகளும் அமைச்சர் பஷிலின் இந்திய விஜயமும் எடுத்துக்காட்டுகின்றன.

அதேவேளை சல்மான குர்ஷித்தின் கொள்கையை விட வித்தியாசமான கொள்கையுடையவர் மேனன்.

அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய அரசுடன் 13 தொடர்பில் கடும் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க அரசுக்கெதிரான கடும் போக்கை கடைப்பிடிக்கின்றார். எதிர்காலத்தில் அவர் அரசாங்கத்தை விட்டு வெளியேறும் ஆபத்தும் உள்ளது.

இதனால் மீண்டும் ஜாதிக ஹெல உறுமய சிங்கள பெளத்தர்கள் மத்தியில் செல்வாக்கை எட்டிப் பிடிக்கும்.

அமைச்சர் விமல் வீரவன்ச, பொதுபலசேனா என சிங்கள பெளத்த அமைப்புக்களும் அரசுக்கு எதிராக திரும்பியுள்ளது. என்றார்.

# பணிப்பெண் நாமம் மாற்றம்

சவுதி அரேபியாவில் தொழிலுக்குச் செல்லும் இலங்கைப் பெண்களின் தொழில் நாமத்தை மாற்றுவதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய தற்போது வீட்டுப் பணிப்பெண் என அறிவிக்கப்படும் தொழில் நாமத்தை வீட்டு நிர்வாக உதவியாளர் என மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு அதிக சம்பளத்தை பெற்றுக்கொடுக்கவும் எண்ணியுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் ப்ணியகத்தின் பிரதி பொதுமுகாமையாளர் மங்கள ரன்தெனிய தெரிவித்துள்ளார்.

தேசிய தொழில் நிபுணத்துவ தேர்வில் சித்தியடையும் பெண்கள் மாத்திரமே எதிர்காலத்தில் வீட்டு நிர்வாக உதவியாளர் சேவைகளுக்காக சவுதி அரேபியாவுக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

# பத்து ரயில்கள் சேவையில்

பணிப் பகிஷ்கரிப்பிற்கு மத்தியிலும் நேற்று காலை10 ரயில்களை சேவையில் ஈடுபடுத்தியதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாணந்துறை, சிலாபம், ரம்புக்கனை, பொல்கஹவெல மற்றும் கொழும்பு கோட்டை ஆகிய ரயில் நிலையங்களில் இருந்து இந்த ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாக ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் எல்.ஏ.ஆர்.ரத்நாயக்க கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் வழமையாக காலை வேளையில் சுமார் 120 ரயில் சேவைகள் இடம்பெறுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி செயலாளருக்கும் இடையிலான பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாக பதில் ரயில்வே பொதுமுகாமையாளர் நாலக்க பண்டார தெரிவித்துள்ளார்.

ரயில் தொழிற்சங்கங்கள் ஆரம்பித்துள்ள பணிப் பகிஷ்கரிப்பினால் பயணிகள் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

சம்பள முரண்பாடுகளுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி ரயில் உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க ஒன்றியம் இந்த தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது

## பொதுநலவாய அமர்வின்போது
# வெளிநாட்டு ஊடகவியலாளரை கண்காணிக்க உள்ளது அரசு

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வின் போது செய்தி சேகரிப்பில் ஈடுபடும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களைக் கண்காணிக்க உள்ளதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகள் குறித்த செய்திகளை சேகரிப்பதற்காக 700 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர். உள்நாட்டு ஊடக நிறுவனங்களின் ஊடகவியலாளர்கள் உள்ளடங் கலாக மொத்தமாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் இந்த நிகழ்வு பற்றிய செய்தி சேகரிப்பில் ஈடுபடவுள்ளனர்.

வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு விசா வழங்கும் நடவடிக்கை அடுத்த வாரமளவில் ஆரம்பமாகும் என அவர் தெரிவித்துள்ளார். சில ஊடகவியலாளர்கள் கருத்துச்சுதந்திரம் என்ற போர்வையில் நாட்டின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படுத்த முயற்சித்துள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறானவர்களினால் நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். வெளிநாடுகளிலிருந்து விஜயம் செய்யும் சகல ஊடகவியலாளர்கள் தொடர்பிலும் முழுமையாக



ஆராய்ந்ததன் பின்னரே விசா வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். ஊடக சுதந்திரத்தை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற போதிலும் தேசிய பாதுகாப்பு விவகாரங்களில் இணக்கபாடுகளை ஏற்படுத்திக்கொள்ளத் தயாரில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதுகாப்பு அச்சுறுத்தல் காணப்படும் எனக் கருதப்பட்டால் இறுதி நேரத்தில் கூட வெளிநாட்டு ஊடகவியலாளர்களின் விசாக்கள் இரத்துச் செய்யப்படக் கூடுமென அமைச்சர் ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

# இந்திய அரசின் புலமைப்பரிசில் வடக்கில் 24 மாணவர்கள் தெரிவு

இந்திய அரசினால் இந்தியாவின் முன்னணிப் பல்கலைக்கழகங்கள் சிலவற்றில் உயர்கல்வியை தொடர்வதற்கான தகுதியான இலங்கை மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் திட்டத்தில் இவ்வருடம் வட மாகாணத்தை சேர்ந்தவர்கள் 24பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக இந்திய துணைத்தூதரக யாழ். அலுவலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசு இலங்கை மாணவர்களுக்கு 290 புலமைப் பரிசில்களை வருடாந்தம் வழங்குகிறது. இதில் இளமாணி, முதுமாணி மற்றும் ஆராய்ச்சிக்கான புலமைப் பரிசில்கள் மற்றும் கலாநிதி பட்ட ஆய்வுக்கான புலமைப் பரிசில் என்பன உள்ளடக்கப்படுகிறது.

இப்புலமைப்பரிசிலில் 120 நேரு ஞாபகார்த்த புலமைப் பரிசில் மற்றும் கலாசார உறவுகளுக்கான இந்தியப் பேராயத்தின் புலமைப்பரிசில், 25 ராஜீவ் காந்தி புலமை ப்பரிசில், 02 பிராந்திய ஒத்துழைப்புக்கான இந்து சமுத்திர சுற்று வட்ட (IOR-ARC) புலமைப்பரிசில், 05 பொதுநலவாய புலமைப்பரிசில் திட்டம், (கலாநிதிப்பட்ட ஆய்வு) 03 சார்க் புலமைப்பரிசில் (கலாநிதிப்பட்ட ஆய்வு) 50 மௌலானா ஆஸாத் புலமைப் பரிசில்திட்டம் ஆகிய புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகிறது.

இதன்படி இவ்வருடத்திற்கான புலமைப்பரிசில் வழங்கலில் வடமாகாணத்தை சேர்ந்த 24 மாணவர்கள்தெரிவு செய்யப்பட்டதுடன் இந்த 24 பேரில் 13பேர்(50 வீதத்திற்கும் அதிக மானவர்கள்) 3 வருட கலாநிதிப்பட்ட (phd) ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பொதுநலவாய மற்றும் சார்க் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு 7கலாநிதிப்பட்ட (phd ஆய்வு இடங்கள் ஒதுக்கப்பட்டன. அவற்றில் எல்லாமே வட மாகாணத்தவர்களுக்கே ஒதுக்கப்பட்டுள்ளன. இந்திய அரசு இந்தப்புலமைப் பரிசில்களை திறமை அடிப்படையில் இலங்கை பிரஜைகளுக்கு வழங்குகிறது.இலங்கை அரசின் உயர் கல்வி அமைச்சின் ஆலோசனையுடன்மேற்படி தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டன.அனைத்து புலமைப்பரிசில்களும், மாதாந்த செலவினக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக பாட நெறியின் காலப்பகுதி முழுமைக்கான கல்விக்கட்டணத்தையும் உள்ளடக்குகின்றன. அத்துடன் தங்குமிடக்கொடுப்பனவு மற்றும் புத்தகங்கள், காகிதாதிகளுக்கான வருடாந்தக் கொடுப்பனவையும் வழங்குகிறது.

இவைதவிரவும் கலாசார உறவுகளுக்கான இந்தியப் பேராயத்தின் புலமைப்பரிசில் பெற்றவர்கள் அனைவரும் முழுமையான சுகாதாரவசதி, இலங்கையிலிருந்து செல்லும் போதுஇந்தியாவில் மிகக் கிட்டியவிமான நிலையத்துக்கான விமானப்பயணக் கொடுப்பனவு இந்தியாவின் பல்வேறு இடங்களுக்கான கல்விச் சுற்றுலா கொடுப்பனவு பல உதிரி கொடுப்பனவுகள் என்பனவும் வழங்கப்படுகின்றன.

## பாதுகாப்பான பாடசாலைகள் தெரிவு மதிப்பீட்டுப்பணிகள் ஆரம்பம்

(வலிகாமம்)

வடமாகாணக் கல்வித்திணைக் களத்தின் அனர்த்தமுகாமைத் துவப்பிரிவும் GIZ.ESC தொண்டு நிறுவனங்களும் இணைந்து, வடமாகாணப் பாடசாலைகளில் பாதுகாப்பான பாடசாலையைத் தெரிவு செய்யும் மதிப்பீட்டுப்பணிகளை ஆரம்பிதது்ள்ளன.

இந்தப்பணி தீவககல்வி வலயத்தில் நேற்று ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகக் வடமாகாணக் கல்வித்திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். வட மாகாணத்தில் இனங்காணப்பட்ட ஆறு கல்வி வலயங்களில் இப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் அறுபது பாடசாலைகள் மதிப்பிடப்பட்டு ஒவ்வொரு வலயங்களிலும் மூன்று பாடசாலைகள் தெரிவு செய்யப்படவுள்ளன. இவற்றிலிருந்து மாகாணமட்டத்தில் மூன்று பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு சான்றிதழ் வழங்கப்படவுள்ளன்.

இந்த மதிப்பீட்டிற்குட்படுத்தப்படவுள்ள பாடசாலைகளிற்கு மதிப்பீட்டுப்பணி தொடர்பான அறிவுறுத்தல்கள் மாகாணக் கல்வித்திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளன. மதிப்பீட்டிற்குட்படுத்தப்படும் விடயங்களாக,பாடசாலை அனர்த்த பாதுகாப்புக்குழுக்கள், பாடசாலை அனர்த்தப் பாதுகாப்புத் திட்டம், அவசரசமிக்ஞையின் போது மாணவர் வெளியேறும் முறைகள் என்பன அறிவுறுத்தப்பட்டுள்ளன. (06)

## தென்மராட்சியில் விரைவில் புகைப்பரிசோதனை

தென்மராட்சி கிழக்கு ப. நோ.கூட்டுறவு சங்க தலைமை கட்டடத்தில் விரைவில் புகைப் பரிசோதனை இடம்பெறவுள்ளது. கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் அமைநதுள்ள தென் மராட்சி கிழக்கு ப.நோ.கூட்டு றவு சங்க தலைமை கட்டடத் தில் விரைவில் வாகனங்களிற்கான புகை பரிசோதனை நடைபெறவுள்ளது .வாகனங்கள் புகை பரிசோதிக்குமபோது நெரிசல்களை குறைக்கும் முகமாக தாங்கள் வதியும் இடத்திற்கு அருகில் உள்ள ப.நோ.கூ. சங்க கிளைகளில் பெயர் முகவரி, தொலைபேசி இலக்கம் போன்றவற்றை பதிவு செய்யுமாறும் கூட்டுறவு சங்க பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். (130)

## ஓட்டம் பிடித்தான் ஆட்டுத் திருடன்

(வரணி)

வரணி பகுதியில் தற்போது கட்டாக்காலி ஆடுகள் மேய்ச்சலுக்காக அவிழ்த்துவிடும் காலமாவதால் மக்கள் தமது கால் நடைகள் காலையில் அவிழ்த்து விடுவது வழமையாகும்.

கடந்த புதன்கிழமை மேய்ச்சலுக்குவிடப்பட்ட ஆடு ஒன்றை கடத்தி அருகில் உள்ள பற்றைக்காணிக்கு கொண்டு செல்ல முற்பட்டவேளை சந்தேகம் கொண்டமக்கள் விழிப்படைந்ததும் முயற்சி பயனளிக்காததால் தனது துவிச்சக்கரவண்டியையும் கைவிட்டு விட்டு திருடன் ஒருவன் தலை தெறிக்க தப்பி ஓடியுள்ளான். இதனால் அப்பகுதி மக்கள் மத்தியில் தற்போது தமது கால்நடைகளை மேய்ச்சலுக்கு அவிழ்த்து விடுவதில் அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளதை காணமுடிகிறது. (150)

## நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் கதிர்காமசேகரம் திறந்த வெளியரங்கில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் நா.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் செ.சந்திரராஜா,சிறப்பு விருந்தினராக தெல்லிப்பளை கோட்டக்கல்விப் பணிப்பாளர் சண்முககுலகுமாரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளன. இந்நிகழ்வில் நிறுவுனர் பேருரையை யாழ். பல்கலைக்கழக மருத்துவத்துறை உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரன் வழங்கவுள்ளார்.

## தனி நடனப்போட்டி யாழ்.மாணவன் முதலிடம்

(யாழ்ப்பாணம்)



தேசியமட்ட தமிழ் மொழித்தினப் போட்டியின் தனி நடனப்போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி (தேசியப்பாடசாலை) மாணவன் க.கௌதமன் முதலாமிடத்தினைப் பெற்றுள்ளார். அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்மொழி த்தினப் போட்டிகள் கொழும்பு றோயல்கல்லூரியில் இடம்பெற்றபோது தனிநடனம் போட்டியின் பிரிவு 5 இல் முதலாமிடத்தினை இவர் பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முரசின் இன்றைய பலன்



(09.07.2013 –செவ்வாய்க்கிழமை)

விஜய வருஷம் ஆனி மாதம் 25 ஆம் திகதி.புனர்பூசம் மு.ப 11. 26 வரை - பின் பூசம் பிரதமைத்திதி சித்தயோகம். இராகுகாலம 02.58- 04.28வரை. சுபநேரம 10.28- 11.58 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
நேர்முகத்தேர்வில் பங்கு கொள்ளல்,மனைபற்றிய பிணக்கு,நோய் கட்டுப்பாட்டில் பயணநிகழ்வு ஒத்திவைப்பு, வங்கிக்கடன் பற்றிய சாதகமான பதில், பிதாவின் ஆதரவு, காதல் பிரச்சினையால் நிம்மதிக்கேடு, விருந்துபசாரம்,சுவீப்பில் அதிர்ஷ்டம்

**ரிஷபம்**
சொத்துப்பிரச்சினை சுமுகமடைதல்,நோய்க்கு சிகிச்சை,பயணம் பற்றிய சிந்தனை,அயலவருடன் வாக்குவாதம்,குழந்தைப்பிரசவம்,பூப்படைதல்,பரீட்சை முடிவு கேட்டு மகிழ்வு,சகோதரர் உதவியினால் முன்னேற்றம்,நீண்ட பகை நட்பைத்தடுத்தல்.

**மிதுனம்**
மக்கள் உயர்வு கேட்டு மனமகிழ்வு,சிறுவிபத்தால் பாதிப்பு, சளிநோய்க்கு வைத்தியம், வாகனயோகம், கன்னியர் உறவால் குடும்ப சந்தேகம்,அந்நியர் உதவமுன்வரல், மனைகோலுந்திட்டம், ஒப்பந்தம் கைச்சாத்திடல், வழக்கின்முடிவுகேட்டு ஆனந்தம், புதியன கொள்வனவு,சுவீப் அதிர்ஷ்டம்.

**கடகம்**
விவாகப்பேச்சு இழுபடல்,மங்கள நிகழ்விற்கு கடன்படல்,மனைவியின் நோயில் வைத்தியவசதி, மக்களினால் பெருமை, கௌரவப்பதவிக்கு சிபார்சு, அசாதாரணவேகம் விபத்துக்கு வழியேற்படுத்தல், பல்நோயால் வருந்தல்,பணப்பற்றாக்குறையினால் வங்கிக்காசோலை திரும்புதல்.

**சிம்மம்**
பதவி ஏற்றம் பற்றிய செய்தி கிடைத்தல், குழந்தைப்பேறு,விவாகத்திற்கு சம்மதம் தெரிவித்தல், நோய் பற்றிய அச்சமின்மை,சீட்டுப்பணம் கிடைத்தல், வெளியூர் பயணம் வெற்றிதரல்,விசா கிடைத்தல்,புதிய இடத்தில் வியாபார நிலையம் திறக்கும் எண்ணம், மாதாவின் உதவி.

**கன்னி**
இடமாற்றம் பற்றிய செய்தி,தனியார் துறையில் வேலைவாய்ப்பு,தலைக்கு வந்த துன்பம் விலகிவிடும், நகைஅணிந்து செல்வதைக் கைவிடவும்,பயணம் இடைத்தங்கல் நாட்டில் சேர்க்கும்,ஆவணங்கள் தவறும் அபாயம் உண்டு, காணாமற்போனவர் பற்றிய தகவல் எட்டும்,கற்பும் மானமும் பணத்தால் கெடும்.

**துலாம்**
பிதாவினால் உதவி,புதிய பதவி சேரும் வாய்ப்பு, சத்திரசிகிச்சை நோய் குணமாக்கம்,இரகசியத்தை காப்பாற்றுவது நன்மை பயக்கும்,இடைத்தங்கல் நாட்டைவிடுதல்,வெளிநாடுகளில் கற்க அழைப்பு, தொலைபேசி உரையாடல் ஒட்டுக்கேட்டல்,புலனாய்வு செய்வதனால் தீமைவிலகும்.

**விருச்சிகம்**
வியாழசுகக்கேட்டால் நன்மைகுறைதல்,புதிய முயற்சி ஆரம்பிக்கவேண்டாம்,பயணம் பற்றிய மீளாய்வு, மக்களினால் கவலை,காலாவதியான பொருட்கள் பற்றிய கவனம்,பாலியல் துன்புறுத்தல், விஷக்கடி வருத்துதல்,வயோதிபத்திலும் விவாகபந்தம் ஏற்படல், சந்திரமேட்டில் கறுப்பு மச்சம், நீர்தத்துப்பற்றி எச்சரிக்கை.

**தனுசு**
கைவிட்ட பயணம்தொடரமுயற்சி, அரசியலில் குதிக்கும் எண்ணம்,சளிநோய் குணமடைதல், நேர்முகத்தேர்விற்கு அழைப்பு,விவாகமுயற்சி வெற்றிதரல்,வங்கிக்கடன் பெற்று மனைகோலுதல், வியாபாரத்தால் இலாபம்,தவறிய பொருள் கிடைத்தல்,வெளியூர் பெண்ணை மணக்கும்யோகம், நச்சுப்பொருள் பற்றிய எச்சரிக்கை.


**மகரம்**
எதிர்பாராத மகிழ்வுச்செய்தி தந்தையின் உதவி, நட்பினால் வசந்தம்,இடமாற்றம் இரத்து குழந்தைப் பேறு, மனை,வாகனம் பற்றிய தொல்லைகள் அகலல், அதிர்ஷ்லாபச்சீட்டினால் பணம், பிள்ளைகளின் நடத்தையில் கண்காணிப்பு, மேலதிகாரியின் அரவணைப்பு,கடன்தீரநண்பரின் உதவி,வாடகைக்கு மனை கிடைத்தல்.

**கும்பம்**
பதவி உயர்வு,மங்கள நிகழ்வு,கௌரவம்,அரச பதவி,குழந்தைப்பேறு,பயணம் பற்றிய செய்தி,நோய் குணமடைதல்,காதல் மலர்வு,வங்கிக்கடன்,மாமன் உறவினால் முன்னேற்றம்,சம்பள ஏற்றம்,திருடர் தொல்லை,எதிர்பாராத எதிரி,மனைவியின் உடல் நிலை பாதிப்பு.

**மீனம்**
கடன்பட்டுக்கொண்டாட்டம்,மனைதிருத்தம்,சகோதர உறவில் சிறுவிரிசல்,தனியே சென்று ஆபத்து, தலைக்கவசமின்மையால்தண்டம், சளிநோய் வருத்துதல், காதலில்சோதனை,பிதாவின் உடல் நிலை பற்றிய கவலை,சமரசமுழவு,நம்பினவர் கைவிடல், நிறம் சீதனத்தால் விவாகம் பற்றிய பதட்டநிலை.

# வடமாகாண விளையாட்டு விழா
# யாழ். கல்வி வலயம் முதலிடம்







யாழ். கல்வி வலயம்



வலிகாமம் கல்வி வலயம்



வடமராட்சி கல்வி வலயம்



(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் யாழ்ப்பாணக் கல்வி வலயம் முதலாமிடத்தைப் பிடித்துக்கொண்டது.

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான ஆறாவது மாகாண மட்ட விளையாட்டு விழாவின் தடகளப் போட்டிகள் கடந்த 4ஆம் திகதி முதல் நேற்று வரை யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் சிறப்புற நடைபெற்றது.

இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 12 கல்வி வலயப் பாடசாலை வீர,வீராங்கனைகள் பங்குகொண்டனர். இதில் 50இற்கும் மேற்பட்ட மாகாண மட்ட சாதனைகள் முறியடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நேற்றைய இறுதி நாள் நிகழ்வில் ஆண், பெண்களுக்கான 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டம் மற்றும் அஞ்சலோட்டம் போன்ற தடகள நிகழ்வுகள் இடம்பெற்றது. தடகளப் போட்டிகளில் வலிகாமம் கல்வி வலயம் 509 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், 490 புள்ளிகளைப் பெற்ற யாழ்ப்பாணக் கல்வி வலயம் இரண்டாமிடத்தையும், 316 புள்ளிகளைப் பெற்று மன்னார் கல்வி வலயம் மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

தடகளம் மற்றும் பெருவிளையாட்டுப் போட்டிகளின் ஒட்டுமொத்த புள்ளிகள் அடிப்படையில் யாழ்ப்பாணக் கல்வி வலயம் 1509 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், வலிகாமம் கல்வி வலயம் 921 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், வடமராட்சி கல்வி வலயம் 315 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன. இப்போட்டியின் சிறந்த தடகள வீராங்கனையாக வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியைச் சேர்ந்த லேகஜினி, சிறந்த தடகள வீரராக யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த யஸ்மின் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

வடமாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத் துறை அமைச்சுக்களின் செயலாளர் சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின், வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சத்தியபாலன், கோட்ட, வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பயிற்றுநர்கள், பொறுப்பாசிரியர்கள், வீர,வீராங்கனைகள், விளையாட்டு நலன்விரும்பிகள், ஆர்வலர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தனர். (93,17,20)

## வலயங்கள் பெற்ற புள்ளிகள்

வடக்கு மாகாண விளையாட்டு விழாவில் ஒட்டுமொத்த போட்டிகளில் யாழ்ப்பாணக் கல்வி வலயம் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது. இதன் அடிப்படையில் அதன் விபரம் வருமாறு:

| இல | வலயம் | புள்ளிகள் |
|---|---|---|
| 01) | யாழ்ப்பாணம் | 1050 |
| 02) | வலிகாமம் | 0921 |
| 03) | வடமராட்சி | 0416 |
| 04) | மன்னார் | 0406 |
| 05) | வவுனியா தெற்கு | 0271 |
| 06) | முல்லைத்தீவு | 0241 |
| 07) | வவுனியா வடக்கு | 0236 |
| 08) | கிளிநொச்சி | 0200 |
| 09) | தென்மராட்சி | 0135 |
| 10) | துணுக்காய் | 0076 |
| 11) | தீவகம் | 0052 |
| 12) | மடு | 0047 |



# 77 ஆண்டுகளின் பின்னர் அசத்திய பிரித்தானிய வீரர்

(லண்டன்)

விம்பிள்டன் ரென்னிசில் ஜோகோவிச்சை நேர் செட்டில் சாய்த்த ஆன்டி முர்ரே, விம்பிள்டன் பட்டத்தை வென்று 77 ஆண்டு கால இங்கிலாந்தின் ஏக்கத்தை தணித்தார்.

லண்டன் நகரில் நடந்து வந்த விம்பிள்டன் ரென்னிஸ் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் முதல்நிலை வீரர் சேர்பியாவின் நோவக் ஜோகோவிச்சும், 2ஆம் நிலை வீரர் இங்கிலாந்தின் ஆன்டி முர்ரேவும் நேற்று முன்தினம் மோதினர். இருவரும் பலம் வாய்ந்த சூரர்கள் என்பதால் எதிர்பார்த்தது போலவே களத்தில் நீயா-நானா? என்ற போட்டி கடுமையாக இருந்தது. என்றாலும் உள்ளூர் இரசிகர்களின் ஏகோபித்த ஆதரவுடன் ஜெட் வேகத்தில் பந்தை விளாசிய, முர்ரேவின் ஆதிக்கம் படிப்படியாக தலைதூக்கியது. முதலாவது செட்டில், ஜோகோவிச்சின் 7ஆவது கேமை பிரேக் செய்தது, இந்த செட் முர்ரேவின் கைக்குள் செல்ல உதவிகரமாக இருந்தது.

2ஆவது செட்டிலும் இதே யுத்தம் தொடர்ந்தது. இந்த செட்டில் ஜோகோவிச் நிறைய தவறு களை இழைத்ததால், இந்த செட்டையும் முர்ரே வசப்படுத்தினார். இதையடுத்து 3ஆவது செட்டில் பரபரப்பு மேலும் எகிறியது. இதிலும் முர்ரே தனக்கே உரிய ஸ்டைலில் முத்திரை பதித்தார். மணிக்கு 131 மைல் வேகம் வரை சேர்வீஸ் போட்ட முர்ரே, மொத்தம் 9 ஏஸ் சேர்வீஸ்களும் போட்டுத் தாக்கினார்.

இறுதியில் முர்ரே வெற்றியை நெருங்கிய சமயத்தில், ஜோகோவிச் அவரது மூன்று சம்பியன்ஷிப் புள்ளிகளைத் தடுத்தார். இதனால் 10ஆவது கேம் மட்டும் 10 நிமிடத்திற்கு மேலாக நகர்ந்தது. இறுதியில் ஜோகோவிச் பந்தை வலையில் அடித்து தவறு செய்ய, முர்ரே கழுத்தில் வெற்றிமாலை விழுந்தது.

3 மணி 10 நிமிடங்கள் நடந்த விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் ஆன்டி முர்ரே 6-4, 7-5, 6-4 என்ற நேர் செட்டில் ஜோகோவிச்சை வீழ்த்தி முதல் முறை யாக விம்பிள்டன் மகுடத்தை சூடி வரலாறு படைத்தார். இங்கிலாந்து வீரர் ஒருவர் விம்பிள்டன் பட்டத்தை வெல்வது 77 ஆண்டுகளுக்கு பின்னர் இதுவே முதல் முறையாகும். இதற்கு முன்பு கடைசியாக 1936ஆம் ஆண்டு இங்கிலாந்தை சேர்ந்த பிரெட் பெர்ரி விம்பிள்டனை வென்றிருந்தார். 26 வயதான முர்ரேவுக்கு இது 2ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும். ஏற்கனவே 2012ஆம் ஆண்டு அமெரிக்க ஓபனை கைப்பற்றி இருந்தார்.

2011ஆம் ஆண்டு விம்பிள்டன் சம்பியனான ஜோகோவிச், இந்த ஆட்டத்தில் அளவுக்கு அதிகமான தவறுகளை செய்தார். குறிப்பாக பந்தை வலுவாக வெளியே அடித்து தா-னாக செய்யக்கூடிய தவறுகளை 40 முறை (முர்ரே 21 தான்) ஜோகோவிச் செய்தது தான், பெரும் பின்னடைவாகிப் போனது. முர்ரேவுக்கு வாழ்த்துகள் தெரிவித்த ஜோகோவிச், இந்த வெற்றிக்கு அவர் தகுதியானவர், அவரது ஆட்டம் நம்ப முடியாத அளவுக்கு இருந்தது என்று பாராட்டினார். வாகை சூடிய முர்ரேவுக்கு ரூ.14 கோடியும், தோல்வி அடைந்த ஜோகோவிச்சுக்கு ரூ.7 கோடியும் பரிசுத்தொகையாக வழங்கப்பட்டன.

# சிம்பாப்வே அணியில் பாகிஸ்தான் நாட்டவர்

(ஹராரே)

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் பங்கேற்கவுள்ள சிம்பாப்வே அணியில், பாகிஸ்தானில் பிறந்த சிக்கந்தர் ராஜா இடம் பிடித்துள்ளார்.

இம்மாத இறுதியில் சிம்பாப்வே சுற்றுப்பயணம் செய்யவுள்ள இந்திய அணி ஐந்து போட்டிகள் (ஜுலை 24 - ஒகட்ஸ் 3) கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி வரும் ஜுலை 24ஆம் திகதி ஹராரேயில் நடைபெறவுள்ளது. இத்தொடருக்கான 16 பேர் கொண்ட அணியை, சிம்பாப்வே கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் அறிவித்தது.

இதில் 1986இல் பாகிஸ்தானில் உள்ள சியால்கோட் நகரில் பிறந்த சிக்கந்தர் இடம் பிடித்துள்ளார். கடந்த 2007இல் சிம் பாப்வே அணிக்காக முதல் தரப் போட்டியில் விளையாடிய இவர், கடந்த மே மாதம் நடந்த பங்களாதேஷ் எதிரான ஒருநாள் மற்றும் ருவென்ரி-20 தொடர் மூலம் சர்வதேச போட்டிகளில் முதன்முறையாக களமிறங்கினார். முதல்நிலை துடுப்பாட்ட வீரரான இவர், இதுவரை 3 ஒருநாள் (63 ஓட்டங்கள்), 2 ருவென்ரி-20 (45 ஓட்டங்கள்) போட்டிகளில் விளையாடியுள்ளார்.

வேகப்பந்துவீச்சாளர் மசகட்சா, டினாஷே பன்யன்கரா நீக்கப் பட்டனர். இதேபோல விக்கெட் காப்பாளர் ரெஜிஸ் சகப்வாவுக்கும் இடம் கிடைக்கவில்லை. விக்கெட் காப்பாளராக, கப்டன் பிரண்டன் டெய்லர் செயற்படவுள்ளார். இந்த அணியில், ஜார்விஸ், டென்டாய் சடாரா, பிரைன் விடோரி, எல்டன் சிகும்புரா, அறிமுக மைக்கல் சினோயா உள்ளிட்ட ஐந்து வேகப்பந்துவீச்சாளர்கள் தேர்வு செய யப்பட்டுள்ளனர்.

சிம்பாப்வே அணி: பிரண்டன் டெய்லர் (கப்டன்-விக்கெட் காப்பாளர்), சிக்கந்தர் ரஜா, டென்டாய் சடாரா, மைக்கல் சினோயா, எல்டன் சிகும்புரா, கிரிமர், ஜார்விஸ், டிமிசன் மருமா, ஹாமில்டன் மசகட்சா, நட்சாய் மஷாங்வே, டினோடென்டா முடோம்போடிசி, விசிமுசி சிபண்டா, உட்சேயா, பிரைன் விடோரி, மால்காம் வாலர், சீன் வில்லியம்ஸ்.



# மழையால் ஒத்திவைப்பு

(போர்ட் ஒப் ஸ்பெயின்)

மேற்கிந்தியத்தீவு, இலங்கை அணிகள் நேற்று முன்தினம் மோதிய முத்தரப்பு லீக் போட்டி மழையால் பாதியில் நிறுத்தப்பட்டது.

மேற்கிந்தியத்தீவில் முத்தரப்பு ஒருநாள் தொடர் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் போட்டியில் இலங்கை, மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத்தீவுகள் அணிக் கப்டன் போலார்ட் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதற்கமைய களமிறங்கிய இலங்கை அணி ரோச்சின் வேகப்பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இலங்கை அணி 19 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பலத்த மழை செய்தது. தொடர்ந்து மழை பெய்ததால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

ஓய்வு நாள் இருப்பதால் இப்போட்டி நேற்று இதே நிலையிலிருந்து தொடரும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# ஆஷஸ் கிண்ணம் இங்கிலாந்து கைப்பற்றும்

(லண்டன்)

வலுவான துடுப்பாட்ட வரிசை, பந்து வீச்சு வரிசை என அனைத்திலும் சிறப்பான விளங்கும் இங்கிலாந்து அணி களத்தில் உரிய முறையில் திறமைகளை வெளிப்படுத்தினால் நிச்சயம் ஆஷஸ் தொடரைக் கைப்பற்றிக் கொண்ட முடியும் என இங்கிலாந்து அணியின் முன்னாள் கப்டன் ஸ்ரோர்ஸ் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய அணியில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அதிலிருந்து மீண்டு வரக்கூடிய அணி அது. அந்த அணியின் பலத்தைப் பற்றி நான் அதிகம் குறிப்பிட விரும்பவில்லை. ஆனால், இங்கிலாந்து அணியைப்பொறுத்த வரையில் ஆஷஸ் தொடரைக் கைப்பற்றக்கூடிய சமபலம் கொண்ட அணியை அது கொண்டிருக்கின்றது. களத்தில் சரியான முறையில் அவர்கள் செயற் பட்டால் நிச்சயம் தொடரை முழுமையாக வெல்லக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. இதனை இந்த முறை பயன்படுத்தலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் நாளை மறுதினம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வென்றது அவுஸ்ரேலியா

(பாரிஸ்)

பிரான்ஸ் அணிக்கு எதிரான நட்பு கால்பந்து போட்டியில், அவுஸ்ரேலிய பெண்கள் அணி வெற்றி பெற்றது.

பாரிசில், அவுஸ்ரேலியா-பிரான்ஸ் அணிகள் மோதிய நட்பு கால்பந்து போட்டியில் மோதின. ஆட்டத்தின் 35ஆவது நிமிடத்தில் அவுஸ்ரேலியாவின் பட் முதல் கோல் அடித்தார். இதற்கு பிரான்ஸ் வீராங்கனைகளால் பதிலடி கொடுக்க முடியவில்லை. முதல் பாதி முடிவில், அவுஸ்ரேலிய அணி 1-0 என முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியிலும் ஆதிக்கத்தை தொடர்ந்த அவுஸ்ரேலிய அணிக்கு 70ஆவது நிமிடத்தில் கோரி ஒரு கோல் அடித்தார். கடைசி வரை போராடிய பிரான்ஸ் அணி வீராங்கனைகளால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில் அவுஸ்ரேலிய அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.



# தண்ணீர் மருத்துவம்

இரா. மணிகண்டன்

எப்போதெல்லாம் உங்களுக்குத் தண்ணீர் குடிக்கத் தோன்றுகிறதோ அப்போதெல்லாம் தண்ணீர் குடிக்கலாம். அதற்குத்தான் தண்ணீர். இந்த நேரம்தான் தண்ணீர் குடிக்க வேண்டும் இந்த நேரங்களில் தண்ணீர் குடிக்கக் கூடாது என்பதெல்லாம் இல்லை.

நம் உடலில் மூன்றில் இரண்டு பங்கு தண்ணீர்தான் உள்ளது. உடலில் உள்ள கலங்களுக்கு ஒட்சிசனைக் கடத்தும் வேலையை தண்ணீர்தான் செய்கிறது. நுரையீரலுக்கு சுத்தமான காற்றை அனுப்ப தண்ணீர்தான் உதவுகிறது. நம் உடலின் வெப்பத்தை சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப சமநிலையில் வைத்திருப்பதும் இந்தத் தண்ணீர்தான். தண்ணீர் இல்லாவிட்டால் நம் உடலில் உள்ள மூட்டுகளின் வழவழப்புத் தன்மைபோய் மூட்டுக்கள் தேயத் தொடங்கி விடும்.

சுருக்கமாக, தலை முதல் பாதம் வரை உள்ள ஒவ்வொரு கலத்துக்கும் தண்ணீர் தேவை. எல்லாவற்றிற்கும் மேலாக நம் மூளை செயற்பட 90 சதவீதம் தண்ணீர்தான் தேவையாக உள்ளது.

எப்போதெல்லாம் நம் உடலில் நீர்ச்சத்து குறைகிறதோ அப்போதெல்லாம் மூளையின் செயற்பாடும் குறையும். நோய்கள் ஒவ்வொன்றாக வர ஆரம்பிக்கும். அதன் முதல் அறிகுறி தலை வலியாகத்தான் இருக்கும். உடற்சோர்வு, மயக்கம் எல்லாம் அடுத்தடுத்து வரும்.

சமீபத்தில் ஜப்பான் மருத்துவர்கள் அறிமுகப்படுத்தியுள்ள water therapy பற்றி தெரிந்து கொள்ளுங்கள். இது ஏறத்தாழ நம் முன்னோர் கடைப்பிடித்து வந்த தண்ணீர் மருத்துவம்தான்.

காலையில் எழுந்ததும் வாயை மட்டும் கொப்பளித்து விட்டு, ஒன்றரை லீற்றர் தண்ணீர் குடியுங்கள். ஆரம்பத்தில் கஷ்டமாகத்தான் இருக்கும். போகப்போக சரியாகிவிடும். அதன் பின் ஒரு மணிநேரத்திற்கு எதையும் சாப்பிடக்கூடாது. தேநீர், கோப்பி, உணவு, நீராகாரம் என்று எதையும் உட்கொள்ளக் கூடாது. ஒரு மணி நேரத்திற்குப்பின் வழக்கமான உணவை உட்கொள்ளலாம்.

உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு 30 நாட்களுக்குள் பி.பி. கட்டுப்பாட்டிற்குள் வந்து விடும். அதைப்போல வாய்வுக் கோளாறு, மலச்சிக்கல், நீரிழிவு நோய்களும் கட்டுப்பாட்டிற்குள் வந்து விடும். water therapy-யில் பின்வரும் நன்மைகள் கண்டிப்பாக கிடைக்கும் என்று சொல்கிறார்கள்.

1. முகம் பொலிவு பெறும்.
2. கொழுப்புகள் நீங்கும். அதனால் உடலின் எடை குறையும்.
3. ஜீரண சக்தி அதிகரிக்கும்.
4. நாள் முழுவதும் உடல் புத்துணர்வுடனும் சுறுசுறுப்பாகவும் இருக்கும்.
5. இரத்த அழுத்த நோய் நீங்கும் அல்லது கட்டுப்படும்.
6. நீரிழிவு நோய் கட்டுப்பாட்டிற்குள் வரும்.

◆ சரி, ஒரு நாளைக்கு எவ்வளவு தண்ணீர் குடிக்க வேண்டும்?

ஒரு நாளைக்கு ஒருவர் குறைந்தது எட்டு டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும் என்கிறார்கள். அப்படியெல்லாம் கட்டாயமில்லை.

ஒவ்வொருவருடைய உடல்வாகு, வாழும் இடம், சீதோஷ்ணநிலை, செய்யும் வேலை போன்றவற்றிற்கு ஏற்ப தண்ணீரின் தேவை அளவு மாறுபடலாம்.

நம் உடலுக்குத் தண்ணீர் தேவை என்றால், அதுவே தாக உணர்வை வெளிப்படுத்தி தேவையான அளவு தண்ணீரைப் பெற்றுக் கொள்ளும்.

◆ சாப்பிடும்போது தண்ணீர் குடிக்கலாமா கூடாதா?

நாம் உணவு உண்ணத் தொடங்கியதுமே நம் வயிற்றில் உணவை ஜீரணிக்கச் செய்வதற்கான திரவம் சுரக்க ஆரம்பித்து விடும். அந்த சமயத்தில் சாப்பாட்டுடன் தண்ணீரையும் சேர்த்து உட்கொண்டால், அந்தத் தண்ணீர் ஜீரண திரவத்துடன் சேர்ந்து, ஜீரணப் பணியை பாதித்துவிடும்.

அதனால் சாப்பாட்டின் போது இடையிடையே தண்ணீர் அருந்துவதைத் தவிர்க்கலாம்.

◆ விக்கல் எடுக்கும்போது கூட தண்ணீர் அருந்தக் கூடாதா?

அதிக காரம், அதிக உப்பு, விக்கல், உணவுப் பொருள் தொண்டையில் சிக்கிக் கொள்ளுதல் போன்ற தவிர்க்க முடியாத காரணங்களுக்காக தண்ணீர் அருந்தித்தான் ஆகவேண்டும். அதில் தவறில்லை. ஒவ்வொரு கவளத்திற்கு இடையேயும் விடாமல் தண்ணீர் அருந்துவதுதான் ஆபத்தானது.

◆ அப்படியானால் எப்போதுதான் தண்ணீர் அருந்துவது?

உணவுக்கு ஒரு மணி நேரத்திற்கு முன், சாப்பிட்ட பின்னர் ஒரு மணிநேரம் கழித்து, வேண்டிய மட்டும் தண்ணீர் அருந்தலாம்". தண்ணீர் தாகம் எடுத்தால்.

சாப்பிட்டு முடித்ததும் வயிறு முட்ட சிலர் தண்ணீர் குடிப்பார்கள். அது தவறு. சிறிதளவு தண்ணீர் போதும். ஜீரண சக்தி அப்போதுதான் தடைப்படாமல் இருக்கும்.



# கனக்கப் பேசாதையும்!

- கானாபிரபா -

கொஞ்சம், அதிகம் போன்ற வார்த்தைகளுக்குப் பதிலாக தமிழ்நாட்டில் கம்மி, ஜாஸ்தி என்பவற்றைப் பேச்சுவழக்கில் பாவிக்கிறார்கள். இலங்கைத் தமிழரின் பேச்சுவழக்கில் கொஞ்சம் என்பதற்கு "எப்பன்", "எல்லுப்போல" போன்றன பேச்சுவழக்கில் உள்ளன.

"இஞ்சை தங்கமக்கா! எல்லுப் போல சீனி இருந்தாத்தாங்கோ, இவர் கடைக்கு வாங்கப்போயிட்டார், வந்தவுடனைதாறன்"

மேற்சொன்ன உதாரணத்தில் வரும் எல்லுப்போல என்ற சொற்பிரயோகம் தமிழக வழக்கில் "கம்மியா" என்ற பதத்திற்கு ஒப்பானது. ஒல்லுப்போல என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள்.

பக்கத்து வேலியால் எட்டி நின்று சீனி, உப்பு, எண்ணெய் போன்ற சாமான்களைப் பக்கத்து வீட்டுக்காரரிடம் அவசரம், ஆபத்துக்கு என்று வாங்கும் போது இப்படியான "எல்லுப் போல" என்ற சொல் பயன்பாட்டில் இருக்கும். கொஞ்சம் அதிகப் படியாகக்கேட்கும் தொனியில் கேட்டால் பக்கத்து வீட்டுக்காரர் பயந்து விடுவார்களோ என்ற காரணமாக இருக்குமோ என்னமோ.

"எல்லு" என்பதற்கு அகராதியில் என்ன விளக்கம் கொடுத்திருக்கின்றார்கள் என்று பார்த்தால் "நாள்", "சூரியன்" என்று மட்டுமே இருக்கின்றது. எனவே அகராதியின் விளக்கத்தை இங்கே பொருத்திப்பார்க்க முடியாது. "எள்ளுப் போல்" என்பதுதான் மருவி "எல்லுப் போல" என்று ஆகியிருக்கலாம்.

ஜாஸ்தி என்று தமிழகத்தில் வழங்கும் சொற்பதத்துக்குச் சம அர்த்தமாக ஈழத்துமொழி வழக்கில் "கனக்க" என்பது அமையும்.

"கனக்கப் போசாதையும், கண்டீரோ", "திருவிழாவுக்கு கன சனம் வந்தது", "கன சாமான்கள் கடையில் வந்திருக்காம்" போன்ற உதாரணங்கள் "கனக்க" என்பதற்குப் பொருத்திப்பார்க்கப்படும் வார்த்தைப் பிரயோகங்களாகும். "கனக்கக் கனக்கச் சுமந்தான்" என்றால் அது பாரத்தைக் குறிப்பதாகிவிடும். கனதியான விஷயம் என்றால் "வெயிற்"றான விஷயமாகும்.

# சில வார்த்...

இது நான் எழுதிய நாவல்களில் ஆறாவது நாவல். இரண்டு நாவல்கள் இன்னும் கையெழுத்துப்பிரதியாகவே இருக்கின்றன. இதைப்பற்றி நான் எவ்வித மனக்கிலேசமும் அடையவில்லை. ஒரு எழுத்தாளன் என்ற வகையில் எனது அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று - ஒரு எழுத்தாளனுக்கு மூலதனம் அவன் எழுத்துத்தான். இது இப்பொழுது பிரசுரமாகிறது.

இந்த நாவல் எழுதுவதற்கும் பிரசுரமாவதற்கும் காரணம் எனது சமீப காலத்தியச் சில அனுபவங்கள். இப்பொழுது சில காலமாகப் "பசுவய்யா" எழுதிய கவிதைகள் என்னைக்கவர்ந்தன. அவர் எழுதிய "நான் கண்ட நாய்கள்" என்ற கவிதைதான் இதற்கு மூல வித்து. நாவலின் முதல் அதிகாரத்தில் இந்தக் கவிதையை நான் வேறு வகையில் அப்படியே எழுதியிருக்கிறேன். இதைத்தொடர்ந்து இதே காலகட்டத்தில் ந.முத்துசாமி "பசுவய்யா" எழுதிய "ஆந்தைகள்" என்ற கவிதையில் "ஆந்தை" என்று குறிப்பிடப்பட்டவன் நான்தான் என்றும் (ஞானரதம் - அக்டோபர் -73. ரசமட்டம் பக்கம் 15) இதைத் தொடர்ந்து சுந்தர ராமசாமி (பசுவய்யா) இது இப்படியில்லை என்றும், எழுத்தாளர்களைக் கதாபாத்திரங்களாகத் தன் சொந்த விருப்பு வெறுப்புகளை வெளியிட "பாத்திரப்படைப்பிற்கான நோக்கங்கள் என்ற பாதுகாப்பில்" முதல் முதலாக நாவல் எழுதினவன் நான்தான் என்றும் (ஞானரதம் - நவம்பர் 1973 - ரசமட்டம் பக்கம் 21) என்றும் குறிப்பிட்டிருந்தார். ஏறக்குறைய இதே சமயத்தில் "ஸிந்துஜா" என் பெயரைக் குறிப்பிடாமல் என் கவிதை ஒன்றை வைத்துக்கொண்டு "தனக்கே"(?) தெரியாமல் கவிதை எழுதும் கவிஞர்களில் நான் ஒருவன் (சதங்கை - செப்ரெம்பர் 73 - அலுப்புத் தரும் நிழல் யுத்தம் - பக்கம் 24) என்று குறிப்பிட்டிருந்தார். இதே பத்திரிகையில் திரு. வெங்கட்சாமிநாதன் என்னுடைய எந்த எழுத்தும் அவருக்கு ஆண்டர்ஸனின் சக்கரவர்த்தியின் ஆடையைத்தான் (சதங்கை - டிசம்பர் 73, பக்கம் 3) நினைவுறுத்துகிறது என்று எழுதியிருந்தார்.




இதையெல்லாம் நான் இங்கு எழுதுவது ஒரு விவாதத்தைக் கிளப்புவதற்கு அன்று. ஒரு எழுத்தாளன் என்ற வகையில் நான் அனுபவத்தை எப்படிக் கையாள்கிறேன் என்பதை சுட்டிக் காட்டுவதற்கே. "பசுவய்யா" எழுதிய "நான் கண்ட நாய்களி"ல் வரும் நாய்களில் நிச்சயமாகப் "பசுவய்யா" என்னை ஒரு நாயாகக்குறிப்பிடவில்லை! ஆனால் எனக்குள் ஒரு கேள்வி எழுந்தது. ஒரு மனிதனை ஒரு நாய் என்று குறிப்பிட்டால் அதை நாம் ஏன் ஒரு சம்பிரதாய வசைமொழியாகக்கொள்ள வேண்டும் என்று எனக்குத்தோன்றிற்று. நாய் என்பதை ஒரு தத்துவக்-குறியீடாக

அனமத்துக் ...
விசாரணை ...
ஒரு முக்கிய ...
போலவே ஒ...
"சக்கரவர்த்தி...

- ந...

எழுப்புமான...
கவனிக்கப்...
தோன்றியது...
இதில் அ...
"ஸிந்துஜா" ...
ஏற்றுக்கொண்...
கொள்கை ...
காட்டுவதும் ...
இந்நாவலில் ...
ஜான் துரைச...
வேண்டுமென்...
என்னைப் பற்...
(எழுத்தாளன் ...
துரைசாமி எ...
வேறு. டி.கே. ...
புதுக்-கவிதை ...
சர்ச்சைக்கு ...
சி.சுப்ரமணிய...
நாவலில் ஒரு...
சேர்ந்தது அ...
விளைவு மா...

கடைசியா...
சந்தித்த மனி...
புத்தகங்கள், ...
இவைகள்தா...
ஆதாரத் தக...
நாவலும் இ...
(கலையே ந...
ஞாபகத்தில் ...
அல்ல. அ...
நான் அதற்கு...

('நாய்கள்' ...

# சினிமா சினிமா

உதயம் என்.எச்4 ஓடவில்லை என்றாலும், தீயா வேலை செய்யணும் குமாரு சித்தார்த்தை தூக்கி நிறுத்தியிருக்கிறது. கோலிவுட்டில் இனி அடுத்த கட்டம், தன் சொந்தக் கதை யில், ஒரு படத்தை தானே இயக்கி, நடிப்பேன் என்கிறார் சித்தார்த்.

ஷங்கர் இயக்கும் "ஐ" படத்தில் விக்ரம் ஜோடியாக நடித்து வருகிறார் எமி ஜாக்சன். பல மாதங்களாக ஷூட்டிங் நடைபெற்று வரு கிறது. சினிமாவின் உண்மை யான கஷ்டங்கள் ஷங்கர் படத்தில் நடிக்கும் போதுதான் தெரிகிறது என்கிறார் எமி.



சகுனி படத்தில், ரஜினி - கமலாக, கார்த்தியும், சந்தானமும் நடித்தது போல், "யாயா" படத்தில், "டோனி - சேவாக்" என்ற பெயர்களில் சிவாவும், சந்தானமும் நடித்துள்ளனர். மற்றபடி கிரிக்கெட் விளையாட்டுக்கும், யாயா படத்தின் கதைக்கும், எந்த சம்பந்தமும் இல்லையாம்.

மறுபடியும் நடிக்க வந்திருக்கும் கவுண்டமணி, வாய்மை உட்பட சில படங்களில் நடித்து வருகி றார். ஆனால், ஜெய்ஹிந்த் படத்தின் இரண்டாம் பாகத்தை இயக்கி நடித்து வரும் அர்ஜுன், முதல் பாகத்தில் நடித்த செந்திலை மட்டும் சேர்த்துக் கொண்டு, கவுண்டமணியை தவிர்த்து விட்டார். அவர் நடித்த வேடத்துக்கு, பிரம்மானந்தம் என்ற தெலுங்கு நகைச்சுவை நடிகரை போட்டிருக்கிறார். "முதல் பாகத்தில் இனித்த என் நடிப்பு, இப்போது, அர்ஜுனுக்கு கசக்கிறது போலும்..." என்று, தன் வருத்தத்தை, தன் பாணியிலேயே கிண்டலாக கூறியுள்ளார் கவுண்டமணி.

கௌதம் வாசுதேவ் மேனன் இயக்கத்தில் சூர்யா நடிக்க உள்ள "துருவ நட்சத்திரம்" படத்தில் ஜோடியாக நடிக்க த்ரிஷாவுக்கும், அமலாபாலுக்கும் இடையே கடும் போட்டி நிலவியதாகவும், இறுதியில் த்ரிஷா நடிப்பது உறுதியாகியுள்ளதாகவும் கூறப்படுகிறது. படத்தின் மற்றொரு கதாநாயகியாக சிம்ரன் ஏற்கெனவே ஒப்பந்தமாகியுள்ளார்.

"ஹீரோக்களிடம் அமர்ந்து, முழுக்கதையையும் சுவாரஸ்யமாக சொல்ல எனக்குத்தெரியாது. அதன் காரணமாகவே, முழுக்கதையையும் கேட்ட பிறகே, படங்களை ஒத்துக்கொண்டு நடிக்கும் விஜய் உள்ளிட்ட, சில மேல்தட்டு ஹீரோக்களை, என்னால் அணுக முடியவில்லை..." என்கிறார் இயக்குநர் சுந்தர்.சி. இருப்பினும், ஒருவரிக் கதையை மட்டுமே கேட்டு, சுந்தர்.சி.யின் அடுத்த படத்தில் நடிக்க, ஒத்துக் கொண்டுள்ளார் அஜீத்.

சமீபத்தில், "இது என் 28ஆவது பிறந்த நாள்" என்று வயதை அறிவித்துக் கொண்டாடியுள்ளார் காஜல் அகர்வால்.

பரத், எரிகா பெர்னாண்டஸ் நடிப்பில் சசி இயக்கும் படம் "555". "பூ" படம் வெளிவந்து ஐந்தாண்டுகளுக்குப் பின் இப்படம் வெளிவருகி றது. திரைத்துறைக்கு வந்த 15 வருடங்களில், சசி இயக்கும் ஐந்தாவது படம் இது. "தமிழில் இதுவரை வெளிவந்த எந்த மாஸ் நடிகரின் கமர்ஷியல் படங்களையும் பார்த்ததில்லை. சரி ஹீரோவுக்காக கதை செய்யலாம் என எண்ணிய போது, அத்தனை கமர்ஷியல் படங்களையும் பார்த்து விட்டேன். ஆனால் என் படம் ஆக்ஷன் ப்ளஸ் கமர்ஷியல் என்றாலும், என் அடையாளத்துடனேயே இருக்கும்" என்கிறார் சசி.

புதுமுக இயக்குநர் ஆஷிக் இயக்கத்தில் தம்பி ராமையா, ஆஷிக், செல்வா, வருண், நேகா நடிக்கும் படம் "உ". ஓலைச்சுவடிகளை பயன்படுத்திய நம் முன்னோர்கள், முதலில் எழுத்தாணியால் "உ" என்பதைத்தான் எழுதிப் பார்ப்பார்கள். ஏனென்றால் அதில்தான் வளைவு, சுழிவுகள் அதிகம். அன்று முதல் இன்று வரை நாம் அந்த "உ" எழுத்தை பயன்படுத்துகிறோம். நல்ல தொடக்கம் என்பதன் பொருளே உ. படத்தில் வரும் எல்லா பாத்திரங்களுமே தன் வாழ்க்கையில் தெரிந்தோ, தெரியா மலேயே ஒரு விஷயத்தை முதல் தடவையாக செய்கிறார்கள். அதை குறிக்கும் விதத்தில் "உ" என்று தலைப்பிட்டோம் என்கிறார் ஆஷிக்.

நடிகர் தாமு, 2005ஆம் ஆண்டு முதல், "லாரிங்ஸ்" என்ற பெயரில், மிமிக்ரி பாடசாலை நடத்தி வருகிறார். இவரது மிமிக்ரி பள்ளியில் 300 பேர் படிக்கின்றனர். 250 பேர் ஆண்கள், 50 பேர் பெண்கள். பயிற்சி பெற்று, பல இடங்களில் மிமிக்ரி நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகின்றனர். இன்று வரை, 8,613 நிகழ்ச்சிகள். அமெரிக்கா, ஐரோப்பா, இலங்கை, சிங்கப்பூர், வளைகுடா நாடுகள், கனடா, நியூசிலாந்து என முப்பத்து மூன்று நாடுகளில், தன் மிமிக்ரி நிகழ்ச்சிகளை நடத்தி, உலகத் தமிழர்களை மகிழ்வித்திருக்கிறார் தாமு.

ஜுராசிக் பார்க் படம் வெளியான போது, அப் படத்தின் ட்ரெய்லரின் சவுண்ட் ட்ராக்கை தாமுவிடம் தந்து, "இதைக் கேட்டு, இதே போல மிமிக்ரி செய்யுங்கள். நல்ல வரவேற்பு கிடைக்கும்..." என்று உற்சாகப்படுத்தியுள்ளார் நடிகர் விஜய். சர்வதேச விழாவில், ஜெனீவா நகரில் நடந்த போட்டியில், ஜுராசிக் பார்க் படத்தின் ட்ரெய்லரை, பல்வேறு விதமான ஒலிகளை தாமு கலந்து, மிமிக்ரி செய்து சர்வதேச போட்டியில் முதல் பரிசு பெற்றாராம்.

---

அமைத்துக் கொண்டு அதைத் தொடர்ந்து விசாரணை செய்வதே இந்த நாவலின் ஒரு முக்கிய நோக்கம். இதைப் போலவே ஒரு கதை ஒரு விமர்சகரிடம் "சக்கரவர்த்தியின் ஆடை என்ற பிரமையை

## ...த்துகள்

**- நகுலன் -**

எழுப்புமானால் எனக்கு அதுவும் ஒரு கவனிக்கப்படவேண்டிய விசயமாகத் தோன்றியதால் அதையும் ஒரு சரடாக இதில் அமைத்தேன். பிறகு நண்பர் "ஸிந்துஜா" குறிப்பிட்டதையும் ஏற்றுக்கொண்டு அதிலும் ஒரு இலக்கியக் கொள்கை அமைந்திருப்பதையும் சுட்டிக் காட்டுவதும் என் நோக்கம்!. பிறகு இந்நாவலில் வரும் ஒரு பாத்திரத்திற்கு ஜான் துரைசாமி என்ற பெயரை வேண்டுமென்றே வைத்திருக்கிறேன். என்னைப் பற்றிய வரை என் பெயர் (எழுத்தாளன் அல்லாத சமயத்தில்) துரைசாமி என்றாலும் ஜான் துரைசாமி வேறு. டி.கே.துரைசாமி வேறு! இந்தப் புதுக்-கவிதை சகாப்தத்தில் அதிகமாக சர்ச்சைக்கு உட்பட்டவர் அமரகவி சி.சுப்ரமண்யபாரதி. அவர் இந்த நாவலில் ஒரு பாத்திரமாக வந்து சேர்ந்தது அகஸ்மாத்தாக வந்த விளைவு மாத்திரம்.


கடைசியாக ஒரு வார்த்தை - நான் சந்தித்த மனிதர்கள், நான் படித்த புத்தகங்கள், நான் பெற்ற அனுபவங்கள் இவைகள்தான் என் படைப்புக்கு உதவும் ஆதாரத் தகவல்கள் ஆனால் எனது எந்த நாவலும் இந்தத் தகவல்களின் "நகல்கள்" (கலையே நகல் என்பதையும் இங்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்!) அல்ல. அவைகளை அப்படிக் கருதினால் நான் அதற்கு ஜவாப்தாரியில்லை.

**('நாய்கள்' நாவலுக்கான முன்னுரையில்)**

---

அமெரிக்க ஐரோப்பிய முதலாளிய நாடுகளால் வெறிபிடித்துத் தேடப்படும் எட்நர்ட் ஸ்னோடெனுக்கு பொலிவியா அடைக்கலம் கொடுக்கத் தயார் என அதன் குடியரசுத் தலைவர் தோழர் ஈவா மொரேல்ஸ் அறிவித்துள்ளார்.

அமெரிக்க ஐரோப்பிய நாடுகளின் மிரட்டலுக்கு மயிரளவுக்குக் கூடத் தான் கவலைப்படப்போவதில்லை



# என்ன இருந்தாலும் நாங்கள் இடதுசாரிகள்...

**- அ. மார்க்ஸ்**

என்றும் பிரகடனப்படுத்தியுள்ளார்.

அதே குரலை மேலும் இரு லத்தீன் அமெரிக்க நாடுகளின் தலைவர்கள், வெனிசூலாவின் நிகோலஸ் மடுரோ. நிகரகுவாவின் டேனியல் ஓர்டெகா ஆகியோரும் எதிரொலித்துள்ளனர்.

என்ன இருந்தாலும் நாங்கள் இடதுசாரிகள்...

ஈவோ மொரேல்சை இந்த வாரம் ..ப்ரான்ஸ், இத்தாலி, போர்த்துகல் முதலிய ஐரோப்பிய நாடுகள் அவமதித்ததும், வியன்னாவில் ஒரு கடத்தல்காரரைப்போல அவர் நடத்தப்பட்டு, அவர் விமானம் சோதனை 'இடப்பட்டதும் நினைவிருக்கலாம்.

இந்த மூன்று இடதுசாரி நாடுகளுக்கும் வாழ்த்துச் சொல்லுவோம்.

---

"மனோதத்துவ ஆராய்ச்சிகளின் முடிவு-கள்" என்றொரு நூல். இங்கிலாந்து ஆராய்ச்சியாளர்களின் முடிவுகள் - கண்டுபிடிப்புகள் அடங்கியது.

எப்படி, எப்படி தூங்குபவர்கள், எப்படிப்பட்டவர் என நூலில் கூறப்பட்டுள்ளது...

குப்புறப்படுத்து தூங்குவோர், சோம்பேறித்தனம் மிகுதியாக உள்ளவர்கள்; உழைப்பில் ஆர்வமில்லாதவர்களாக இருப்பர்; தங்கள் வேலை யின் மீது பற்று இன்றி இருப்பர்.

சுருண்டு படுத்து உறங்குவோர், கோழைகள் எப்போதும், எதற்கும், எதிலும் பிறர் ஆதரவை நாடி நிற்பவர்கள்.

மல்லாந்து படுத்து உறங்குவோர், தன்னம்பிக்கை மிக்கவர்கள் பொதுநலனில் அக்கறை கொண்டவர்கள் பிறரை எளிதில் கவரும் ஆற்றலும் கொண்டவர்கள்.

இப்படிக் கூறப்பட்டுள்ளது. நீங்கள் இதில் எந்த ரகம்? சோதித்துக் கொள்ளுங்கள்!

அடுத்து, ஒருவர் பேசும் போது செய்யும் சேட்டைகளிலிருந்து அவரது குணத்தைக் கணிக்க முடியும் என்கின்றனர்...



நின்று கொண்டு பேசும்போது, தலையை விரல்களால் சொரிந்தபடி நிற்பவர்கள் ஞாபகமறதிக்காரர்கள்!

விரல் நகத்தைக் கடித்துக் கொண்டே பேசுபவர்கள், எந்தக் காரியத்தையும் அதிக நேரம் எடுத்துக்கொண்டு செய்யும் சுறுசுறுப்பில்லாதவர்கள்!

சட்டைப் பொத்தானைத் திருகிக் கொண்டே பேசுபவர்கள் தன்னம்பிக்கை இல்லாதவர்கள்.

அருகில் உள்ள மேசை மீதோ, நாற்காலி மீதோ விரலால் தட்டிக் கொண்டே பேசுபவர்கள் அலட்சிய மனோபாவம் கொண்டவர்கள்!

விரலை மடக்கி, உள்ளங்கையில் தேய்த்துக் கொண்டே பேசுபவர்கள் பயந்த சுபாவம் உடையவர்கள்.

இதிலும் நீங்கள் எந்த ரகம்? என்பதை சோதித்துக் கொள்ளுங்கள்!

# நீங்கள் எந்த ரகம்?



மண்டைதீவு முகப்புவயல் அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் நேற்று முன்தினம் தேர் உற்சவத்தின் போது சுவாமி எழுந்தருள்வதையும், சுவாமி தேரில் வலம் வருவதையும் பக்தர்கள் ஆர்வத்துடன் தேங்காய் உடைப்பதையும் காணலாம். (21)

# அபிவிருத்தி செயற்பாடுகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு



உடுவில், சண்டிலிப்பாய் சங்கானை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்றுவரும் அபிவிருத்தி செயற்பாடுகளின் முன்னேற்றம் குறித்த விசேட ஆய்வுக் கலந்துரையாடல் கடந்த 6 ஆம் திகதி நடைபெற்றது.

ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற இவ் விசேட ஆய்வுக் கலந்துரையாடலில், குறித்த பிரதேசசெயலர் பிரிவுகளில் பிரதேச சபைகளால் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் குறித்தும் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றம குறித்தும் ஆராயப்பட்டது.

இதன்போது பிரதேசசபைகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் சீரான செயற்பாட்டைக் கொண்ட ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரின் பிரதேச சபைகளின் செயலாளர்களுக்கு பணிப்பு விடுத்தர். மேலும் அரச சார்புற்ற நிறுவனங்கள் நேரடியாக குறித்த சில பகுதிகளுக்கு மட்டும் சென்று வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முனைவதால் குறித்த செயற்திட்டத்தின் தேவை அதிகமாகவுள்ள பிரதேச மக்களின் தேவைகள் நிறைவு செய்யப்படுவதில்லை. எனவே, மக்களின் பிரச்சினைகளை அறிந்து வைத்திருக்கும் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச செயலகங்களின் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மீள்குடியேற்றப்பட்ட பொன்னாலை பகுதியில் நடைபெற்று வரும் வேலைத்திட்டங்கள் குறித்தும், அம்மக்களுக்கான வீட்டுத்திட்டங்கள் குறித்தும் இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டது. குறித்த மூன்று பிரதேச செயலர் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத்திட்டங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்த ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், ஆரம்பிக்கப்பட்டு இதுவரை நிறைவு பெறாத திட்டங்களை துரித கதியில் நிறைவு செய்ய வேண்டும் எனவும், திட்டங்களின் பயன்களை மக்கள் குறித்த காலத்தில் பெற்றுக் கொள்ளும் வகையில் உரிய காலத்தில் வேலைகள் நிறைவு செய்யப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

அத்தோடு நடைமுறையில் உள்ள மற்றும் நடைமுறைப் படுத்தப்படவுள்ள வேலைத்திட்டங்களை உரிய முறையில் மேற்கொள்வது தொடர்பாக ஆலோசனைகளையும் நாடாளுமன்ற உறுப்பினர் வழங்கினார்.

இக்கலந்துரையாடலில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர ஜெகூ, யாழ்.மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஜக்சீல் ஆகியோரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சோதிநாதன், உடுவில் பிரதேசசெயலர் நந்தகோபாலன், சங்கானை பிரதேசசெயலர் முரளிதரன் ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் வலி.தென்மேற்கு அமைப்பாளரும், ஈ.பி.டி.பி.யின் வலி. தென்மேற்கு பிரதேச இணைப்பாளரும், மானிப்பாய் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான வெ.அன்ரன் ஜோன்சன் (ஜீவா), வலி.தென் மேற்கு பிரதேசசபை உறுப்பினர்களான செல்வராசா, நடராசா, நாகேந்திரம் ஆகியோர் மற்றும் ஈ.பி.டி.பி.யின் வலி.தென்மேற்கு பிரதேச இணைப்பாளரும், சுழிபுரம் பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவருமான பாலகிருஷ்ணன் (ஜீவன்), செல்வகுமார் ஆகியோரும், பிரதேச சபைகளின் செயலாளர்களும், வேல்ட்விஷன், டீ.ஆர்.சி, சேவா லங்கா, வைக்ரோ ஆகிய அரச சார் பற்ற நிறுவனங்களின் பிரதீ நிதிகளும் மற்றும் பிரதேச செயலகங்களின் பிரதித் திட்டப் பணிப்பாளர்களும், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும், பட்டதாரிப் பயிலுநர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## எலி விஷத்தால் இரு சிறுவர் பலி

மாத்தறை கம்புறுபிட்டிய பிரதேசத்தில் எலிகளை கட்டுப் படுத்துவதற்கு வைக்கப்பட்டிருந்த விஷம் கலந்த உணவை உட்கொண்ட சிறார்கள் இருவர் பலியாகினர்.இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் 1.20 அளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் 3 மற்றும் 6 வயது மதிக்கத்தக்க சிறுவர்கள் என்று விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது. வீட்டில் தீங்கு விளைவிக்கும் எலிகளை கட்டுப்படுத்துவதற்காக, பெற்றோர் விஷம் கலந்த உணவை அவை சஞ்சரிக்கும் இடத்தில் வைத்திருந்தனர்.

பெற்றோர்களின் கவனக் குறைவாலும், சிறுவர்களுக்கு எட்டக்கூடிய இடத்தில் விஷம் கலந்த உணவு வைக்கப்பட்டமையாலும் இந்த உயிர்ச் சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## புத்தகயாவிற்கான யாத்திரை ஒருவாரத்திற்கு நிறுத்தம்

இந்தியாவின் புத்தகயா மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்த விசாரணைகள் காரணமாக எதிர்வரும் ஒருவார காலத்திற்கு யாத்திரை மேற்கொள்ள வேண்டாம் என்று இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றைய தாக்குதல் இலங்கை யாத்திரிகர்களையோ, மத குருக்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட ஒன்று அல்ல வென அவர் எமது சேவைக்கு தெரிவித்தார். நேற்று முன்தினம் காலை 8 வெடிகுண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றதாக இந்திய பொலிஸாரை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

## ரயில்வே ஊழியர்கள் இணைந்து 48 மணிநேர பணிப் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

ரயில்வே ஊழியர்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் 48 மணித்தியால தொடர் பணிப் பகிஷ்கரிப்பை ஆரம்பித்துள்ளனர். சம்பள முரண்பாடுகளுக்கு தீர்வு வழங்க வேண்டும் என வலியுறுத்தி இந்த தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ர்யில் உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் ஜனக்க பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ரயில்வே சார திகள், நிலையப் பொறுப்பதிகாரிகள், ரயில் கட்டுப்பாட்டாளர்கள் உள்ளிட்ட மேற்பார்வை தரத்திலான பதவிகளை வகிக்கும் அனைத்து உத்தியோகத்தர்களும் இந்தப் பணிப் பகிஷ்கரிப்பில் இணைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரயில் சேவையுடன் நேரடியாக தொடர்புள்ள உத்தியோகத்தர்கள் இந்த தொழிங்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதால் ரயில் சேவைகளை ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு கிடைக்காது எனவும் ரயில் உத்தியோகத்தர்கள் தொழிங் சங்க ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளருடன் மூன்று தடவைகளும் அமைச்சர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் பல தடவைகள் பேச்சுவார்த்தைகளை நடத்தியும் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஒரு வருடத்திற்கும் மேலாக பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டாலும் சம்பள நிர்ணய ஆணைக்குழு தமக்கான தீர்வினை வழங்கவில்லை என ரயில் உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.ஏற்கனவே பல தடவைகள் தொழிற்சங்க நடவடிக்கைக்கான அறிவித்தல் விடுக்கப்பட்டாலும் பயணிகளின் நலனை கருத்திற்கொண்டு அவை கைவிடப்பட்டதாக ஒன்றியத்தின் ஏற்பட்டாளர் தெரிவித்துள்ளார்.

தமது தொழிற்சங்க நடவடிக்கை நூறு வீதம் வெற்றியளித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். நாடு முழுவதும் ரயில் சேவைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளமையினால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## தாதியர் பயிற்சிக் கல்லூரிகள் நவம்பருக்குள் மறுசீரமைப்பு

இலங்கையிலுள்ள தாதியர் பயிற்சிக் கல்லூரிகளை இரண்டு பணிப்பாளர் நாயகங்களின் கீழ் கொண்டுவருவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கு அமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. இலங்கையில் தற்போது 18 தாதியர் பயிற்சிக் கல்லூரிகள் இயங்குகின்றன.

குறித்த தாதியர் பயிற்சிக் கல்லூரிகள் அமைந்துள்ள மாவட்டத்தில் பிரதான வைத்தியசாலையின் பணிப்பாளரின் கீழ் தற்போது அந்தக் கல்லூரிகள் இயங்குகின்றன. எனினும் இதன்போது தாதியர் பயிற்சிக் கல்லூரிகளில் பல்வேறு நிர்வாகப் பிரச்சினைகள் எழுவதாக சுகாதார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

புதிய தீர்மானத்திற்கு அமைய இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை சுகாதார அமைச்சின் பிராந்திய அதிகாரிகள் தாதியர் பயிற்சிக் கல்லூரிகளின் நிலைமையை ஆராயவுள்ளனர். எதிர்வரும் நவம்பர் மாதத்திற்கு முன்னதாக அனைத்து தாதியர் பயிற்சிக் கல்லூரிகளையும் மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

# வல்லை மகளிர் வித்தியாலயத்தின் டெங்கு விழிப்புணர்வு பேரணி



(யாழ்ப்பாணம்)

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு வல்வை மகளிர் மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள்,மாணவர்களினால் டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வுப் பேரணி ஒன்று இடம்பெற்றது. நெடியகாட்டில் இருந்து ஆரம்பித்து,வேம்படி சந்தியூடாக வல்வெட்டித்துறைச் சந்தியை அடைந்து அங்கு சிறிது நேரம் விழிப்புணர்வைத் தூண்டக்கூடிய சுலோகங்களை எழுப்பியபின் தெணியம்பை ஊடாக உடையாமணல் மற்றும் வேம்படியூடாக பாடசாலையை அடைந்தனர்.இப் பேரணியை பாடசாலையின் முன்னால் வைத்து வல்வெட்டித்துறை நகர பிதா ந.அனந்தராஜ் ஆரம்பித்து வைத்தார்.

நகரத்தின் சூழல் மற்றும் சுகாதாரத்தைப் பேணுவதில் நகர சபைக்கு மட்டுமலலாது,கூடிய பொறுப்பு சமூகத்தின் கைகளிலேயே தங்கியுள்ளது.தெருவில் குப்பைகளை வீசி எறிவதும், வீட்டின் முன்னால் சிறு மரம்செடி கொடிகளை வளர விடுவதும் கழிவு நீரைத் தெரு வீதிக்கு விடுதல் போன்ற சுகாதார சீர்கேடான செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த வேண்டியதும் அவர்களுக்கான விழிப்புணர்வை வழங்க வேண்டியதும் மாணவர்களாகிய உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. இத்தகைய விழிப்புணர்வு ஊர்வலங்களை ஒழுங்கு செய்த பாடசாலை அதிபர்,ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்று நகரசபைத்தலைவர் இதன் போது தெரிவித்தார். ஊர்வலத்தில் கலந்து கொண்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் முன்னிலையில்,இப் பேரணியை ஏற்பாடு செய்ததன் நோக்கங்களையும் எதிர்காலத்தில் மாணவர்கள் ஊடாக சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை சமூகத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று பாடசாலையின் அதிபர் செல்வி சுப்பிரமணியக்குருக்கள் தெரிவித்தார். பேரணியின் முடிவில் வல்வெட்டித்துறை சந்தியில் வைத்து நகராட்சி மன்றத்தின் உபதலைவர் க.சதீஸ் பங்குபற்றி மாணவர்களின் இந்த முயற்சியைப் பாராட்டினார். சுமார் ஒரு கிலோமீற்றர் தூரம் வரை இடம் பெற்ற இப் பேரணியைத் தொடர்ந்து பாடசாலையின சுற்றுப் புறச்சூழல் மாணவர்களால் துப்புரவு செய்யப்பட்டது.

# நவீல்ட் பழையமாணவர்சங்க 46 ஆண்டு நிறைவு விழா




கைதடி நவீல்ட் செவிபுலன் வலுவற்றோர் பாடசாலை பழைய மாணவர் சங்கம் 46ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த பொதுக்கூட்டமும் தலைவர் க.பிரகாஸ்தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி.யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேசசபையின் எதிர்க்கட்சி தலைவரும் ஈ.பி.டி.பி.யின் நல்லூர்ப் பிரதேச அமைப்பாளருமான அம்பலம் ரவீந்திரதாசன் (ஜே.பி) சிவபூமி பாடசாலை தலைவர் கலாநிதி ஆறு.திரு முருகன், வட மாகாணம் பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் இலங்கை தமிழ் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் பேசுகையில் வட மாகாணத்தில் அபிவிருத்தி வேலை வாய்ப்பு, வீட்டுத்திட்டம் மின்னிணைப்பு உட்பட பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுவருகிறார் என்பது யாவரும் அறிந்த விடயம் உங்கள் தேவைகளை யும் உதவிகளையும் நாடாளுமன்ற உறுபபினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) ஊடாகவும் அமைச்சர் ஊடாகவும் நாம் செய்யத் தயாராகவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

# ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய உற்சவம் ஆரம்பம்



முல்லை மாநகரில் அமைந்துள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த திருவிழா கொடியேற்ற நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. கற்சிலைமடு சம்மனந்தார் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு ஆலய பிரதம குருக்கள் கீர்த்தி சிறிவாசன் குருக்களால் கொடியேற்ற நிகழ்வு இடம்பெற்றது. எம்பெருமானுக்கு பூசைகள் நடைபெற்று 16 நாள்கள் விசேட திருவிழாக்கள் இடம்பெறவுள்ளது வேட்டைத்திருவிழா, சப்பற உற்சவம், தேர்த் திருவிழா, தீர்த்த உற்சவம், பூங்காவனம், ஆகிய திருவிழாக்கள் இவ ஆலயத்தில் சிறப்பாக இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.(40)

# ஏ-9 வீதியில் இருள் சிரமங்களுடன் பயணம்

ஏ-9 வீதியில் கொடிகாமத்தில் இருந்து புத்தூர் சந்திவரையான வீதி மின்விளக்குகள் இல்லாது இரவில் இருள்சூழ்ந்த பகுதியாக உள்ளது. இந்தப் பகுதியில் சில மின்விளக்குகள் உள்ள போதிலும் அவை உரிய செயற்பாடு இன்றி ஒளிராமல் உள்ளது. இவ் வீதியில் துவிச்சக்கர வண்டியில் பயணம் செய்வோர். பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து சாவகச்சேரி பிரதேசசபைக்கு உட்பட்ட இவ்வீதிக்கு மின் விளக்குகளைப் பொருத்தி பொது மக்களின் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (130)

# பதிவிறக்கப் பெட்டகம்

நான் பாலைவனத்தையும் ஒட்டகத்தையும் முதலில் பார்த்தது சினிமாவின் அசையும் பிம்பங்களின் வழியாகத்தான். பனிப்பொழிவையும் உறைந்த ஏரிகளையும் சினிமாதான் எனக்குக் காட்டியது. நான் வரலாற்றுப் புத்தகத்தில் படித்த நாடுகளைக் கண்ணால் கண்டதும் திரையில்தான். அந்த நாடுகளை, அவற்றின் மன்னர்களும், சதிகளும், படைகளும், போர்களும் மட்டுமேயாக வரலாறு காட்டியபோது; அது அப்படி அல்ல, எளிய மனிதர்களால் நிரம்பியதே அந்த நாடுகள் என்று எனக்கு உறைக்க வைத்தது சினிமாதான். இன்று எனக்கு ஈரான் என்றால், முதலில் நினைவுக்கு வருவது ஷாக்களோ, முல்லாக்களோ, எண்ணெய்க் கிணறுகளோ, உலக அரசியலோ அல்ல. நல்லெண்ணங்களும் வெள்ளை மனங்களும் கொண்ட சாதாரண மனிதர்களும், ஏழை இஸ்லாமியக் குடும்பங்களும்தான். இதை என்னுள் விதைத்தது முழுக்க முழுக்க ஈரானிய சினிமாதான்.

பூமிப் பந்தின் மேல் வரையப்பட்டிருக்கும் ஏராளமான எல்லைக் கோடுகளைத் தாண்டிச் சென்று, வேற்றுநாட்டு மனிதர்களை அவர்களின் உறவுகள் சூழல் எல்லாவற்றோடும் சேர்த்து நெருங்கி அறிவதற்கு, சினிமாவே சிறந்த கலை வடிவம். உலக இலக்கியத்தை நாம் அறிய மொழி ஒரு தடையாக இருக்கிறது. ஆனால் சினிமா என்கிற காட்சிக் கலைக்கு அத்தகைய தடைகள் எதுவும் இல்லை. பொது வாக எந்தக் கலை வடிவமும் புரிபடுவதற்கு ஓரளவாவது ரசனைப் பயிற்சி அவசியம். ஒப்பீட்டளவில் சினிமா எளியது.

நாம் சினிமா என்கிற வாகனத்தில் ஏறி, கடல் பயணம் முதல் விண்வெளிப் பயணம் வரை சென்றுவர முடிகிறது. எல்லைகள் கடந்த மாபெரும் மானுடத்தை சினிமா சாத்தியமாக்குகிறது. அரசியல் எல்லைகளை அழிப்பதுதான் சினிமாவின் முக்கியமான அரசியல் செயற்பாடு என்று நான் நினைக்கிறேன். புவியியல் எல்லைகளும், பொருளாதாரப் பழநிலைகளின் எல்லைகளும், மத நம்பிக்கைகளின் எல்லைகளும், இன–மொழி–சாதி எல்லைகளும் தான் அரசியலைத் தீர்மானிக்கின்றன. இந்த எல்லைகளை அழிக்க முயல்வதின் மூலமாகக் கலை அந்த அரசியல்களுக்கு எதிரான இன்னொரு அரசியலை முன்வைக்கிறது. அது 'மானுடம்' என்கிற அரசியல்.

– சார்லஸ்

திரைப்படத்துக்கு அறிவைத் தாண்டி உணர்வைத் தொடும் ஒரு தன்மை உண்டு – சங்கீதம் போல. சில காட்சிகள் படத்துக்கு சம்பந்தமற்றவை போலத் தோன்றினாலும், ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் இயக்குநர் சொல்ல வருவதை ஆத்மார்த்த ரீதியாக உணர வைத்துவிடக் கூடியது இம்மொழி.

– எஸ்.தேவபிச்சை

எனக்கு கமர்ஷியல் மசாலா படங்களின் மீது எந்தப் புகாரும் இல்லை. எனக்குப் பிடித்த கமர்ஷியல் படங்களில் முதன்மையானவை என சில படங்களைச் சொல்லுவேன். பாட்ஷா, அருணாச்சலம் போன்ற ரஜினி படங்கள். மன்மத லீலை போன்ற கமல் நடித்த நகைச்சுவை படங்கள். வரலாறு, தரணியின் மூன்று தொடர்ச்சியான ஹிட்ஸ் தில், தூள், கில்லி [அவருடைய ஒஸ்தி ஒரு குப்பை] என்று பெரிய பட்டியலே போடலாம். அபத்தமான படமாக இருந்தாலும் துப்பாக்கி கூட என்னை இரண்டு மணி நேரம் உட்கார வைத்தது. இந்த வகையில் கௌதம் மேனனின் நடுநிசி நாய்கள், நீதானே என் பொன் வசந்தம் தவிர்த்த மற்ற எல்லா படங்களுமே உயர் தரமான பொழுது போக்குப் படங்கள். வேட்டையாடு விளையாடு, பச்சைக்கிளி முத்துச்சரம், விண்ணைத் தாண்டி வருவாயா [சிம்புவையே நடிக்க வைத்திருப்பவர் பெரிய வித்தைக்காரராகத்தான் இருக்க வேண்டும்]. இவருடைய பொழுதுபோக்குப் படங்களில் உச்சம் வாரணம் ஆயிரம். இந்தப் பட்டியலில் என்னை ஆகக் கவர்ந்த பொழுதுபோக்குப்படம் கஜினி. அது மெமெண்டோவின் கொப்பி என்பதெல்லாம் எனக்குத் தேவையில்லாதது. ரெண்டு மணி நேரம் செமயாகப் போகிறதா? அது ஒன்றுதான் பொழுதுபோக்குப் படங்களைப் பொறுத்தவரை என்னுடைய எதிர்பார்ப்பு. ஆனால் நான் இதே அளவு கோலை மாற்று சினிமாவுக்கு வைக்க முடியாது. உதாரணமாக, பொன்னியின் செல்வன் நாவலில் ஏன் ஷேக்ஸ்பியர் அளவுக்கு nuances இல்லை என்று நான் கேட்க முடியாது. ஏனென்றால், பொன்னியின் செல்வன் ஒரு பொழுது போக்கு நாவல். காவியம் அல்ல. இந்தப் பின்னணியில்தான் தமிழின் மாற்று சினிமா எனக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தருகின்றன.


– சாரு நிவேதிதா




# ஒலிம்பிக் விளையாட்டு

சர்வதேச விளையாட்டு போட்டி. புராதன கிரேக்க நகரமான ஒலிம்பியாவில் முதன்முதல் நடைபெறத் தொடங்கியதால் அப்பெயரைப் பெற்றது. நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை இது நிகழும். கி.மு. 776 இல் ஆரம்பமானது. நவீன ஒலிம்பிக் போட்டிகள் 1896 இல் ஏதென்ஸ் நகரில் ஆரம்பமாகியது.


ஐந்து வளையங்கள் ஒலிம்பிக்கின் சின்னமாகும். ஒன்றுடன் ஒன்று இணைந்த இந்த ஐந்து வளைங்களும் ஒவ்வொரு கண்டத்தைக் குறிக்கின்றன. நீல வளையம் ஐரோப்பா, மஞ்சள் வளையம் ஆசியா, கறுப்பு வளையம் ஆசியா, கறுப்பு வளையம் ஓசானியா, சிவப்பு வளை



யம் அமெரிக்கா, பச்சை வளையம் ஓசானியா 'Swifter, Higher, Stronger| என்பது ஒலிம்பிக்கின் மகுட வாசகம். ஒலிம்பிக் தீபம் 1928 இலிருந்து ஏற்றப்பட்டு வருகின்றது. விளையாட்டில் முதல் மூன்றிடத்தினைப் பெற்றவர்களுக்கு தங்கம், வெள்ளி, வெண்கலம் என்பவனவற்றால் ஆகிய பதக்கங்கள் முறையே வழங்கப்படும். விருதுகளும் வழங்கப்படும்.

பல்வேறு நாடுகளில் முறைவைத்து ஒலிம்பிக்ஸ் விளையாட்டு நடைபெறுகிறது. 1896 இல் அதென்ஸ் (கிரிஸ்), 1900 இல் பாரிஸ் (பிரான்ஸ்), 1932 இல் அம்ஸ்ரடாம் (நெதர்லாந்து), 1944 இல் லண்டன் (ஐக்கிய இராக்கியம்), 1968 இல் அற்றலான்ரா (அமெரிக்கா), 2000 சிட்னி (அவுஸ்ரேலியா), 2004 அதென்ஸ், 2008 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் சீனாவில் பெஜ்ஜிங் நகரில் நடைபெற்றன.

# நினைக்கப்பட வேண்டியவர்கள்



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

**கல்வியுடன் தொடர்பபுடைய பதங்களின் விரிவாக்கம்**

SLPS Sri lanka Principle Service
SLTS: Sri lanka Teachers Serric
NIE: National Institute of Education
SLTES:- Srilankan Teachers Education Service
NETS: National Education testing services

5E
1. E1 Engagement தொடர்புபடுதல்
2. E2 Expoloration தேடி அறிதல்
3. E3 Explanation கண்டறிதல்
4. E4 Elaboration விரிவுபடுத்தல்
5. Evalution மதிப்பிடல்


SBA :- School Basic Assestement
AETS:- Association of Education and Technology

- 15வது தேசிய பல்கலைக்கழகம் ஊவா வெல்லச பல்கலைக்கழகம்
- இலங்கையில் உள்ள தேசிய பாடசாலைகள் எண்ணிக்கை 328
- ஒரு ஆசிரியருக்கு மாணவர் எண்ணிக்கை 19
- க.பொ.த சாதாரண தரத்தில் ஒரு மாணவன் தோற்றக் கூடிய கட்டாய பாடம் - 06
- க.பொ.த சாதாரண தரத்தில் ஒரு மாணவன் தோற்றக்கூடிய ஆகக் கூடிய விருப்பு பாடங்கள் - 04
- இலங்கை பாடசாலை வகைகள்
  3II 3 I 2II 2I I
- இலங்கை ஆசிரிய சேவை தரங்கள்
- I AB, IC வகை II வகை III
- ஆசிரியர்களுக்கான வான்மை விருத்தி பயிற்சிகளை வழங்கும் நிறுவனங்கள்
  தேசிய கல்வியியல் கல்லூரி, ஆசிரியர் பயிற்சி கலாசாலை, தேசிய கல்வி நிறுவகம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | 100 |

## மேலிருந்து கீழ்

1) பனங்காட்டு நரி இதற்கு அஞ்சாது.
2) படைக்கு பிந்து, இதற்கு முந்து (குழம்பியுள்ளது)
4) கடவுளின் செயலுக்கு இது உண்டு. (திரும்பியுள்ளது)
5) பசுவின் கழிவுகளிலொன்று. (திரும்பியுள்ளது)
10) தசாவதார நடிகர்.
16) சமயலுக்குத் தேவை.
28) செய்தி.
33) ஆண்கள் கோவிலில் செய்வது.
54) யாழ்ப்பாணமரம் (திரும்பியுள்ளது.
56) இதற்குப் பிணமும் வாய் திறக்குமாம்.
57) மொத்தமானவர்கள் இல்லாதபோது அவர் பெயர்
62) வைபவங்களுக்குத் தேவையான இலை.
65) வைரம் இப்படி அடிக்கும்.
69) பறை அடித்து இது சொல்வர் (திரும்பியுள்ளது)
78) இராவணன் சீதையைக் கண்ட இடம்.
81) ஒட்டியாணம் இங்கு அணிவர்.
86) கிரிக்கட்டில் பாவிக்கப்படும் ஆங்கில சொல்.




## இடமிருந்து வலம்

1) அரைத்துப் பூசலாம்.
7) முகம் பார்க்க (திரும்பியுள்ளது)
14) பாதையை இணைப்பது (திரும்பியுள்ளது)
21) ஆட்சியைக் கைப்பற்ற இது செய்வர்.
24) இலக்கியம் படிக்க இது தேவை.
28) இது அடித்து ஓய்ந்தது போல்.
33) நடிகையின் பெயர் (திரும்பியுள்ளது)
37) விதியை இதனால் வெல்லலாம்.
48) தியேட்டரில் சரியான இது. (திரும்பியுள்ளது)
53) தானிய வகை
56) தூரத்திற்கான தமிழ் அளவு.
62) பொங்கல், தீபாவளிக்கானது. (குழம்பியுள்ளது)
77) தமிழில் கிரேக்கம்.
81) ஆங்கிலத்தில் நாட்குறிப்பு.
86) இலங்கையிலுள்ள முருகன் கோவில் உள்ள இடம்.
91) அறிவாளிகள் இப்படியும் இருப்பர்.
96) தங்கத்தைப் போடுவது (குழம்பியுள்ளது)

# காந்தி வேடத்திற்குப் பொருத்தமான நடிகர் யார்?





*சிறுவர் திறன் விருத்திக்காக தினமுரசு முன்னெடுக்கும் சிறுவர் முரசு ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமைகளில் உங்கள் அறிவியலிற்கு விருந்தளிக்கும். இச் சிறுவர் முரசில் உங்கள் ஆக்கங்களும் பிரசுரமாக வேண்டுமெனில் சிறுவர் முரசு, தினமுரசு, இல 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். சித்திரங்கள் கவிதைகள், கதைகள், பழமொழிகள், விடுகதைகள் என தரமான ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.*

# க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்

தமிழ்

மூன்று மணித்தியாலம்

நவரட்ணம் சத்தியவேந்தன்
B.S(Hons) M.phl

**(அறிவுறுத்தல் :- பகுதி I இல் இரு வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து விடை எழுதுக.**

1) மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

01) கருங்கால் வேம்பி னொண்பூ யாணர்
என்னை யின்றியுங் கழிவது கொல்லோ
ஆற்றய லெழுந்த வெண்கோட் டதவத்
தெழுகுளிறு மிதித்த தொருபழம் போலக்
குழையக் கொடியோர் நாவே
காதல ரகலக் கல்லென் றவ்வே

(அ) இச்செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் தெளிவாக எழுதுக.
(ஆ) தலைவியின் மன உணர்வுகள் நுண்ணிதாக வெளிப்படு மாற்றினைத் துலக்குக.
(இ) இச்செய்யுள் மூலம் விளங்கும் சங்ககால அகத்திணை இலக்கிய மரபுகளை எடுத்துக்காட்டுக.

2) மாற்றுக்களி றடைந்தாய் என்று மதவேழங்கை யெடுத்து
மூற்றித்தழ லுமிழ்ந்தும்மதம் பொழிந்தும் முகஞ் சுழியத்
தூற்றத்தரிக் கில்லேனென்று சொல்லியய லறியத்
தோற்றிச்சென்று பிடிசூளறுஞ் சீபர்ப்பத மலையே

அப்போதுவந் துண்டீர்களுக் கழையாதுமுன் னிருந்தேன்
எப்போதும்வந் துண்டால்எமை எமர்கள்சுழி யாரோ
இப்போதெமக் கிதுவே தொழில் என்றோடிஅக் கிளியைச்
செப்பேந்திள முலையாள் எறி சீபர்ப்பத மலையே

(அ) இப்பாடல்கள் இடம்பெறும் சந்தர்ப்பங்களை விளக்குக.
(ஆ) பண்டைத் தமிழரின் பண்பாட்டு உணர்வு வெளிப்படும் விதம் யாது?
(இ) சுந்தரரின் கவித்துவ ஆற்றலை மதிப்பிடுக.
(ஈ) சீபர்ப்பதமலையின் சிறப்பு யாது?

(24 புள்ளிகள்)

02) 'அ' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

'ஆ' பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ) பத்தாம் திகதியில் சம்பளமாம் சின்னப்
பையனுக்கோ பெருங் கொண்டாட்டம்
மொத்த மாகச் சம்பளம் வாங்கிடுவா, அம்மா
முழுசா ஒருரூவா தந்திடுவா எனச்
சித்தம் நிரம்பிய ஆசையிலே, தன்
தோழர் பலருக்கும் சொல்லி வைத்தான்

முத்தம்மா சம்பளம் வாங்கி வந்தாள் - அவன்
முதுகுல நாலு கொடுத்து வச்சாள்

வாழைப்பழம்... மிட்டாய், முறுக்கு வடை
வாங்குங்க! வாங்குங்க! என்று இந்த
ஏழைங்க காசைப் பிடுங்கிட வேவந்த
வியாபாரிகள் இடும் கூச்சல்களும்
ஊளை ஒழுக வாய் எச்சில் வடிய, தன்
உள்ளத்தி லேபெரும் ஆசையுடன் - அம்மா
சேலை முந்தானையைப் பற்றிக்கொண்டேவரும்
செந்தா மரையோ சிணுங்கிடுவாள்

சீவி முடிச்சி, சிரிக்கலைன்னா? நல்லாச்
சிங்காரம் பண்ணித் தளுக்கலைன்னா
பாவிப் பயஅரைப் பேரு போட்டான்? அவன்
பாடையிலே போக, மாடாக என்
ஆவி துடிக்கச் சுமந்து வந்தும், தினம்
அரைப் பேரு போட்டுல்ல வச்சிருக்கான்
கேவி யழுது புலம்பிக் கொண்டே வரும்
குப்பாயி நெஞ்சில் பெரு நெருப்பு
காமாச்சிக்கு எம்பத் தஞ்சிரூபா அவ
கையில வாங்கிட்டா பாத்தியாடி, சுத்த
சோமாறி வேலைக்குப் போமாட்டா, போனா
சொத்த வேலை, துப்புப் பட்டிடுவா
ஏமாளி கந்தன் அவபுருசன் - அவ
இழுத்தஇழுப்புக்கு வளையுறானே என
உரோமஞ் சிலிர்க்க வசைபாடும் - சின்ன
ருக்குமணிக்கோ, வயித்தெரிச்சல்

1) தோட்டத்தொழிலாளர்களின் வாழ்வியல் முறை சித்திரிக்கப் பட்டிருக்குமாற்றினை விளக்குக.

2) பெண்தொழிலாளர்களின் மனக்குமுறல் வெளிப்படுமாற்றினை ஆராய்க.

3) கவிஞரின் மொழிப்பிரயோகம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

4) சம்பளநாள் என்ற தலைப்புப் பொருந்துமாற்றினைத் துலக்குக.

**அல்லது**

ஆ) ஆற்றல் நிறைந்த செஞ்சொற் புலவர்களால் அமைக்கப்பட்ட பாடல்களுக்கு உயிருண்டு. வலிமையுண்டு. பிரான்சு தேசத்துக்குப் புத்துயிரளித்துச் சமத்துவம் சோதரத்துவத்தோடு கூடிய சுயராச்சியத்தைப் பெறச் செய்தது ஓர் இன்னிசைக் கவிதையன்றோ? இமயம் முதற் குமரியீறாகக் கிடந்த வளம் நிறைந்த தமது தாய்நாட்டின் மீது அனைவருக்கும் அன்புண்டாகச் செய்து ஒன்றுகூட்டி வைத்தது வங்கமொழிக் கவிவாணர் ஒருவர் பாடிய 'வந்தேமாதரம்' என்னும் பாட்டன்றோ? உயிரற்றுக் கிடக்கும் வெற்றெலும்புக்கும்

உயிரளிக்குமாற்றல் பாட்டுக்கு உள்ளதாதலின் உத்தமக்கவிகளின் பாடல் நாட்டுக்குப் பெருநலத்தையளிக்கும் நீர்மையவாம்.

இரண்டு கோடித் தமிழ் மக்களுக்கும் புத்துயிரையும் புதிய ஆற்றலையும் தந்து உலகத்திலுள்ள ஏனைய மக்கட்தொகுதியினரோடு ஒப்புறவிருத்தி உயர்வினையளிக்கும் நீர்மையவாகிய சங்கச் செய்யுட்கள் தொன்மையாதலின் கற்றோர்க்கு அன்றி மற்றோர்க்குப் பயன்படாவாயின. சங்கச் செய்யுட்களுள்ளே செறிந்து கிடக்கும் காதலின் பத்தையும் வீர மேம்பாட்டையும் யாவரும் எளிதிலுணர்ந்து கொள்ளற் பொருட்டு இலகுவான நடையிலமைந்த இன்னிசைத் தமிழ்ப் பாடல்களாற் சொல்லவல்ல கவிவாணர் தமிழ்நாட்டுக்குப் பேருபகாரிகளாவர். இத்தகைய கவிவாணருள் முன்வைத் தெண்ணப்படும் தகைமை சான்றவர் ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியார், தமிழ்நாடு செய்த தவப்பயனாயுதித்த பாரதியார் தமது இன்னிசைப் பாடல்களினால் தமிழ்நாட்டுக்கும் தமிழ்மொழிக்கும் அளத்தற்கரிய பேருபகாரத்தைச் செய்திருக்கிறார்.

1) செஞ்சொற்கவிவாணர் இயற்றும் கவிதையன் தன்மை பற்றிய கட்டுரையாசிரியரின் கருத்தை விளக்குக.

2) சங்கச் செய்யுளின் தன்மை பற்றியும் அதன் தற்காலப் பொருத்தப்பாடு பற்றியும் ஆசிரியர் கூறுவதைத் தெளிவுபடுத்துக.

3) பாரதியார் பற்றிய கட்டுரையாசிரியரின் மதிப்பீடு எத்தகையது?

4) ஆசிரியரின் மொழிநடை பற்றிக் கருத்துரை வழங்குக.

(16 புள்ளிகள்)

## பகுதி II

03) வினைசெயல்வகை என்னும் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு

அ) அதிகார விளக்கம்

ஆ) வினைசெய்வானின் சிறப்பு

இ) வினைசெய்வான் கவனிக்க வேண்டியவை

ஈ) வினைசெய்வான் கையாள வேண்டிய உத்திகள்

உ) வள்ளுவரின் உவமைத்திறன் ஆகியவற்றை விளக்குக.

(20 புள்ளிகள்)

04) கம்பராமாயணம் கைகேயி சூழ்வினைப் படலத்தில் தயரதன் வரம் கொடுத்தது முதல் இராமன் பட்டாபிஷேகத்திற்குப் புறப்பட்டது வரையான பகுதியில்

அ) மகளிரின் மனநிலை

ஆ) ஆடவர் மனநிலை

இ) தற்குறிப்பேற்ற அணியைக் கையாளும் கம்பனின் ஆற்றல்

ஈ) சோழர்காலத்துக் காப்பிய பண்புகள் ஆகியவற்றைத் துலக்குக.

(20 புள்ளிகள்)

05) தேம்பாவணி பைதிரம் நீங்கு படலத்தில் குழந்தைநாதனிடம் அனுமதி கேட்டது முதல் மூவரும் நகரை நீக்கியது வரையான பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றைத் துலக்குக.

அ) நகருள் வந்தவை

ஆ) நகரை விட்டுச் சென்றவை

இ) கையாளப்பட்டுள்ள மடக்கணிகள்

ஈ) ஆர ணந்தரு மாண்டகை யாகுலக்
கார ணந்தரு கட்புனல் கண்டிடர்
பூர ணந்தரு மார்பு டைத்தெலா
வார ணந்தரும் வானுறக் கூக்குரல்

1) இச்செய்யுளில் வெளிப்படும் குழந்தைநாதனின் பெருமைகள்

2) கையாளப்பட்டுள்ள அணியும் கையாளப்பட்டுள்ள விதமும்

3) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பம் என்பவற்றை துலக்குக.

(20 புள்ளிகள்)

06) புதுமைப்பித்தனின் சாபவிமோசனம் என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு,

அ) இராமனைப் பற்றிய அகலிகையின் மதிப்பீட்டு நிலைகள்

ஆ) இதிகாசக்கதை மரபைப் புதுமைப்பித்தன் கையாண்ட விதம்

இ) புதுமைப்பித்தனின் மொழிநடையாற்றல் என்பவற்றை துலக்குக.

07) ஏ.ஜே.கனகரத்னாவின் **விண்மீன்களுக்குத் திரும்பி ஏகுதல்** என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு,

அ) ஆசிரியர் கூறவிழையும் முதன்மைச் செய்தி

ஆ) தம்முடைய கருத்தை நிறுவுவதற்கு எரிக் டானிக்கன் முன்வைக்கும் வாதங்கள்

இ) கனகரத்னாவின் மொழிக்கையாட்சி ஆகிவற்றை மதிப்பிடுக.

(20 புள்ளிகள்)

08) பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினை விளக்குக.

அ) **பொங்குதிரை** என்ற பாடலில் வெளிப்படும் உள்ளுறை உவமை

ஆ) **மணிமேகலை** பாடல் பகுதியில் வெளிப்படும் பிரம்மதருமரின் சிறப்புகளும் புத்தபகவானின் சிறப்புக்களும்.

இ) **மன்னவனும் நீயோ** என்ற பாடலில் துலங்கும் புலவனின் தன்மான உணர்வு.

ஈ) **பூக்காரி** கவிதையில் பிச்சமூர்த்தி கூற விழைவது

உ) பத்திரிகை பற்றிப் பாரதிதாசன் கூறியவை.

(20 புள்ளிகள்)

# தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் காலவரையறையின்றி வெளியேற்றம்

(கொழும்பு)

ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் 375 பேர் நேற்றுக்காலை பல்கலைக்கழகத்திலிருந்து காலவரையறையின்றி வெளியேற்றப்பட்டுள்ளனர்.

விடுதி வசதிகள் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகத்தினரின் அறிவுறுத்தல்களுக்கு மாணவர்கள் கட்டுப்படாமையே இந்த நடவடிக்கைக்கு காரணம் என பல்கலைக்கழகத்தின் பதிவாளர் எச்.அப்துல் சத்ரா குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து வெளியேறுமாறு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பீடத்தைத் தவிர்ந்த இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் உடன் அமுலுக்கு வரும் வகையில் குறித்த மாணவர்களுக்கு பல்கலைக்கழக வளாகம் தடை செய்யப்பட்ட பிரதேசமாகவும் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று காலை பல்கலைக்கழக முன்றலில் பயணப்பொதிகளுடன் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் குழுமி நின்றதை அவதானிக்க முடிந்ததாக செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# மரக்கறிச் சந்தை வியாபாரிகள் வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

(வுனியா)

வவுனியா மரக்கறிச் சந்தை வியாபாரிகள் சந்தைக்கு வெளியில் இடம்பெறும் மரக்கறி வியாபாரத்தை தடை செய்யுமாறு கோரி நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நகர சபையினால் மரக்கறி வியாபாரிகளுக்கு தொழில் செய்வதற்கென கட்டடத்தொகுதி அமைக்கப்பட்டு தினமும் நில வாடகையாக 50 ரூபா அறவிடப்பட்டு வரப்படும் நிலையில், சிலர் வேறு தேவைகளுக்கு வழங்கப்பட்ட வர்த்தக நிலையங்களில் மரக்கறி வியாபாரத்தை மேற்கொள்கின்றனர். இதனால் தங்களது தொழில் பாதிப்படைவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, நகரசபை கட்டளைச் சட்டத்தை மதித்து மரக்கறிச் சந்தை உள்ள இடத்தில் இருந்து 500 மீற்றருக்குள் உள்ள அனைத்து மரக்கறிக் கடைகளையும் அகற்றுமாறு கோரி நகரசபைத் தலைவர், பிரதி பொலிஸ் மா அதிபர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோருக்கும் மகஜர் கையளிக்கப்பட்டது.

# அரச பொது ஊழியர் சங்கத்தினர் மாநகர ஆணையாளருடன் சந்திப்பு

(மல்லாவி)

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்க யாழ். மாநகரக்கிளை நிர்வாகத்தினர் அண்மையில் யாழ்.மாநகர சபை ஆணையாளரைச் சந்தித்து கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் சங்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ச.மகேஸ்வரன், செயலாளர் ஜெயசங்கர் மற்றும் சங்கத்தைச் சேர்ந்த மு. சிவசண்முகராசா, தி.ராகவன், அ.ஸ்ரீஸ்காந்தராஜா மற்றும் யாழ்.மாநாகரசபை ஆணையாளர் பிரணவநாதன், நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஜெயானந்தன், முன்னாள் மாநகரசபை உதவி மேயர் றீகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துள்ரயாடலில் சில விடங்களை முன்வைத்து கலந்துரையாடினர். இதன்படி ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குதல் மேற்பார்வையாளர்களான தரம் I, II, III சம்பள ஏற்றம், பணியாளர்களின் சேவை மூப்பு, சீருடைக்கான படிக்கொடுப்பனவு, ஊழியர் பதவி உயர்வு வழங்கல், ஆளணி உருவாக்கம், ஆகிய விடயங்கள் குறித்து நிர்வாகத்தினர் கலந்துரையாடினர்.

இதன்போது மாநகரசபை ஆணையாளர் குறித்த விடயங்கள் தொடர்பாக உரிய தரப்பினருடன் கலந்துரையாடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்தார். (140)



சுன்னாகம் மருதனார்மடம் பிரதேச அபிவிருத்தி வங்கியின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பிரதேச வங்கியின் மாவட்ட முகாமையாளர் எஸ்.கீர்த்திசீலன் கேக் வெட்டுவதையும், சிறுவர் கணக்கில் ஐம்பதாயிரம் ரூபா வைப்புச் செய்த சிறுவருக்கு வங்கியின் உதவி முகாமையாளர் எஸ்.செபமாலைப்பிள்ளை சைக்கிள் ஒன்றை வழங்குவதையும், பிரதேச வங்கியின் முகாமையாளர் எஸ்.லட்சுமணசர்மா உட்பட ஏனையவர்களையும் காணலாம். (08)

# கலைஞர் வட்டத்தின் சிறப்பு பட்டிமன்றம்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி வீரபத்திரர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் இறுதித்தினத்தில் அளவெட்டி மகாஜன சபைக் கலைஞர் வட்டத்தின் சிறப்புப் பட்டிமன்ற நிகழ்வு இடம்பெற்றது.

பட்டிமன்ற நிகழ்வில் 'இன்றைய சூழலில் தமிழர்களின் பண்பாடு தவறவிடப்படுகின்றதா? அல்லது தமிழர்கள் பண்பாடு தக்கவைக்கப்படுகின்றதா?' என்னும் தலைப்பில் விவாதம் இடம்பெற்றது.

நடுவராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் வே.சிவராஜா, அவதானிப்பாளராக மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர் எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோர் கடமையாற்றினர்.

தமிழர் பண்பாடு தவறவிடப்படுகின்றது அணி சார்பில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர் எஸ்.சிவாகரன், ஊர்காவற்றுறை பிரதேச செயலக அபிவிருத்தி அலுவலர் ச.ஜங்கரன், வேலனை பிரதேச செயலக முகாமைத்துவ உதவியாளர் யோ.துஸ்யந்தன் ஆகியோர் வாதிட்டனர்.

தமிழர் பண்பாடு தக்கவைக்கப்படுகின்றது என்ற அணி சார்பில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் மருத்துவ பீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா, சைவப் புலவர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர் எஸ்.ரி.குமரன், கட்டுவன் புலம் மகாவித்தியாலயம் ஆசிரியர் சி.மகேஸ்வ ரன் ஆகியோர் வாதிட்டனர்.

இப்பட்டிமன்ற நிகழ்வினை பல்லாயிரக்கணக்காண அடியவர்கள் கண்டு கழித்தனர்.

# துரித கதியில் பாலம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில், நல்லூருக்கும் முத்திரைச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் பல மாதங்களாக மந்தகதியில் பாலம் புனரமைக்கப்பட்டு வந்தமையால் அப்பகுதி யூடாக பயணம் செய்யும் பாதசாரிகளும், வாகனப் போக்குவரத்தை மேற்கொள்வோரும் மிகுந்த சிரமங்களை எதிர் கொண்டு வந்ததை தினமுரசு கடந்த வாரம் சுட்டிக்காட்டியது.

தற்போது குறிப்பிட்ட பாலம் துரித கதியில் புனரமைப்பு வேலைகள் முடுக்கி விடப்பீட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

வெகு விரைவில் இப்பகுதியால் பயணிகள் சிரமமின்றிப் பயணிக்க முடியும் பொது மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். (சா)

# முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு III ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மாகாண முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II இல் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தோரில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் விபரம் வருமாறு:

பூலோகம் அரவிந்தன் 910061801V, பாஸ்கரன் தாரணி 925331252V, கந்தசாமி சங்கீதா 877543897V, கந்தசாமி லோகநாதன் 850852600V, தர்மிக்கா திசாநாயகம்பிள்ளை 887371750V, ஜெயரட்ணம் மேனகா 925782769V, பாலசுப்பிரமணியம் நிசாந்தன் 793522100V, சந்திரகுமார் சரண்ஜா 896583344V, தனுஷ்கா அனந்தேஸ்வரன் 896582283V, ரட்ணசிங்கம் ஜெயதர்ஷன் 871253722V, பத்மநாதன் ஜெனனி 906363429V, பாலசுப்பிரமணியம் மேகலா 918614362V, நவரட்ணம் ராஜலக்ஸ்மி 896493582V, உலகநாதன் சுகிர்தா 905883879V, அன்ரன் இராஜநாயகம் மேரி வினித்தா 898170624V, தனேஷ்வரன் கௌசிகா 908021347V, சிவநந்தம் மிதுனா 907892069V, கஜேந்திரன் கல்பனா 895200247 V, இராமச்சந்திரன் லலிதினி 867112421V, பாலகிருஷ்ணன் சதீஸ்குமார் 850624208V, ஜெயராஜா சுவர்னா 908014502V, ஜெயரட்ணம் ஜசிந்தா 885171133V, சதாசிவம் பிரியதர்ஷினி 856813266V, புண்ணியமூர்த்தி மயூரன் 901792895V, கனியோடி சாளினி 886382766V, தம்பிராசா ராஜி 847581999V, குமாரசாமி ஜனனி 906342847V பாலேந்திரன் மதுசுதன் 932871670V, ஆனந்தராஜா தேவானந்தா 861092267V, நிடோஜனா சிறிதரன் 938403139V, பகீரதன் சிறிசிவகாமி 836493214V, கனகலிங்கம் ஹரிசங்கர் 913121325V, ஜெயக்குமார் கஜேந்தினி 916101619V, வரதராஜா கஜனி 926752561V, பிரான்சிஸ் சேவியர் கமலிற்ரா சுஜவதி 915853102V, ஆறு முகநாதன் பகீரதன் 833601083V, நிரூபா மயூரதன் 867111980V, இராஜேந்திரம் சர்மிளா 897043238V, பானுமதி பொன்னம்பலம் 845664544V, கிருஸ்ரியன் சண்ஆன் கிறிஸ்ரபெல் 877561488V, வரதராசா ஜெனன் 922 242976V, ரட்னேஸ்வரன் ராஜ் பாரதி 921083084V, பாலச்சந்திரன் பிரணவன் 91033155V, ஜெயந்திரன் நிஜந்தன 87198 2902V, பாரதிதாசன் தனுஷா 937712464V, தர்மகுலசிங்கம விேனோசியா 886382545V, யோகநாதன் பபிதா 897493195V, மதிவதனி விநாயகமூர்த்தி 885643060V, தங்கராசா உசாந் 870743173V, மகேஸ்வரநந்தன் கலைவேணி 878070933V, சுரேக்கா சிவபாத சுந்தரம 89583399 1V, கமலநாதன் ஜெனி 895824852V, துளசி முருகதாஸ் 91729 2663V, புஸ்பராசா தூரிகா 935 101883V, ஜெயந்தி அருளானந்தம் 938271291V, உதயகுமார் ரோகிணி 897651467V, மருதயன் சிறிதரன் 891783264V, அழகதுரை லோஜிதா 866842 116V, இராஜதுரை தர்ஷினி 885152007V, குலராசா விஜிதா 935413230V, பசில் உஷாந்தி 927341360V, சுந்தரராசா தர்ஷிகா 928300692V, சிவஞானவேல் சர்மிளா 927292556V, பரந்தாமன் லிங்கேஸ் 922871825V, சண்முலிங்கம் வனோஜினி 907292746V, சிறீதர் சுகனியா 937762615V, இராஜேந்திரம் பிரியதர்சினி 888381589V, துரைராசா நேசராஜ் 930751103V, சிறீகாந்தன் ஆராதனா 937552793V, சர்குணலிங்கம் நிவேகா 926161334V, தவக்குலரட்ணம் பிரசாந் 930391212V, வரதராசா தர்மிலா 927233924V, சச்சிதானந்தம் ஜீவிதா 888232001V, நாகரட்ணம் வெங்கடேஸ்வரா 890241930V, தவராசா சுதர்சினி 848122840V, ரட்ணசிங்கம் தர்சியா 928051242V, கமலனாதன் தினேஸ் 872202676V, மேரியன் அல்பொன்ஸ் மேரி அனித்தா 936423825V, ஆனந்தஜோதி சுமங்கலி 898491102V, ஜஸ்மிலா கலோக்கணநாதன் 915433081V ,ரட்ணசபாபதி லக் சிகா 865151551V ஜெயகுலராஜா கொலின் 850743002V, சற்குணராசசர்மா சன்மதுரன் 933141551V,கவிதா கம்சன் 888040498V,வைஸ்ணவி கருணா சேகரம் 89761275 5V, சுந்தரம் தர்ணிகா 9275423 23V, செல்வராசா ஜானகௌரி 927542323V, செல்வராசா ஜானகௌரி 936522882V, ராஜரட்ணம் பவித்திரா 897001489V, அரண் குணபாலசிங்கம் சுசீபன் 852862068V, தலோந்தினோனி கிலாஸ் மேரிபிருந்தா 906892170V, பிரேமரட்ணம் சுகந்தினி 927582473V, ராஜரட்ணம் பிரதீபன் 910612271V, வேலும் மயிலும் ரமணன் 871040109V, ஜெயராசா மதிசாந்தினி 927402556V, சிவஜோகம் கிருஸ்ணமணி 737022550V, செல்வராசா அனிதா 908440579V, தங்கராசா ஜெயரதி 936663761V, சாலினி மதனராஜ் 887261695V, பாலகிருஸ்ணன் காவேரி 926811487V, அருமைராசா கோகிலன் 851454489V

(தொடரும்...)

# புத்தகயாவில் குண்டு வைத்த தீவிரவாதி சிக்கினார்?



புத்தகயாவில் குண்டு வைத்த தீவிரவாதி சிக்கியதுடன் மற்றொருவரிடமிருந்து இரண்டு இலட்சம் கள்ளநோட்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன பீகார் மாநிலம் புத்தகயாவில் உள்ள மகா போதி கோவிலில் நேற்று முன்தினம் அதிகாலை அடுத்தடுத்து 9 குண்டுகள் வெடித்தன.

இதில் 2 புத்த துறவிகள் காயம் அடைந்தனர். நாச வேலைக்கு பயன்படுத்தப்பட்ட 9 குண்டுகளும் சக்தி குறைந்தவை என்பதால், கோவிலுக்கு பெரிய அளவில் எந்த சேதமும் ஏற்படவில்லை.9 குண்டுகளும் வெடித்த இடங்களில் தடயவியல், வெடிகுண்டு நிபுணர்கள் சோதனையிட்டனர். அப்போது “டைம்பாம்” வகையைச் சேர்ந்த அந்த வெடி குண்டுகள் சிலிண்டருடன் இணைத்து தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தன.

மத்திய உளவுத்துறை கடந்த ஆண்டில் இருந்தே மகாபோதி கோவிலுக்கு பாகிஸ்தான் தீவிரவாத அமைப்புகளிடம் இருந்து அச்சுறுத்தல் இருப்பதை கூறி எச்சரித்தது. கடந்த மாதமும் உளவுத்துறை பீகார் அரசை உஷார்படுத்தியது. ஆனால் பீகார் மாநில அரசு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யாததால் தீவிரவாதிகள் கைவரிசை காட்டி விட்டனர்.குண்டு வெடிப்புக்கு இதுவரை எந்த தீவிரவாத இயக்கமும் பொறுப்பு ஏற்கவில்லை. ஆனால் இந்த சம்பவத்தில் இந்தியன் முஜாகிதீன்களுக்கு தொடர்பு இருக்கலாம் என்று விசாரணை குழுவினர் முடிவுக்கு வந்துள்ளனர்.

புத்த மதத்தினர் அதிகமாக உள்ள மியான்மர் நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக அடக்கு முறைகள் நடந்து வருகிறது. இதற்கு இந்தியா உதவுவதாக பாகிஸ்தான் தீவிரவாத அமைப்புகள் குற்றம் சாட்டின. எனவே இந்தியாவை பழி வாங்கும் நோக்கத்தில் இந்தியன் முஜாகிதீன் தீவிரவாதிகளை பயன்படுத்தி பாகிஸ்தான் தீவிரவாதிகள் இந்தத் தாக்குதலை நடத்தி இருப்பதாக கருதப்படுகிறது.

கடந்த ஆண்டு (2012) ஒக்ரோபர் மாதம் டில்லி சிறப்பு பொலிஸாரிடம் சையத் மக்பூல், அசத்கான், லங்டே இர்பான், இம்ரான் கான் ஆகிய இந்தியன் முஜாகிதீன் தீவிரவாதிகள் சிக்கினார்கள். அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையின் போது, ஐதராபாத், புத்தகயா, டில்லி, மும்பை ஆகிய 4 இடங்களில் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டு இருப்பது தெரிய வந்தது. இந்த 4 இடங்களிலும் எப்படி தாக்குதல் நடத்த வேண்டும் என்று பாகிஸ்தானில் இருந்து செயற்படும் இந்தியன் முஜாகிதீன் அமைப்பின் நிறுவுனர் ரியாஸ் பக்தல் உத்தரவிட்டு இருப்பதும் தெரியவந்தது.

ரியாஸ் பக்தல் உத்தரவு படி கடந்த பெப்ரவரி மாதம் ஐதராபாத்தில் குண்டு வெடித்தது. அடுத்து புத்தர் கோவிலிலும் குண்டுகள் வெடித்து விட்டன. எனவே முஜாகிதீன்களின் அடுத்த குறி டில்லி, மும்பையாக இருக்கலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.இந்த நிலையில் பீகார் மாநிலம் புத்தகயாவில் உள்ளூர் பொலிஸார் நடத்திய தீவிர தேடுதல் வேட்டையில் சந்தேகப்படும்படி ஒரு நபர் பிடிபட்டார். அந்த நபரிடம் இருந்து ஏராளமான ஆவணங்களும் வரைபடங்களும் சிக்கின.

அவர் இந்தியன் முஜாகிதீன் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்தது. இதையடுத்து பீகார் மாநில பொலிஸார் அவரை இரகசிய இடத்தில் வைத்து விசாரித்து வருகிறார்கள்.இதற்கிடையே மேற்கு வங்க மாநிலம் நடியா மாவட்டத்தில் அன்வர் உசேன் என்பவனை நேற்று முன்தினம் மாலை பொலிஸார் சுற்றி வளைத்து பிடித்தனர். அப்போது அவனிடம் ரூ. 2 இலட்சம் கள்ள ரூபாய் நோட்டுக்கள் இருந்தது. அவர் புத்தர் கோவில் குண்டு வெடிப்புக்கு உதவி இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.



இந்தியாவில் பழையகுற்றாலத்திலும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்ததை தொடர்ந்து வரிசையில் நின்று குளிக்கும் சுற்றுலாப் பயணிகள்.

# கிறிஸ்து பிறப்புக்கு முன் கட்டிய பழமையான கோவில் கண்டு பிடிப்பு



நேபாளத்தில் கிறிஸ்து பிறப்புக்கு முன் கட்டிய மிக பழமையான கோவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது அந்நாட்டு சுற்றுலாத்துறை செயலாளர் தெரிவித்துள்ளார்.நேபாள நாட்டில் உள்ள லும்பினியில்தான் புத்தர் பிறந்தார். அங்கு பேரரசர் அசோகர், கிறிஸ்து பிறப்பதற்கு முன் தூண்களுடன், செங்கல் கொண்டு கட்டிய ஒரு கோவில் தான் மிக பழமையானதாக கருதப்பட்டு வந்தது.இந்த நிலையில் அதைவிட மிகப்பழமையான ஒரு கிராமமும், கோவிலும் புதைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோவில் கிறிஸ்து பிறப்பதற்கு 1300 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது என நம்பப்படுகிறது.இது குறித்து நேபாள சுற்றுலாத்துறை செயலாளர் சுஷில் கிமிரே கூறுகையில்,

“அசோகர் வருவதற்கு முன்பே லும்பினியின் வரலாறு நீளுவதற்கான வலுவான ஆதாரம் கிடைத்துள்ளது.

நேபாள அரசு இந்த சிறப்பான இடத்தை பாதுகாக்க தேவையான நடவடிக்கை எடுக்கும்” எனத் தெரிவித்தார். இந்த கோவில் புத்தர் பிறந்த இடத்தில் இருந்து சில நூறு அடி தொலைவில் 'அமைந் துள்ளது குறிப்பிடத்தக்கது.




# பப்புவா நியூ கினியில் பயங்கர நிலநடுக்கம்




தென்மேற்கு பசிபிக் கடற்பகுதியில் அமைந்துள்ள பப்புவா நியூ குனியில் நேற்றுக் காலை அடுத்தடுத்து இரண்டு முறை நிலநடுக்கம் ஏற்பட்டது. உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை 4.35 மணிக்கு நியூ அயர்லாந்து தீவில் இருந்து 110 கிலோ மீற்றர் தூரத்தில் 7.2 ரிக்டர் அளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. தரைமட்டத்தில் இருந்து 379 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்ட இந்த நிலநடுக்கத்தால் நியூ அயர்லாந்து மற்றும் தரோன் பகுதிகள் கடுமையாக குலுங்கின.

இதனையடுத்து, சுமார் 2 மணி நேரத்திற்கு பிறகு நியூ பிரிட்டன் பகுதியில் உள்ள கண்ட்ரியன் நகரை இரண்டாவது நிலநடுக்கம் தாக்கியது. ரிக்டர் அளவில் 6.8 எனப் பதிவாகிய இந்த நிலநடுக்கம் தரை மட்டத்தில் இருந்து 62 கிலோ மீற்றர் ஆழத்தில் உருவானது என்று அமெரிக்க வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கங்கள் நகரின் ஒதுக்குப்புறமான பகுதிகளில் ஏற்பட்டதால் அதிகமான பொருட்சேதமோ, உயிர்ச்சேதமோ ஏற்படவில்லை. மேலும், சுனாமி எச்சரிக்கையும் விடப்படவில்லை.

நிலநடுக்கங்கள் அடிக்கடி ஏற்படும் 'நெருப்பு வளையம்' பகுதிக்குள் அடங்கியுள்ள நாடுகளில் ஒன்று பப்புவா நியூ குனியா என்பது குறிப்பிடத்தக்கது.

# மதமாற்ற சட்ட மசோதா மலேசியாவில் “வாபஸ்”

பெற்றோரில், ஒருவரது சம்மதத்தோடு மதம் மாற்றம் செய்வதற்கு அனுமதி அளிக்கும் சட்ட மசோதா, “வாபஸ்” பெறப்பட்டு உள்ளது.

மலேசியாவின், ஜிலெபு பகுதியைச் சேர்ந்தவர் தீபா. இந்து மதத்தை சேர்ந்த இவருக்கு, இரண்டு குழந்தைகள் உள்ளனர். கணவரை பிரிந்து வாழும் இவர், தன்னுடைய அனுமதியின்றி, குழந்தைகள், முஸ்லிம் மதத்துக்கு மாற்றப்பட்டதாக, கணவர் மீது புகார் தெரிவித்துள்ளார்.இந்த சம்பவம், மலேசிய இந்துக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

பெற்றோர்களில் ஒருவர் சம்மதித்தால், குழந்தைகளை மதம் மாற்ற வழி வகுக்கும் சட்ட மசோதா கடந்த மாதம், மலேசிய நாடாளுமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.தீபா குடும்பத்தில் ஏற்பட்ட சம்பவத்தை தொடர்ந்து, இந்த சட்ட மசோதாவை வாபஸ் பெற, மலேசிய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

# கருணாநிதியின் தத்துப்பிள்ளை எங்கே?

## இளம் வழுதி கேள்வி

கருணாநிதியின் தத்துப்பிள்ளை, மு.க.மணியை கண்டு பிடிக்க நீதிமன்றில் ஆட்கொணர்வு மனுவை தாக்கல் செய்ய வேண்டும் என, அ.தி.மு.க., செயற்குழு உறுப்பினர் பரிதி இளம்வழுதி தெரிவித்துள்ளார்.அ.தி.மு.க., அரசின், இரண்டு ஆண்டு கால சாதனை விளக்க பொதுக்கூட்டம், அமைச்சர் வளர்மதி தலைமையில் சென்னையில் நடந்தது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட பரிதி இளம்வழுதி கருத்து வெளியிடுகையில்,

தி.மு.க.,வில் இருப்பது கும்பல், அ.தி.மு.க.,வில் இருப்பது கூட்டம். கும்பல் கூடி கலைந்துவிடும் கூட்டம் நிலையாக நிற்கும். நானும் நிலையாக உங்களுடன் நிற்பேன். தமிழக அரசியலில், குழப்பம் ஏற்படும் தேர்தலில் தான், தி.மு.க., எளிதாக வெற்றி பெறும். ஆரோக்கியமாக தேர்தல்நடந்தால் தி.மு.க. வெற்றி பெறாது. 30 ஆண்டுகளாக தி.மு.க.,விற்கு உழைத்தேன், நான் என்ன தவறு செய்தேன். 1991 - 1996ஆம் ஆண்டு தனி எம்.எல்.ஏ.,வாக சட்டசபையில் செயற்பட்டேன். நான் அப்போது, அ.தி.மு.க., வில் சேர்ந்து இருந்தால், உதய சூரியன் சின்னம் முடங்கியிருக்கும், கறுப்பு சிவப்பு கொடியும் கிடைத்திருக்காது.

இலங்கையைச் சேர்ந்த, 15 வயது தமிழ் சிறுவனை, கருணாநிதி தத்து எடுத்தார். கனிமொழிக்கு அண்ணன்கள் உள்ளனர். ஆனால், தம்பி இல்லை அந்தக் குறையை போக்க, மணி என்ற சிறுவனை தத்து எடுப்பதாக கருணாநிதி தெரிவித்தார். மேலும், மு.க., என்று தன் முதற்பெயரையும் போட வைத்தார். அந்த சிறுவன் திடீர் என, காணாமற் போய்விட்டான். மறுபடியும் அவனை கண்டு பிடித்து கொண்டு வந்தனர் மீண்டும் காணாமற் போய்விட் டான்.கட்சிக்காரனாக நான் கேட்கவில்லை, தமிழனாக கேட்கிறேன்? அந்த சிறுவனை பொலிஸார் கண்டுபிடிக்க வேண்டும். நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்ய வேண்டும். இலங்கை தமிழர் பிரச்சினையில், கூடா நட்பு கேடாய் முடியும் என்று கருணாநிதி கூறினார்.தன் மகள் கனிமொழிக்கு, ராஜ்யசபா எம்.பி., பதவி கிடைக்க வேண்டும் என்பதற்காக காங்கிரஸ் கட்சியின் காலில் விழுந்தார். இப்போது அவருடைய தன்மானம் எங்கே போனது என அவர் மேலும் தெரிவித்தார்.

# இளவரசியின் பிரசவ நாளன்று குழந்தைகள் பிறந்தால் பரிசு



பிரிட்டன் இளவரசர் வில்லியமின் மனைவி கேட் மிடில்டனுக்கு இம்மாதத்தின் மத்தியில் முதலாவது குழந்தை பிறக்கவுள்ளது.இதனை முன்னிட்டு பிரிட்டன் மக்களுக்கு சற்று வித்தியாசமான முறையில் பரிசு வழங்கப்படஉள்ளது.

அதாவது, கேட் மிடில்டனின் பிரசவம் என்று நடக்கிறதோ அத்தினத்தில் பிரிட்டனில் குழந்தை பெற்றுக் கொள்பவர்களுக்கு தான் இந்தப் பரிசு வழங்கப்பட உள்ளது.

இவர்களுக்கு அரச வம்சத்தின் முத்திரை பொதித்த வெள்ளி நாணயம் ஒன்று பரிசாக வழங்கப்பட உள்ளது.

2013இல் பிரசவம் நடக்கும் தினம் பொறிக்கப்பட்ட இந்த வெள்ளி நாணயம் நீல நிறப் பையில் ஆண் குழந்தைக்கும், ஊதா நிறப் பையில் பெண் குழந்தைக்கும் வழங்கப்படவுள்ளது.இந்நிலையில் கேட் வில்லியம்ஸ் குழந்தை பெறும் நாளில் குழந்தை பெற்றுக் கொள்பவர்கள் ரோயல் மின்ட்ஸ் இன் ஃபேஸ்புக் பக்கத்தில் குழந்தையின் பிறப்புச் சான்றிதழின் பிரதியை 60 நாட்களுக்குள் அப்லோட் செய்து குறித்த வெள்ளி நாணயத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.இதில் ரோயல் மின்ட்(Royal Mint) 1000 வருடங்களுக்கும் அதிகமாக பிரிட்டனில் நாணயத்தை வடிவமைத்து வருகின்றமை குறிப்பிடதக்கது.

# மாணவர் அடைவு மட்டத்தை உயர்த்த மேலதிகநேர வகுப்புக்கள் ஆரம்பம்

## வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் தகவல்

வலிகாமம் கல்வி வலயத்தில் இருந்து 2013 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணதர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் பெறுபேற்று அடைவு மட்டத்தை அதிகரிக்கும் வகையில் பாடரீதியான செயல் திட்டத்தை வலிகாமம் கல்வி வலயம் மேற்கொண்டுள்ளது. என வலிகாமம் வலயக கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட 63 பாடசாலைகளில் இருந்து இரண்டாயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள்

க.பொ.த. சாதாரணதர பரீட்சைக்கு 2013 ஆம் ஆண்டு தோற்றத் தயாராகி வருகின்றார்கள்.

கடந்த முதலாம் தவணை இடம்பெற்ற பரீட்சையின்போது பாடரீதியாக 40 புள்ளிகளுக்கும் குறைவாக பெற்ற மாணவர்களுக்கான விசேட செயற்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இச்செயற்திட்டத்தில் சுமார் ஆயிரத்தி எண்ணூறு மாணவர்கள் இணைக்கப்பட்டுள்ளார்கள்.

இதன்மூலம் மாணவர்கள் குறைந்தது ஐந்து சித்திகளையாவது பெற்றுகொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எஸ்.திட்டம் என குறிப்பிடப்படும் இந்தத் திட்டத்தில் ஒவ்வொரு பாடத்திற்கும் தற்போது கற்றல் கையேடுகள் தயாரிக்கப்படுகின்றன.

மாணவர்களுக்கு இலகுவாக, கற்றல் கையேடுகள் வழங்கப்படுவதுடன் நாளாந்தம் காலையிலும் மாலையிலும் மேலதிகமாக ஒரு மணிநேர வகுப்புக்கள் நடைபெறவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தொவித்தார்.

# தாதியர் பயிற்சி நெறிக்கு 6025 பேரை சேர்க்க முடிவு

எதிர்வரும் நவம்பர் மாதத்துக்கு முன்னதாக தாதியர் பயிற்சிக்காக 6025 பேர் சேர்க்கப்பட உள்ளதாகவும், இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார். க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானப் பாடங்களில் சித்தியடைந்தோர் இதற்காக சேர்க்கப்படுவர்.

ஒரு தடவைக்கு 3000 பேர் என்ற அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தெரிவு செய்யப்பட்ட 3000 பேரின் பெயர்ப்பட்டியல் இணையத்தளத்தில் ஏற்கனவே இடப்பட்டுள்ளது.

மீதியானோரின் பெயர்ப் பட்டியலையும் இணையத்தளத்தில் இடுமாறு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். தற்போது 28,000 தாதிமார் சேவையில் உள்ளனர். 2005 இல் 14,000 தாதிமாரே இருந்தனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசின் கீழ் இந்த எண்ணிக்கை 28,000 ஆக அதிகரிக்கப்பட்டது. 46,000 பேர்களாக தாதிமார் எண்ணிக்கையை அதிகரிப்பதே அமைச்சின் இலக்காகும்.

# பயங்கரவாதத்தை ஒழிப்பது குறித்து ஜனாதிபதியிடம் கற்றுக்கொள்ளுங்கள்

## இந்தியாவிற்கு கூறும் தேசிய சுதந்திரமுன்னணி

இலங்கை இராணுவத்திடமிருந்தும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் இருந்தும் இந்திய மத்திய அரசாங்கம் பயங்கரவாதத்தை எவ்வாறு ஒழிப்பது தொடர்பில் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகச் செயலாளர் பியசிறி விஜயநாயக்க தெரிவித்தார். பத்தரமுல்லயில் அமைந்துள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

புத்த பெருமான் பிறந்த பூமியான புத்தகாயாவில உள்ள மகாபோதியில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலானது உலகத்தில் உள்ள பௌத்தர்களுக்கே கவலையளிக்கும் செயலாகவுள்ளது. இது உலகெங்கிலும் வாழும் பௌத்தர்களின் பாரம் பரிய உரிமைச் சின்னமாகும். இச்செயலை தேசிய சுதந்திர முன்னணி மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது. இந்திய மத்திய அரசாங்கம் இதற்கு கார ணமாக இருந்தவர்களை உடனடியாக விசாரணை களை மேற்கொண்டு கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்தியாவில் இன மற்றும் மத ரீதியான பல பிரிவினைவாதிகள் உள்ளனர். அதனைவிட அங்கு பல பயங்கரவாத அமைப்புக்கள் தோற்றம் பெற்றுள்ளன. இதனை ஒழிக்க இந்தியா முற்படாவிட்டால் தெற்காசியாவின் பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்படும். இந்நிலையில் இந்தியா - இலங்கைக்கு ஆலோசனைகளை வழங்குவது வேடிக்கையான செயலாகும். பயங்கரவாதத்தை எவ்வாறு ஒழிப்பது குறித்து இலங்கை இராணுவத் திடம் இருந்தும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் இருந்தும் இந்தியா பாடம் கற்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்தியாவின் கவலைகளை கருத்திலெடுக்காது இலங்கை

## கூறுகிறது பி.ரி.ஐ.

இந்தியா கவலை வெளியிட்டிருந்த போதிலும், இலங்கை 13 ஆவது திருத்தச்சட்டத்தை நீர்த்துப்போக வைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் என்று பி.ரி.ஐ. செய்தி வெளியிட்டுள்ளது. புதுடில்லி சந்திப்புகளை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பிய அமைச்சர் பசில் ராஜபக்ஷ வெளியிட்டுள்ள கருத்துகளை வைத்தே, பி.ரி.ஐ. செய்தி நிறுவனம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. நாம் ஒரு பிரேரணையைக் கொண்டுவந்தால், அதை வழக்கமாக விலக்கிக் கொள்ளமாட்டோம். மக்கள் விரும்பினால் தான் அதைத் திரும்பப் பெறுவோம்.

. மக்களின் விருப்பப்படி நாங்கள் அவ்வாறு நடந்துகொண்டதற்கு நிறைய உதாரணங்கள் உள்ளன. இந்த விவகாரத்தில் இந்தியா வலியுறுத்தியதா என்பதில் சில விடயங்கள் நிச்சயமாக இரகசியமாகவே இருக்கவேண்டும். என்று பசில் ராஜபக்ஷ கூறியுள்ளார். எனவே, இந்தியாவின் கவலைகளைப் பொருட்படுத்தாமல், 13 ஆவது திருத்தச்சட்டத்தைப் பலவீனப்படுத்தும் முயற்சிகளை இலங்கை தொடர்ந்து முன்னெடுக்கலாம் என்றும் பி.ரி.ஐ. எதிர்வு கூறியுள்ளது.

## திருடப்பட்ட...

மக்கள் வங்கிக் கிளையில் அடகு வைப்பதற்கு முயன்றபோது முறைப்பாட்டுக்காரரான பெண் கொடுத்த தகவலை அடுத்து இந்த நகைகள் பொலிஸாரினால் மீட்கப்பட்டு சம்பந்தப்பட்ட இரு வரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விருவரும் யாழ். குற்றத்தடுப்புப் பொலிஸாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (பா)

## யுத்தம்...

மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட தமிழ் தேசியக் கூட்டமைப்பு முனைந்திருக்கின்றது. யுத்தம் முடிந்த 4 வருடங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைபபில் இணைந்த 5 கட்சிகளும் தமிழர்களின் தீர்வு இதுதான் என ஏன் கூறவில்லை? ஏன் அதற்கான தீர்வினை முன்வைக்கவில்லை? 5 கட்சிகளும் இணைந்து தமிழ் மக்களின் பிரச்சினைகளை எவ்வாறு முன்னெடுத்து செல்வது என்பதை சிந்திக்க வேண்டும். மத்திய செயற்குழுவிற்கு அப்பால், நாடாளுமன்றக் குழு முக்கிய அங்கம் வகிக்கின்ற காரணத்தினால்தான் இவ்வாறான தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.

அதன்போது, வடக்கு மாகாண சபைத் தேர்தலில் யாரை நிறுத்துவதென மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்க வேண்டும் என அவர் மேலும் கூறினார். (25)

## இன்றைய தினம்...

பங்கேற்பவர்களின் பெயர்கள் அண்மையில் வெளியிடப்பட்டன.

அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ், மைத்திரிபால சிறிசேன, டக்ளஸ் தேவானந்தா, ஏ.எல்.எம்.அதாவுல்லா, டியூ குணசேகர, றிஷாட் பதியுதீன், சமபிக்க ரணவக்க, விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார மற்றும் பிரதியமைச்சர் முத்துசிவலிங்கம் ஆகியோர் அதில் உள்ளடங்கியுள்ளனர்.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. ஆகிய கட்சிகள் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## மாகாணசபை..

வகிப்பதால், அந்த அமைப்பிலிருந்து கண்காணிப்பாளர்களை அழைப்பதில் சிக்கல் இருக்காது என்று தேர்தல்கள் திணைக்களம் கருதுவதாக அவர் மேலும் தெரிவித்தார். ஆனாலும் வேட்புமனுக்கள் தாக்கல் செய்த பின்னரே, தேர்தலில் போட்டியிடவுள்ளகட்சிகளுடனும் சுயேட்சைக் குழுக்களுடனும் அது தொடர்பில் இணக்கம் காணமுடியும் என்றும் எம்.எம்.மொஹமட் தெரிவித்தார். இதே வேளை, எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் தேர்தல் சட்ட விதி மீறல்கள் தொடர்பான முறைப்பாட்டு மையங்களை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தென்பகுதி...

களின் சமாசம் இதற்கான அழைப்பை விடுத்திருந்தது.

வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல், சுருக்கு வலையைப் பயன்படுத்துதல், அனுமதியின்றி கடலட்டை பிடித்தல் போன்ற தொழில் முறைகளை வெளிமாவட்டங்களில் இருந்து வருகின்ற மீனவர்கள் பயன்படுத்தி மீன்பிடிப்பதனால் தமது கடல் வளங்கள் அழிக்கப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால் தமக்கு மீன்பிடி தொழில் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

இந்த விடயம் குறித்து ஏற்கனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் கடற்றொழில் அமைச்சர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ள போதிலும், இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாத காரணத்தினாலேயே தாங்கள் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்க நேர்ந்ததாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் கிறிஸ்தவராஜா அருள் ஜெனிபட் தெரிவித்தார்.

வெளிமாவட்ட மீனவர்களின் வருகையை தடுத்து நிறுத்தவேண்டும். தடைசெய்யப்பட்ட மீன்பிடி தொழில் முறைகளை நிறுத்தவேண்டும். உள்ளூர் மீனவர்கள் எந்தவிதமான வெளியாரின் தலையீடுமின்றி முல்லைத்தீவு கடற்பரப்பில் தொழில் செய்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்ற மூன்று கோரிக்கைளை முன்வைத்து முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் கிறிஸ்தவராஜா அருள் ஜெனிபட் உட்பட மூன்று பேர் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இவர்களுக்கு ஆதரவாக கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களும் பொது மக்களும் இதில் கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர், முல்லைத்தீவு நகர வர்த்தக சங்கத்தினர், கரைதுறைப்பற்று கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தினரும் இந்த உண்ணாவிரதத்திற்கு ஆதரவு வழங்கியிருந்தனர்.

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்தவர்களை ஒரு கட்டத்தில் பொலிஸார் கலைந்து செல்லுமாறு உத்தரவிட்ட போதிலும், அதற்கு உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் உடன்படவில்லை.

ஆயினும் பொலிஸாரின் அனுமதியின்றி பயன்படுத்தப்பட்ட ஒலிபெருக்கியைப் பொலிஸார் தடைசெய்திருந்தனர். எனினும் உண்ணாவிரதம் மாலை வரையில் தொடர்ந்து நடைபெற்றதாக கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ஜெனிபட் தெரிவித்தார்.

## 13 ஆவது...

வேண்டும், இது போன்ற சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று அவரிடம் தெரிவித்ததாக சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார். வடமாகாணத்தில் முறையான, நியாயமான தேர்தல் நடத்துவதாக இருந்தால், வடமாகாணத்தில் இருக்கும் இராணுவமும், இராணுவப் புலனாய்வுப் பிரிவும் இராணுவ முகாம்களுக்குள் போக வேண்டும் என்ற கோரிக்கையும் வைக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அது மட்டுமல்லாமல் தேர்தலைக் கண்காணிக்க சர்வதேச கண்காணிப்பாளர்கள் நிலை நிறுத்தப்படவேண்டும் அந்த விடயத்திலும் இந்தியா அக்கறை காட்டவேண்டும் என்றும் கோரிக்கை வைக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இந்தியா இந்த இரண்டு விடயங்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் கோரிக்கைகளுடன் உடன்படுவதாகவே தங்களுக்கு மேனன் தெரிவித்ததாக சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்தார்.


## திருமுறிகண்டியில்...

தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்றைய தினம் பிற்பகல் 1.45 மணியளவில் கொக்காவிலில் இருந்து இரண்டு இராணுவுத்தினருடன் கிளிநொச்சி நோக்கி வந்த மோட்டார் சைக்கிளும் யாழ்ப்பாணத்திலிருந்து புத்தளம் நோக்கிச் சென்ற டிப்பர் வாகனமும், திருமுறிகண்டி இந்துபுரம் பகுதியில் நேருக்கு நேர் மோதிக்கொண்டன. இதில் சம்பவ இடத்திலேயே இரண்டு இராணுவத்தினரும் உயிரிழந்தனர். இவர்கள் இருவரதும் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. டிப்பர் சாரதி மாங்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (29)

# வடமாகாண தேர்தலுக்கு சர்வதேச கண்காணிப்பாளர்

### தவறின் நெருக்கடி என்கிறது ஐ.தே.க.



(கொழும்பு)

வடக்கு மாகாண சபைத் தேர்தல் மிகவும் முக்கியமான தேர்தலாக சர்வதேசத்தால் அவதானிக்கப்படுகின்றது. இந் நிலையில் வடக்கில் முதலாவதாக சிவில் ஆட்சியை ஏற்படுத்த வேண்டும். பொலிஸ் மற்றும் சுயாதீன ஆணைக் குழுக்களை தேர்தலுக்கு முன் அரசாங்கம் உருவாக்க வேண்டும் சர்வதேச கண்காணிப்பாளர்களை அழைக்கவேண்டும். அவ்வாறில்லாது போனால் அரசாங்கம் எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படும் என ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் பொதுச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இராஜகிரியவில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபை உட்பட மூன்று மாகாண சபைகளின் தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி, குறித்தமாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிட தயாராகவேயுள்ளது. தேர்தல் சுதந்திரமாகவும், நீதியாகவும் இடம்பெறுவதற்கு ஏற்றவகையில் அரசாங்கம் உத்தரவாதம் அளிக்க வேண்டும். அரசாங்கம் தற்போதே தேர்தலுக்கு முன்னோடியாக "தானம்" வழங்க ஆரம்பித்துள்ளது. குறிப்பாக மூக்குக் கண்ணாடி மற்றும் விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் போன்றவற்றை தேர்தல் இடம்பெறவுள்ள மாகாணசபைகளில் வழங்குகின்றது. அரச சொத்துக்கள் பயன்படுத்தப்படுகின்றன.

# நிரந்தர படைத்தளங்கள் டிசம்பருக்குமுன் பூர்த்தி

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நிரந்தரப் படைத்தளங்களை அமைக்கும் பணிகள் அனைத்தும் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவடையும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.


முல்லைத்தீவுப் படைத்தளத்தில் கடந்த சனிக்கிழமை படையினர் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

முன்தயாரிப்பு தொழில்நுட்பங்களைக் கொண்டு நிரந்தர படைத்தளங்களை அமைக்கும் பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவடையும்.

இதன்மூலம் அமைதிக்காலத்தில் படையினர் தேவையான எல்லா வசதிகளுடனும் தமது கடமையை செய்யமுடியும்.

அத்துடன் இலங்கை இராணுவத்தில் உள்ள இரண்டு இலட்சம் பேருக்கும் இந்த ஆண்டு இறுதிக்குள் உலோக கட்டில் வசதிகள் அளிக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# வேலணை நடமாடும் சேவையில் பெருமளவு மக்கள் பயனடைவு



பவ்ரல் அமைப்பின் ஏற்பாட்டில் வேலணை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் திருமதி.மஞ்சுளதேவி சதீஷன் தலைமையில் நேற்றைய தினம் நடைபெற்ற நடமாடும் சேவையில் ஆயிரத்தி ஐநூறுக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு பதிவுகளை மேற்கொண்டனர். இந்த நடமாடும் சேவையினை காலையில் வேலணை பிரதேச சபையின் தவிசாளர் சி.சிவராசா சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைத்தார்.

திருமணப்பதிவு இல்லாத நிலையில் இருப்பவர்கள் நேற்று நடைபெற்ற நடமாடும் சேவையில் இலவசமாக தங்களினது திருமணப் பதிவுகளை பதிவு செய்து கொள்வதற்கு சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அதைபோல பிறப்புச் சான்றிதழ் போன்றவற்றினையும், தேசிய அடையாள அட்டைகள் இல்லாதவர்களுக்கான புதிய தேசிய ஆள் அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

பவ்ரல் அமைப்பின் ஏற்பாட்டில் இந்த நடமாடும் சேவை புங்குடுதீவு சர்வோதய வளாகத்திலும் இன்றையதினம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05,21)

# ஆசிரியர் பயிற்சிநெறிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

இலங்கையிலுள்ள ஆசிரியர் கல்லூரிகளில் ஈராண்டு கால ஆசிரியர் பயிற்சி நெறியை மேற்கொள்வதற்கு தகுதியான ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்களை கல்வி அமைச்சு கோரியுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை ஆசிரியர் ஒருவர் தமது அதிபரூடாக எதிர்வரும் 05.08.2013 இற்கு முன்னராக பதிவுத் தபாலில் கல்விப் பணிப்பாளர் ஆசிரியர் கல்வி நிருவாகக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும், என கல்வியமைச்சின் செயலாளர் எச்.எம்.கோட்டாபய ஜயரத்ன அறிவித்துள்ளார்.

அரச பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்கள் 5.7.2013 இற்கு குறைந்த பட்சம் 3 மாத காலம் ஆசிரிய சேவையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் எனவும், தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் விண்ணப்பதாரிகள் குறைந்தபட்சம் 1 வருட கால ஆசிரிய சேவையையினை பூர்த்தி செய்திருத்தல் காட்டாயமானதாகும், என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பக்கல்வி விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், சமயம், தமிழ் உள்ளிட்ட 22 பாடநெறிகளில் பயில விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

# முஸ்லிம் பெண்களின் நிஜாப் ஆடைக்குத் தடை

### பொதுபலசேனா கோரிக்கை

முஸ்லிம் பெண்களின் கலாசார உடையான 'நிஜாப்' ஆடையை தடை செய்யுமாறு பொதுபல சேனா அமைப்பு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அண்மைய சம்பவங்களின் மூலம் முஸ்லிம் பெண்கள் தலையுடன் அணியும் இந்த நிஜாப்பினால் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

அண்மையில் முஸ்லிம் பாதாள உலகக் குழு உறுப்பினர் ஒருவர் இந்த ஆடையை அணிந்து குற்றச் செயலில் ஈடுபட்டமை அம்பலமாகியிருந்தது. மத ரீதியான விடயம் என்பதனால் பலர் இது குறித்து கேள்வி எழுப்புவதில்லை என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட்ட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். இந்த விடயம் குறித்து அரசாங்கத்தின் உயர் மட்டத்தினருக்கு அறிவிக்க உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# காதலர்களுக்கு இனி தடையேது!

காதலித்துக்கொண்டிருக்கும் இளைஞர், யுவதிகள் எவ்விதத் தடையுமின்றி சந்தித்து கலந்துரையாடுவதற்கும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய, இளைஞர் பரம்பரையை ஊக்குவிக்கும் வகையில, நாடு முழுவதும் பூங்காக்களை அமைக்க இளைஞர் விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்பிரகாரம், மேற்படி அமைச்சினால் நிர்மாணிக்கப்படவுள்ள முதலாவது பூங்கா, மாத்தறை மாவட்டத்தில் நிர்மாணிக்கப் படவுள்ளது. இதற்காக 800 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி பூங்காவில் சிற்றுண்டிச்சாலை, திரையரங்கு, நிகழ்ச்சி மண்டபம், வாசிகசாலை ஆகிய வசதிகளையும் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இளைஞர்களை மையப்படுத்தி நாடு முழுவதும் பூங்காக்களை நிறுவுவதற்கு அரசாங்கம் ஏற்கனவே திட்டமிட்டிருந்த போதிலும் கலாசார ரீதியான பிரச்சினைகள் காரணமாக இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விளக்கமறியலில் சஞ்சீவ பண்டார



(கொழும்பு)

அனைத்து பல்கலைக்கழக மாணவ சம்மேளனத்தின் ஏற்பாட்டாளர் சஞ்சீவ பண்டாரவை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிணை நிபந்தனையை மீறியமை தொடர்பில் விசாரிப்பதற்காக அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டாளர் சஞ்சீவ பண்டாரவை இன்று திங்கட்கிழமை நீதிமன்றில் ஆஜராகுமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் அழைப்பாணை விடுதிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விளக்கமறியல்

தலைமன்னார் கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட 21 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்னம் உத்தரவிட்டார்.

கைதுசெய்யப்பட்ட 21 இந்திய மீனவர்களையும் மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்னம் முன்னிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை ஆஜர்படுத்தியபோதே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த21 இந்திய மீனவர்களையும் கடற்படையினர் கைதுசெய்தனர்.

# விபத்தில் மரணமடைந்தவர் அடையாளம் காணப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

கடந்த 30 ஆம் திகதி நடைபெற்ற விபத்தில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவரது சடலம் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

புத்தூரைச் சேர்ந்த பி.தங்கராசா (வயது - 55) என்பவரின் சடலமே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளது. வவுனியாவிலும், ஆவரங்காளிலும் மாறி மாறி வாழ்ந்துவரும் குறித்த நபர் சம்பவதினம் ஆவரங்கால் சென்றுவிட்டு வவுனியா செல்வதற்காக குறித்த பகுதிக்கு வந்தபோதே பாரவூர்தியுடன் மோதுண்டு தலையில் படுகாயமடைந்த நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் மறுநாள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவதினத்தை அடுத்து உயிரிழந்த அவரது புகைப்படம் அடையாளம் காண்பதற்காக தினமுரசு பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்தது. இதனை அடுத்தே அவரது சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. (பா)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 யூலை 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.